# கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



அம்மாவுக்கு ஜே!

KALKI • 16.11.2008 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



தரு பெயர்ச்சிப் பலன்கள்!

வாரத் தொடர்ச்சி...

## இலங்கைப் பிரச்னை :

# உண்மை நிலவரம் என்ன?

– யாழ்ப்பாணம் எம்.பி. பேசுகிறார்

# DR. KAMAKSHI MEMORIAL HOSPITAL



Dr. T.G. Govindarajan
President - Founder -
Medical Director

தமிழகத்தில் இதுவே முதல் முறை

## டாக்டர் காமாட்சி நினைவு மருத்துவமனை

## கேன்சர் இன்ஸ்டிடியூட் (WIA) – உடன்

இணைந்து பெருமையுடன் அறிமுகம் செய்துள்ளது

## தமிழ்நாட்டின் முதல் PET-CT



Discovery VCT64 SLICE PET-CT SCAN
Installed at CANCER INSTITUTE (WIA)
Canal Bank Road Gandhi Nagar, Adyar
Chennai - 20
Cell : 93814 36899
93814 36896

10% Special Discount On Sunday for Master & Executive Health Check-up

## தமிழ் நாட்டில் முதல் PET CT Scan

**இந்தியாவில் 4, 5 இடங்களில் மட்டுமே உள்ள இந்த ஸ்கேனிங் கருவியின் சிறப்பம்சங்கள்:**


* கேன்சரை அறிகிறது. * கேன்சர் பரவியுள்ள மற்றும் முற்றியுள்ள நிலவரத்தை அறிகிறது. * கேன்சர் சிகிச்சைகான மருத்துவ திட்டமிடலுக்கு உதவுகிறது. * சிகிச்சைக்குபின் கேன்சர் மீண்டும் தோன்றுவதை அறிகிறது. * இதய தசைகளுக்கான இரத்த ஓட்டத்தை அறிகிறது. * மாரடைப்பு இதயத் தசைகளின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கத்தின் விளைவுகளை அறிகிறது. * ஆஞ்சியோபிளாஸ்டி மற்றும் கரோனரி ஆர்டெரி பைபாஸ் சர்ஜரிகளின் மூலம் குணப்படுத்த இயலும் இதயத்தின் தசைப்பகுதிகளை அறிகிறது. (மையோ கார்டியல் பெரிஃபியூசன் ஸ்கேன் உதவியுடன்). * மனக்குழப்பம், நினைவிழத்தல், டியூமர் முதலான மூளையின் சீர்ற்ற தன்மையைக் கணிப்பதுடன் மத்திய நரம்புத் தொகுப்பில் உள்ள பாதிப்புகளையும் அறிகிறது. * நோயாளியின் மூளை மற்றும் இதயத்தின் செயல்பாடுகளை இயல்பான மனிதனோடு ஒப்பிட்டு பார்க்க உதவுகிறது.

## DR. KAMAKSHI MEMORIAL HOSPITAL - SPECIALITIES AT A GLANCE

• Intensive Care Unit Cardiology & Cardio Thoracic Surgery • Neurology & Neuro Surgery • Trauma Care & Orthopaedics • Obstetrics & Gynaecology • ENT Surgery • Dermato Cosmetology • Pulmonology • Dentistry and Oral & Maxillofacial Surgery • Paediatrics • Gastroenterology • Transplant Surgery • Oncology • Transfusion Medicine • Nephrology • Urology • Vascular Surgery

இலவச ஆலோசனைக்கு: எஸ்.சுபாஷிணி - 93451 20265, 93810 30712

#1, Radial Road, Pallikaranai, Chennai - 600 100.
Tel : +91-44-22469200 (30 Lines), 66300300 (30 Lines), Fax : 22463282
E-mail : info@drkamakshimemorialhospital.org
Website : www.drkamakshimemorialhospital.org



# அறுவை சிகிச்சை இல்லாத பை-பாஸ் சிகிச்சை

உங்களுக்கு நெஞ்சு வலி இருந்தால்,
பை-பாஸ் அறுவை சிகிச்சை அல்லது ஏஞ்சியோபிளாஸ்டி
செய்யக்கூடிய சூழ்நிலையில் நீங்கள் இருந்தால்...

## அறுவை சிகிச்சையற்ற ஓர் மாற்று வழியை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

**R. Karunanithi, Age:53, Mobile: 94427 04042**
**Tamilnadu State Transport Corporation, Madurai.**



முதற்கண் என் மகிழ்ச்சி கலந்த நன்றியை நியோமெட் மருத்துவர் டாக்டர் சிவபாலன் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். நான் வேகமாக நடக்கும் போதும், கடினமாக வேலைகள் செய்யும் போதும் மார்பு பகுதியில் ஓர் அசாதாரணமான ஒரு உணர்வு ஏற்படுவதை உணர்ந்தேன். என் இருதயத்தில் அடைப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு பைபாஸ் சர்ஜரி பரிந்துரைக்கப்பட்டது. நியோமெட் மருத்துவமனையில் 3 மாதங்கள் சிகிச்சைக்கு பிறகு எனக்கு அடைப்புகள் நீங்கி ஒரு புதிய சக்தி கிடைத்தது போல் உணர்ந்தேன். சிகிச்சை முடிந்து 3 வருடங்கள் ஆன பிறகும் இன்னும் நான் என் வேலைகளை நன்றாக செய்ய முடிகிறது.



**S.Tamil Maran, Age: 57, Dharmapuri. Mobile: 94428 52687**

எனக்கு ஜூலை 2006-ல் எதிர்பாராத விதமாக Heart Attack என்ற இதய அடைப்பு ஏற்பட்டது. மருத்துவர்கள் பைபாஸ் சிகிச்சை செய்தால்தான் உடல்நலம் பெறும் என்று கூறினார்கள். 90% இரண்டு அடைப்பு உள்ளது என்றும் எட்டு நாட்களில் பைபாஸ் சர்ஜரி செய்யவேண்டும் இல்லையெனில் ஆபத்து நிலையை எதிர்கொள்ள வேண்டியதிருக்கும் என்று கூறினார்கள். இந்த சூழ்நிலையில் அறுவையில்லா பைபாஸ் சிகிச்சை செய்துவரும் நியோமெட் மருத்துவமனையை பற்றி நண்பர்கள் மூலம் அறிந்து டாக்டர் சிவபாலன் அவர்களை சந்தித்தேன். அவரது சிறப்பான சிகிச்சையால் சீர்குலைந்த என் இதயத்தை சீராக்கி இரண்டரை மாதங்கள் சிறப்பான சிகிச்சை அளித்தார்கள். Insulin ஊசி பயன்படுத்திய எனக்கு ஊசியை அகற்றி மாத்திரைகள் மூலம் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தி சிகிச்சை அளித்தார்கள். தற்போது எந்த குறைபாடும் எந்தவித வலியும் இல்லாமல் நன்றாக உள்ளேன். டாக்டரின் ஆலோசனைப்படி உணவு கட்டுப்பாடு உடற்பயிற்சி, யோகா மூலம் சிறப்பாக செயல்படுவதால் இதய நோய்க்கு பைபை சொல்லிவிட்டேன். டாக்டரின் அன்பான உபசரிப்பு, என் தன்னம்பிக்கை கிடைத்த வெற்றியாக கருதுகிறேன்.

**S.N. Krishnamoorthy, Businessman, Age: 64, Chennai. Mobile: 97104 50182**



எனக்கு பிப்ரவரி - 17, 2005-ல் மாரடைப்பு ஏற்பட்டது. ஆஞ்சியோகிராமில் மூன்று இடங்களில் 80% - 90% அடைப்புகள் தெரிய வந்து அறுவை சிகிச்சை பரிந்துரைக்கப்பட்டது. எனக்கு பைபாஸ் சர்ஜரி விருப்பமில்லாததால் அறுவையில்லாமல் பைபாஸ் சிகிச்சை செய்து வரும் நியோமெட் மருத்துவமனையில் இரண்டரை மாதம் E.E.C.P மற்றும் Artery Clearance Therapy எடுத்துக் கொண்டேன். அதன் பிறகு செய்த TMT - Negative என்று வந்தது. கார்டியோகிராம் பரிசோதனையிலும் இருதயத்திற்கு குறைபாடு இல்லாமல் இரத்தம் செல்வதும் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த அற்புதமான சிகிச்சை முறையில் எனக்கு புதுவாழ்க்கைத் தந்த நியோமெட் மருத்துவமனையின் தலைமை டாக்டருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த எளிமையான சிகிச்சை முறையைப் பயன்படுத்தி என் போன்ற பல இதய நோயாளிகள் பயன்பெறட்டும் என்று வாழ்த்துகிறேன்.

**NEOMED HOSPITAL**
CARE FOR BETTER LIVING

**CHENNAI :** 2181, L-Block, 12th Main Road, Anna Nagar, Chennai - 600 040. Ph: 044-26201147, 26200882

**MADURAI :** 11, Lakeview Road, Opp.Sundaram Theatre, K.K.Nagar, Madurai - 625 020. Ph: 0452-2581414, 2581515

**SALEM :** 127/1, 'Varalakshmi Towers', Gandhi Road, Salem - 636 007. Ph: 0427-2311818, 2311819

**TRICHY :** 52, General Bazaar Street, (Off. Pattabiraman Road, & KMC Hospital), Thennur, Trichy-17. Ph: 0431-2791051 / 2791052

www.neomedhospitals.com

*Timing: Weekdays 9 am to 6 pm. Sunday holiday.*



# மீ.கி. வீரமணியின்

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, அவரது அம்மாவின் பெயரையும் இனிஷியலாகச் சேர்த்துக்கொண்டு மீ.கி. வீரமணி ஆகியிருக்கிறார்.

**ஏன் இந்தத் திடீர் மாற்றம்?**

''1993ம் வருடம் நாகப்பட்டினத்தில் நடந்த எங்கள் மகளிர் விடுதலை மாநாட்டில் 'குழந்தையின் பெயருக்கு முன்னால், அப்பாவின் பெயரின் முதலெழுத்தைப் போலவே அம்மா பெயரின் முதலெழுத்தையும் இனிஷியலாகப் போட வேண்டும் என்று சட்டம் கொண்டு வர வேண்டும்' என தீர்மானமே போட்டுள்ளோம். அந்த வகையில் எங்கள் இயக்கத்தவர்கள் பலர் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். நானும் அதுபோல செயல்பட முனைந்தபோதெல்லாம் தோழர்கள், 'இப்படியே உங்கள் பெயர் பிரபலமாகி மக்கள் மனத்தில் பதிந்துவிட்டது. மேலும் புதிய இனிஷியல் உங்கள் பெயருடன் சேர்ந்தால், நமது இயக்க அமைப்புகள் தொடர்பாக சட்டரீதியான மாற்றங்களும் தேவைப்படும்' என்று தள்ளிப் போட்டார்கள். ஆனால், அவர்கள் சொன்னதை என் மனது ஏற்கவில்லை. எனவேதான் சமீபத்தில் மகளிர் மாநாட்டில் யாரையும் கலக்காமல் மேடையில் அறிவித்துவிட்டேன். ஒருவரது வாழ்க்கையில் தாய்க்கு முதல் மரியாதை கொடுக்கப்பட வேண்டும். அன்னையின் பெயரை முதல் இனிஷியலாகப் போடும்போது பெண்மைக்கு உரிய கௌரவமும், சம பங்களிப்பும் வழங்கப்படுகின்றன. இந்த வகையில் வழிகாட்டியாக இருப்பவர் மறைந்த இசைப் பேரரசி எம்.எஸ். சுப்புலட்சுமி.''

**உங்கள் அம்மாவைப் பற்றி...?**

''அந்தவகையில் இழப்பைச் சந்தித்தவன் நான். எனக்கு ஒரு வயதாகும்போதே என் தாய் மீனாட்சி காலமாகிவிட்டார். அதன் பிறகு தந்தை கிருஷ்ணசாமி, பட்டம்மா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். எனது சிற்றன்னைதான் அன்பையும், பாசத்தையும் பொழிந்து என்னை வளர்த்தவர். என் தாயார் இறந்தவுடன், அதே நிலையில் ஒரு புகைப்படம் எடுத்து வைத்திருந்தார்கள். எனவே எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து, அந்தப் புகைப்படமே அம்மாவைப் பற்றிய உருவகத்தை என் மனத்தில் பதித்து வைத்திருக்கிறது.''

**இனிஷியல் போட்டால் போதுமா?**

''அம்மாவின் பெயரை இனிஷியலாகப் போட்டுக்கொண்டால் மட்டுமே பெண்

களுக்கு உரிய உரிமையும், சமத்துவமும் கொடுத்ததாக ஆகிவிடாது. இது ஒரு சிந்தனை. பிரசாரம் மூலம் பரப்பப்பட வேண்டியது. நமது நாட்டில் பெண்களுக்கு வாழும் உரிமை இருக்கிறதா என்ற கேள்விக்குள் நுழையும் முன், பிறக்கும் உரிமை இருக்கிறதா என்று பார்ப்போம். ஏனென்றால் மக்கள் இன்னமும் அறியாமையிலும், பிற்போக்கிலும் வாழ்கிறார்கள். பெண் கரு, சிசுக் கொலைகள் நடக்கின்றன. பிரசாரம் ஒன்றே மாற்றங்களைக் கொண்டு வரும். சட்டம் பின்னால் தானாக வரும்.''

**ஜெ.** போட்டாரே ஆணை...?

''ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது போட்ட ஆணை வரவேற்கப்படக்கூடியதே என்றாலும், அதில் இன்னும் கொஞ்சம் தெளிவு தேவை. அந்த ஆணையில், 'விரும்பினால் தாயார் பெயரை இனிஷியலாகப் போட்டுக்கொள்ளலாம்' என்று சாய்ஸ் கொடுத்திருக்கிறார்கள். கலைஞர் இந்த ஆணையை மறுபரிசீலனை செய்து, உறுதியான வகையில் சட்டம் கொண்டு வர வேண்டும்.''

# அம்மா

**பெ**ண்ணியம், சுதந்திரம் என்ற பெயரில் கலாசார சீர்கேடுகள் மலிகின்றனவே. திருமணம் என்ற பந்தம் இல்லாமல் சேர்ந்து வாழ்ந்தாலே உரிய அங்கீகாரம் தரப்படும் என்று மகாராஷ்டிரா அரசு சட்டம் கொண்டு வருவதாகச் சொல்கிறதே?

''பெரியார் விரும்பிய பெண் உரிமை என்பது ஆணைப் போலவே பெண்ணுக்கும் வீரம், வன்மை, கோபம், ஆளும்திறன் உண்டென்பதை ஆண் மக்கள் ஒப்புக்கொள்ளவேண்டும் என்பதே ஆகும். அதற்காக ஒழுக்கக்கேட்டை வலியுறுத்தினார் என்று தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள். காலத்துக்கேற்றபடி நிகழும் மாற்றங்கள் சிலருக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். ஆனால் அது காலத்தின் கட்டாயம்.''

**- கௌசி**

படம்: **ராஜன்**


**கல்கி**

**பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்**
அச்சிட்டு வெளியிடுபவர்:
**லக்ஷ்மி நடராஜன்**

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்: **சீதா ரவி**

உதவி ஆசிரியர்: **கதிர்பாரதி**

வடிவமைப்பு:
**எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்**

தொலைபேசி:
**044 - 4343 8888 (30 lines)**

தொலைநகல்: **044 - 4343 8899**

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு:
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு:
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு:
subscription@kalkiweekly.com
பிற தகவல்கள்:
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி:
www.kalkionline.com
சந்தா விவரம் - உள்நாடு:
**ஒரு வருடம் : ரூ. 500/-**
**ஆறு மாதம் : ரூ. 270/-**
வெளிநாடு (விமானத்தபால்):
**ஒரு வருடம் : ரூ. 3,800/-**

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

# ஜோதிகா அனுப்பிய

**ராதிகா**

நடிகை ஸ்ரீப்ரியா தொலைக்காட்சித் தொடர் ஒன்றை எடுத்துக்கொண்டிருந்தார். ஒருநாள் ''என்னோட சீரியல்ல நடிக்கிறியா?'' என்று கேட்டார். திடீரென்று என்னிடம் இப்படிக் கேட்பார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அப்போது நான் நிறைய படங்களில் நடிப்பதற்கு கால்ஷீட் கொடுத்திருந்தேன்.

ஆனால் ஸ்ரீப்ரியா கேட்டபோது என்னால் மறுக்க முடியவில்லை. ஒரு சீரியலில் நடித்தால்தான் என்ன குறைந்துவிடப் போகிறது என்று எனக்குத் தோன்றியது. அதுவுமில்லாமல் அது ஒரு புது அனுபவம் இல்லையா? 'சரி' என்று சொல்லிவிட்டேன். என்னைச் சுற்றியிருந்த எல்லோரும் திட்டினார்கள்.

'ஐயோ! சினிமாவுல நடிச்சுக்கிட்டு இருக்கும்போது யாராவது சீரியல்ல நடிக்கறதுக்கு ஒத்துப்பாங்களா?'

'சினிமாவுலருந்து திடீர்னு சீரியல்ல நடிக்கப் போனா, உங்களுக்கு மார்க்கெட் இல்லைன்னு எல்லாரும் நினைச்சிடுவாங்க.'

இப்படி என்னென்னமோ சொன்னார்கள். ஆனால், நான் என் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை.



அப்படி என்ன தீண்டத்தகாதா தொலைக்காட்சித் தொடர்? மற்றவர்கள் சொல்வதையெல்லாம் கேட்கக் கேட்க எனக்கு தொலைக் காட்சித் தொடர் மேல் ஆசை அதிகமானதே தவிர குறையவில்லை. அந்தச் சமயத்தில்தான் எனக்கு அந்த எண்ணம் தோன்றியது.



'சொந்தமாக ஒரு புரொடக்ஷன் கம்பெனியை உருவாக்க வேண்டும். ஒரு தொலைக்காட்சித் தொடர் எடுக்கவேண்டும்.' இந்த எண்ணத்தில் உருவானதுதான் 'ராடன் மீடியா ஒர்க்ஸ் இந்தியா லிமிடெட்.'

சில சமயங்களில் எனக்குக்

கோபமாக வரத்தான் செய்கிறது. 'எதுக்குடா இப்படி போராடிக்கிட்டு இருக்கேன்' என்று. ஆனால், அடுத்தகணம் அந்த எண்ணம் காணாமல் போய்விடுகிறது. நிறைய பாசிடிவ்வான விஷயங்களைப் படித்திருப்பதால், கழுத்தைப் பிடித்து நெறிக்கிறது போன்ற பிரச்னைகள் வரும்போது கூட, நான் அதை எளிதாகத் தாண்டி வரமுடிகிறது.

உதாரணத்துக்கு ஒரு புத்தகத்தைச் சொன்னால் உங்களுக்குப் புரியும். 'சீக்ரட்ஸ்' என்ற புகழ்பெற்ற புத்தகம் அது. ராண்டா பிரைன் (Rhonda Bryne) என்கிற எழுத்தாளர் எழுதியது. அதை நான் நிறைய தடவை வாசித்திருக்கிறேன். நிறைய பாஸிட்டிவ் டைமென்ஷன்களை, விஷயங்களை அது எனக்குக் கற்றுக் கொடுத்தது. அதில் சொல்லப்பட்டிருக்கும் பெரும்பாலானவற்றை நான் இன்றுவரை கடைப்பிடிக்கிறேன்.

பெரிய சிக்கல் ஏதாவது வரும்போது யோசிப்பேன். நம் உடம்பில் என்னென்ன உறுப்புகள் இருக்கின்றன? எப்படி இருக்கின்றன? பார்வையில்லாமல் இருட்டில் இருக்கும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். காது கேட்காதவர்கள் இருக்கிறார்கள். உடல் நன்றாக இருந்தாலும் நிறைய பேருக்குப் பொருத்தமான வேலை அமையவில்லை. பணம் இருந்தும் மகிழ்ச்சியைத் தொலைத்தவர்கள் அதிகம். எனக்கு எல்லாமே நன்றாகத்தானே இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேல் வேலை என்று ஒன்று இருக்கிறது. ஆக, என்ன நடந்தாலும் ஒரு கை பார்த்துவிடலாம் என்று இருந்துவிடுவேன். என் தனிப்பட்ட வாழ்க்கையானாலும் வேலையானாலும் சிக்கல்கள் வரும்போதெல்லாம் நான் இப்படித்தான் யோசிப்பேன்.

# எஸ்.எம்.எஸ்.!

சமீபத்தில் நடிகை ஜோதிகா எனக்கு ஒரு எஸ்.எம்.எஸ். அனுப்பியிருந்தார். 'நான் உங்க விசிறியாயிட்டேன்' என்று. அதுவும் என் தொலைக்காட்சித் தொடரைப் பார்த்துவிட்டு. 'கொஞ்சம் வித்தியாசமானவள்' என்கிற அங்கீகாரம் இன்று எனக்குக் கிடைத்திருக்கிறது.

இது எனக்குக் கைகூடியதற்குக் காரணம், எப்போதும் 'மகிழ்ச்சியான சூழ்நிலையிலேயே இருக்க வேண்டும்' என்று ஆசைப்படுகிற என் சுபாவம்தான்.

ஒரு படத்தில் நான்தான் ஹீரோயின் என்று என்னை புக் பண்ணுவார்கள். திடீரென்று என்னை மாற்றிவிட்டு வேறொரு நடிகையைப் போடுவார்கள். இதைக் கேள்விப்பட்டு யாராவது, 'ராதிகாவா? இனிமே இவங்க கேரக்டர் ஆர்ட்டிஸ்டுதான். கிளாமரா எல்லாம் பண்ண முடியாது' என்று என் காதுபடவே பேசுவார்கள். நான் கண்டுகொள்ளவே மாட்டேன். மற்றவர்கள் சொல்வதற்கெல்லாம் பயந்துகொண்டிருந்தால், என்னால் 'ஜீன்ஸ்' படத்தில் அப்படி ஒரு வித்தியாசமான பாத்திரத்தில் நடித்திருக்கவே முடியாது.



**ரயில் ராதிகா to ராடன் ராதிகா**



* ஸ்ரீப்ரியா

எதையும் சகஜமாக எடுத்துக்கொள்ளும் இந்த மனப்பான்மையுடன் என் பாசிட்டிவ் அப்ரோச்சும்தான், தனியாக ஒரு புரொடக்ஷன் ஹவுஸை ஆரம்பிக்கத் தூண்டுகோலாக இருந்தன.

ஒரு தொலைக்காட்சித் தொடர் எடுக்கவேண்டும் என்று முடிவு செய்ததும் சென்னையில் இருந்த எல்லா சேனல்களுக்கும் படையெடுப்பதுதான் என் வேலையாக இருந்தது.

சம்பந்தப்பட்ட நபரைப் பார்ப்பதற்கு அனுமதி கிடைக்கும் வரை காத்திருப்பேன். காத்திருக்கும் நேரத்தில் புத்தகம் படிப்பேன்.

சன் டி.வி. சேனலில் தலைகீழாக நின்று

* கலாநிதி மாறன்



கெஞ்சியிருக்கிறேன். கலாநிதி மாறன் சார் சொல்லுவார் : 'உன்னால மெகா எல்லாம் பண்ண முடியாது. முதல்ல வீக்லி சீரியல் ஏதாவது பண்ணு!' என்று. அவருக்கு நான் ஒரு மெகா சீரியல் எடுப்பேன் என்கிற நம்பிக்கை அப்போது வரவில்லை. 'ஸ்லாட் கொடுக்கிறேன் கொடுக்கிறேன்' என்று சொன்னாரே தவிர என்ன காரணமோ, அதுவும் தள்ளிப் போய்க்கொண்டே இருந்தது.

எனக்கு முதன் முதலில் வாய்ப்புக் கொடுத்தது ஜெயா டி.வி.தான். அப்போது அதற்கு ஜே.ஜே. டி.வி. என்று பெயர். ஒரு தொலைக்காட்சித் தொடர் எடுத்தேன். ஒரு வருடம் வரைக்கும் வந்தது. அப்போதுதான் தெலுங்கு டி.வி.யான ஈ டி.வி.யில் இருந்து அழைப்பு வந்தது. மெகா சீரியலுக்கான வாய்ப்பு. உடனே ஹைதராபாத்துக்கு ஓடினேன்.

ஹைதராபாத் என்னை அரவணைத்துக் கொண்டது. என் கதையைக் கேட்டு நம்பி ஸ்லாட் கொடுத்தார்கள். 'இதி கதா காது' என்ற தொலைக்காட்சித் தொடர். தமிழில் 'இது கதையல்ல!'. அந்த சீரியல் அங்கே சூப்பர் ஹிட்.

தொடர் வெற்றி பெற்றுவிட்டது. ஆனால், நான் பல பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நான் சிங்கிள் மதர். வீட்டையும் குழந்தையையும் கவனித்துக் கொண்டு அலுவலகத்தையும் பார்த்துக் கொள்ளவேண்டியிருந்தது. சதா ஓடிக் கொண்டே இருக்கவேண்டிய பிழைப்பு. மிகச் சிறிய அலுவலகம். உதவுவதற்கு அதிகம் ஆட்கள் இல்லை. வழக்கம் போல ஏமாற்றம் - பணம், புரொடக்ஷன், அனைத்திலும்.


அந்தச் சமயத்தில்தான் சன் டி.வி.யில் இருந்து அழைப்பு வந்தது. கலாநிதி மாறன் சாரே கூப்பிட்டனுப்பினார்!

> "உன்னால மெகா எல்லாம் பண்ண முடியாது. முதல்ல வீக்லி சீரியல் ஏதாவது பண்ணு!"

**(ரயில் வரும்)**

எழுத்து வடிவம் :
**பாலு சத்யா**

ஸ்ரீ அருணாசலேஸ்வரர் துணை



கார்த்திகை மஹோத்ஸவ

18ம் ஆண்டு

# வேதபாராயணம்

திருவண்ணாமலை



**ஸா**க்ஷாத் பரமேஸ்வரன் ஜோதிஸ்வரூபமாய் எந்த மலையில் இருந்து கொண்டு சகல ஜீவன்களையும் ரக்ஷிக்கின்றானோ எந்த ஸர்வேஸ்வரனை ஸ்மரித்தாலே 'ஸ்மரணாத் அருணாசலம்' என்ற வாக்கியத்திற்கேற்ப முக்தியை ஜீவன்கள் பெறுகின்றனவோ அப்படிப்பட்ட மகா புண்யமான திருவண்ணாமலை க்ஷேத்திரத்தில் கார்த்திகை மஹா தீபத் திருநாளையொட்டி ஜோதி ஸ்வரூபமாய் விளங்கும் ஸாக்ஷாத் பரமேஸ்வரனை வேதவித்துக்கள் பகவானுக்கே உகந்ததான ரிக்வேதம், யஜுர் வேதம், ஸாமவேதம், அதர்வண வேத பாராயணம் நடத்தி துதிக்கிறார்கள்.

கார்த்திகை மாதம் 17ந் தேதி (02.12.2008) செவ்வாய்க்கிழமை முதல் கார்த்திகை மாதம் 26ந் தேதி (11.12.2008) வரை காலை 8.00 மணி முதல் 11.00 மணி வரை ஸ்ரீ அருணாசலேசுவரர் ஆலயத்திலும் மதியம் 3.30 மணி முதல் 5.30 மணி வரை, பின்னர் மாலை 6.30 மணி முதல் 8.00 மணி வரை ஸ்ரீ சுந்தரேசானந்தா சபையிலும் பாராயணம் நடக்க இருப்பதால் பக்தர்கள் இந்த மாபெரும் யக்ஞத்தில் கலந்துகொண்டு எல்லாவிதத்திலும் உதவிகளை செய்து, இறையருளைப் பெறுவதுடன் வேத வித்துக்களின் பரிபூரண ஆசீர்வாதத்துக்குப் பாத்திரராகும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒருநாள் சமாராதனை செலவு ரூ.2,500/-**

**வேஷ்டி 1-க்கு ரூ.500/-    1 நபர் சம்பாவனை ரூ.5,000/-**

M.O. அல்லது D.D. அனுப்ப வேண்டிய முகவரி

**ஸ்ரீ A.சந்தானம் அய்யர்,** பொருளாளர், வேத பாராயண கமிட்டி,
மூர்த்தி காபி ஒர்க்ஸ், 49, தேரடி வீதி, திருவண்ணாமலை - 606 601
தொலைபேசி : 04175 - 222719, 253166



# இந்தியாவை ஏமாற்றுகிறார்

**"இந்தியா தலையிட்டு பிரச்னையைத் தீர்க்காவிட்டால் இலங்கையில் தமிழ் இனம் பூண்டோடு அழிக்கப்பட்டுவிடும்" என்கிறார் இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியப் பிரமுகருமாகிய மாவை சோ. சேனாதிராஜா.**

"இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து தமிழர்கள் இரண்டாம்தர குடிமக்களாகவே நடத்தப்பட்டு வருகின்றனர். இதை எதிர்த்துத்தான் 1949ல் தமிழரசு கட்சியைத் துவக்கினார் தந்தை செல்வா. இரண்டு கோடி இலங்கை மக்கள் தொகையில் முப்பது சதவிகிதமாக இருக்கும் தமிழினம், இன்று சொந்த நாட்டிலும், வெளிநாடுகளிலும் அகதிகளாக அவதியுற்றுக் கொண்டிருக்கிறது. 1956ல் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்று ஆணை போடப்பட்டது. இதன் காரணமாக தமிழர்கள் வேலைவாய்ப்பில் வஞ்சிக்கப்பட்டனர். 1958ல், கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் நுழைவுத் தேர்வு எழுத முடியாமல் தமிழ் மாணவர்கள் தவித்தனர். 1960ல், நீதிமன்ற மொழியாக சிங்களம் மட்டுமே இருக்கும் என்று சொன்னது இலங்கை அரசு. 1970ல் தமிழ் மாணவர்கள் உயர்கல்வியில் சேர வேண்டும் என்றால், சிங்கள மாணவர்களைவிட அதிகம் மதிப்பெண்கள் பெறவேண்டும் என்று சொல்லி மேலும் வஞ்சிக்கப்பட்டது தமிழ் இனம். வேறெந்த நாட்டிலும் இல்லாத அநீதி இது!

1972 மற்றும் 1978ல் அமுல் செய்யப்பட்ட இலங்கை அரசின் புதிய அரசியல் சட்டம், தமிழ் மக்களைத் திட்டமிட்டு ஒழிக்கவே கொண்டு வரப்பட்டது. பௌத்த சிங்கள ஒற்றையாட்சி முறையே அங்கு தொடர்ந்தது. தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களர்களைக் குடியேற்றவும் அல்லது தமிழர் வாழும் பகுதிகளை சிங்களப் பகுதிகளுடன் இணைக்கவும் வழி செய்யப்பட்டது. பத்து லட்சம் மலையகத் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இலங்கை அதிபராக ஒரு சிறுபான்மை இனம் இனி வரவே முடியாது.

1976ல் அனைத்து தமிழ் அமைப்புகளும் வட்டுக்கோட்டை என்ற இடத்தில் கூடின. இனி சிங்கள இனவாத அரசின் கீழ் செயல்பட முடியாதென்று தீர்மானிக்கப்பட்டது. தமிழர்கள் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்குப் போராடவும் முடிவு செய்யப்பட்டது. சாத்வீகமான போராட்டங்கள் தொடர்ந்தன. 1981ல் யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகம் சிங்களர்களால் எரிக்கப்பட்டது. 1983-ல் அரசு பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டு இனப்படுகொலை நடந்தது. அந்தக் கட்டத்தில் புலிகள் ஆயுதத்தைத் தூக்கி, தனிநாடு கேட்டுப் போராடுவது என்பது




யாழ்ப்பாணம் எம்.பி. பேட்டி

## ராஜபட்சய அமைத்த, சர்வகட்சிக் குழுவில் 22 தமிழ்ப் பகுதி உறுப்பினர்கள் இடம் பெறாதது ஏன்?

அவர்கள் எடுத்த முடிவல்ல. 1976ல் அமிர்தலிங்கம் உட்பட மிதவாதத் தலைவர்கள் எடுத்த முடிவின் அடிப்படையிலேயே தனி ஈழப் போராட்டம் ஆரம்பித்தது; தொடர்கிறது.

இலங்கைப் பரப்பில் 29 சதவிகிதம் தமிழ் வழி தாயகமாகும். இதில் கிழக்குப் பகுதியில் பெரும்பான்மைப் பகுதிகளிலும் வடக்கில் முப்பது சதவிகிதம் பரப்பளவிலும் சிங்களர்கள் குடியேற்றப்பட்டு விட்டனர். இன்று ராணுவத்தில் நூறு சதவிகிதம் சிங்களர்கள்தான். காவல் துறையில் தமிழர்கள் இரண்டு சதவிகிதம் கூட கிடையாது. 1987ல் ராஜீவ் முயற்சியின் காரணமாக உருவான இலங்கை இந்திய ஒப்பந்தப்படி அரசியல் சட்டம் திருத்தப்பட்டு சிங்களமும் தமிழும் ஆட்சி மொழியாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், நடைமுறையில் தமிழ் ஒடுக்கப்படுகிறது.

இப்போது ராஜபட்சய, அதிகாரப் பகிர்வு, வளர்ச்சித் திட்டம் என்று கதைக்கிறார். ஆனால், அது போன்ற எந்த யோசனைகளும் பரிசீலனையில் இல்லை என்பதுதான் உண்மை. சர்வ கட்சிக் குழு போட்டிருப்பதாகச் சொல்லும் ராஜபட்சய, தமிழ்ப் பகுதியில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றிருக்கும் எங்களை அந்தக் குழுவில் போடாதது ஏன்? உலகை - குறிப்பாக - இந்தியாவை ஏமாற்றுகிறார் ராஜபட்சய.

உலக அளவில் பார்த்தால் 1990க்குப் பிறகு 23 தேசிய இனங்கள் தனி நாடுகளைப் பெற்றுள்ளன. இனி சிங்கள இனவாத அரசின் கீழ் தமிழர்கள் வாழவே முடியாது. இந்தியா ஈழத் தமிழர்களின் நலன் காப்பது மட்டுமல்லாமல், அதன் எதிர்காலப் பாதுகாப்பையும் மனத்தில் கொண்டு, உடனடியாகப் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். புலிகளுடன் பேசத் தயக்கம் எனில் எங்களுடன் பேசலாமே! இந்தியா மனிதாபிமான முறையில் உதவுவதற்கு நன்றி. ஆனால் அரசியல்ரீதியாக தீர்வுகாண முற்படாவிட்டால், தமிழ் தேசிய இனம் இலங்கையில் முற்றிலும் அழிக்கப்பட்டு விடும்.''

**- ப்ரியன்**

நமது தேசத்தில் எத்தனையோ ரிஷிகள், சாதுக்கள் தோன்றியிருந்தாலும் மனித வாழ்க்கையின் அளவு நூறு ஆண்டுகள் தான் (ஸதமானம் பவதி ஸதாயு: புருஷ: ஆயுஷ்தே வேந்த்ரிய ப்ரதிதிஷ்டதி) என்று மந்திரங்களிலும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் சீன தேச கலாசாரமே வேறு. அங்குள்ள சாதுக்கள் இன்றைக்கும் கூட சர்வ சாதாரணமாக 200-400 ஆண்டுகள் உயிர் வாழ்ந்து வருகின்றனர்.

நமது சித்தா, ஆயுர்வேத வைத்திய முறைகளில் இன்னின்ன வகை விஷப் பாம்பு கடித்தால் இன்னின்ன குறிகள் தோன்றும்; அதற்கு இன்னின்ன பச்சிலை கஷாயம் கொடுக்க வேண்டும் என சித்தர் பாடல்களே இருக்கின்றன. பச்சிலை கஷாயம் செய்து கொடுப்பதற்குள் கடிபட்டவன் பரலோகம் போய் விடுவான். ஆனால் எமது 3-தினம் நேர்முக வகுப்பில் **"சீன தேசத்து அக்யூபிரஷர்"** முறை கற்ற மாணவர்கள், எந்த வித விஷபாம்பு தீண்டினாலும் பாதிக்கப்பட்ட நபர் காலில் ஓர் இடத்தில் மூன்று நிமிடம் அழுத்திப் பிடித்து குணமாக்கி விடுகின்றனர்.

ஊசி, மருந்து இல்லாத இந்த வைத்திய முறையில் விபத்து, விஷக்கடி, நெருப்புக் காயம், மின் அதிர்ச்சி போன்ற உயிருக்கு ஆபத்தான நிலைமைகளில் (எலும்பு முறிவு தவிர) டாக்டரிடம் செல்வதற்குள்ளாகவே அல்லது ஆம்புலன்ஸ் வருவதற்குள் மூன்றே நிமிடத்தில் பூரண குணம் கிடைக்கின்றது. அடிபட்டு இரத்தப்பெருக்கு ஏற்பட்டால் சுட்டு போடாமலேயே இரத்தம் போவதை நிறுத்தலாம்.

1985-ம் ஆண்டு வாக்கில் பாண்டிச்சேரி மாதாகோயில் ஆண்டு விழாவின் போது, ஒரு சிறுவன் மின்சாரம் தாக்கி மூச்சு பேச்சற்ற நிலையில், (விழாவிற்கு வந்திருந்த இரு M.B.B.S. டாக்டர்கள் அவனைப் பரிசோதித்து கை விரித்து விட்ட நேரத்தில்) எம்மிடம் 5-நாள் அக்யூபிரஷர் கற்ற Sister Irene Chiramel (St. Joseph's Dispensary, Cheyyur Village, Chengleput Dist.) என்பவர் அவனுக்கு மூன்று நிமிட அக்யூபிரஷர் வைத்தியம் செய்த உடனேயே நாடித்துடிப்பு சீராகி, மூச்சு விட ஆரம்பித்து எழுந்து உட்கார்ந்தான்.

நாட்பட்ட தலைவலி (migraine & headache) சைனஸ், அலர்ஜி, சில வகை ஆஸ்த்மா, குடிப்பழக்கம், Spondylitis, lumbago, low back pain, sciatica, sleeplessness, uterus & menses complaints, disability of joints after accidents போன்ற (எக்ஸ்-ரே/ஸ்கேனில் எல்லாம் 'normal' என்பதால்) "Clinically all right" என்று டாக்டர்களால் சொல்லப்பட்ட கேசுகளில் எமது 3-நாள் நேர்முக வகுப்பில் கற்ற மாணவர்கள் மூன்றே நிமிடத்தில் பூரண மற்றும் நிரந்தர குணம் செய்து ஓய்வு நேரத்தில் மாதம் இருபதாயிரத்திற்கு மேல் சம்பாதித்து வருகின்றனர்.

3-நாள் நேர்முக வகுப்பு சென்னையில் பிரதி மாதம் கடைசி மூன்று தினங்களில் (பெங்களூரில் பிரதி மாதம் முதல் மூன்று தினங்களில்) நடைபெற்று வருகின்றன. கட்டணம்: Rs.18,000 (பதினெட்டு ஆயிரம் மட்டும்) **வகுப்பில் சேர நேரிலோ, தொலைபேசியிலோ எம்மை அணுகாமல்** முழு கட்டணம் ரூ.18,000 வங்கி டிராப்ட் எடுத்து ஒரு மாதம் முன்பாகவே ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பி பெயர் பதிவு செய்து கொள்ளவும்.

**Dr. V. கிருஷ்ணமூர்த்தி, Old No. 21, குப்பையா தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-33.** Ph: 65393214

எமது 3-தின வகுப்பில் கற்ற பின்பு நீங்கள் வைத்தியம் செய்த ஒவ்வொரு பத்து தலைவலி, சைனஸ், spondylitis கேசுகளில் ஏழு கேசுகளிலாவது முழு குணம் கிடைக்கா விட்டால் நேர்முக வகுப்பிற்கு நீங்கள் செலுத்திய பணம் பூராவும் திரும்ப பெறலாம் என்ற உத்தரவாதம் கொடுக்கிறோம்.

எமது வெளியீடுகள்: (தமிழ் புத்தகம்)

"வாழ்க்கைப் பிரச்சினைகள் நீங்கி தேவைக்கு மேல் பணம் சம்பாதிக்க உதவும் இங்கிலாந்து மலர் மருந்துகள்" (பாகம் 1 to 18) — விலை ரூ.830=00 (தபால் செலவு உட்பட)

# மணி, மந்திரம், ஔஷதம்

புஷ்பராகம், பத்மராகம், கோமேதகம், வைரம், வைடூரியம், இந்திர நீலம், முத்து, மரகதம், பவழம், இவை ஒவ்வொன்றால் ஆன வெளிப் பிரகாரங்களை உடைய 'சிந்தாமணி கிருஹம்' என்ற அற்புதமான கோட்டையில் அம்பிகை தன்னை பாதுகாத்துக் கொள்ள வாசம் செய்கிறாள் என்று 'சௌந்தர்ய லஹரீ' என்ற மந்திர சாஸ்திரமாக போற்றப்படும் நூலின் எட்டாவது பாடலில் கூறப்பட்டுள்ளது. தன்னை பாதுகாத்துக் கொள்ள தேவியே தன் கணக்கில் இரத்தினங்களை உபயோகிக்கிறாள் எனில் பாமரர்களாகிய நாமும் ஏன் அவற்றை உபயோகிக்கக் கூடாது?

எனது முப்பத்தெட்டு வருட வைத்தியத் தொழிலில், எந்த நோயாளிக்காவது ஆறு மாதத்திற்கு மேலாக வைத்தியம் செய்தும் பலனளிக்காத கேசுகளில் அவருக்கு ஏற்ற இரத்தினங்களை அணியச் செய்ததில் நல்ல குணம் கிடைத்தது.

கான்சர் நோய் சீரியஸாகி சில வாரங்களே உயிர் வாழ்வாள் என்று சொல்லப்பட்ட ஒரு பெண்மணி வைடூரியம் (ரூ.3,800) மற்றும் மரகதம் (ரூ.4,600) அணிந்த பின்பு எழுந்து நடமாட ஆரம்பித்தாள். பவழம் (ரூ.2,800) அணிந்த பின்பு பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்தனர். வெண் பவழம் (ரூ.1,500) மற்றும் புஷ்பராகம் (ரூ.4,800) அணிந்து கொள்ள, சர்க்கரை வியாதி (டயபிடீஸ்) குறைந்தது. இதுபோல் தாமதமான பதவி உயர்வு கோர்ட் விவகாரம் சுமுகமாக முடிந்தது. தீராத வியாதிகள் குணமானது, நீண்ட நாட்களான பிரச்சினைகள் தீர்ந்தது போன்றவற்றை நான் அனுபவத்தில் பார்த்துள்ளேன்.

பிரச்சினை எதுவாயிருந்தாலும் எவ்வளவு பிரச்சினைகளா யிருந்தாலும் ஒரு ஜாதகத்திற்கு அவர் அணிய வேண்டிய இரத்தினக் கற்கள் விலை ரூபாய் பதினைந்தாயிரத்திலிருந்து இருபத்தி ஏழாயிரம் வரை ஆகும். ஆனால் இது செலவு அல்ல. இருபதாயிரம் கொடுத்து வண்ணத் தொலைக்காட்சி பெட்டி வாங்கி வீட்டில் வைத்திருப்பதால் அது வருடா வருடம் இருபதாயிரம் கொடுக்காது. ஆனால் ஜாதகத்திற்கேற்றபடி சுமார் இருபத்தி ஐந்தாயிரத்திற்கு நவரத்தினங்கள் எம்மிடம் வாங்கி அணிவதால் அது (1) தேவையில்லாத நஷ்டங்கள், வைத்திய செலவு இவைகளை குறைப்பதோடு, (2) இன்னொரு பக்கம் வருடா வருடம் அந்த அளவு பண வரவு ஏதோ ஒரு விதத்தில் கொடுத்துக்கொண்டே இருக்கும். சில வாசகர்கள் "என்னிடம் இப்போது பணம் இல்லை; பணம் வந்த பிறகு வாங்கிக் கொள்கிறேன்" என்று சொல்கின்றனர். ஆனால் நாம் என்ன சொல்ல வருகிறோம் என்றால் நீ ரத்தினங்களை அணிந்தால் மட்டுமே உனக்கு பண வரவு அதிகரிக்கும். இது செலவு அல்ல ஒரு பெரிய முதலீடு.

நவரத்தினங்களை அணிந்து பலன் ஏதும் ஏற்படவில்லை என பலர் சொல்வதற்கு நகைக் கடையில் இரத்தினங்களை வாங்கி சுத்தி செய்யாமல் அணிவதே காரணம். இரத்தினங்களை சுத்தி செய்து அணிவது மிக அவசியம்.

முத்து அணிந்த பிறகு மலச்சிக்கல் மற்றும் கோமேதகம் (ரூ.2,300) அணிந்த பிறகு அலர்ஜி குணமாகியது. பவழம், நீலம் (ரூ.4,800), லாபிஸ் லஸுலி (ரூ.480) அணிந்த பிறகு பல வருட தோல் வியாதிகள் குணமாகியது. கன்னிப்பெண்கள் பவழம் அணிய திருமணம் கைகூடியது. நீலக்கல் + புஷ்பராகம் + பவழம் அணிய, வியாபாரம் இலாபகரமாக நடைபெற்று வர தொடங்கியது.

செல்வராஜ் சங்கீதத்தில் புலமை உள்ளவர். ஆனால் சான்ஸ் ஏதும் கிடைப்பதாக இல்லை. 'அகேட்' (ரூ.1,200) என்ற இரத்தினம் அணிந்த பின் இன்று இலண்டன் வானொலி நிலையத்தில் இசையமைப்பாளராக இருக்கிறார். அருண்குமார் நல்ல ஓவியர். ஆனால் ஒன்று கூட விற்கவில்லை. அகேட் அணிந்த ஆறே மாதத்தில் நிறைய விற்பனையாகி இன்று கார், பங்களா என்று இருக்கிறார். இராமசாமி நடத்தி வந்த லாரி சர்வீஸ் பலத்த நஷ்டம். காரணம் அடிக்கடி நடந்த லாரி விபத்து. 'டர்க்வாய்ஸ்' இரத்தினம் (ரூ.480) ஒவ்வொரு லாரியின் டீசல் டாங்க்-ல் போட அதன் பிறகு விபத்து நிகழவில்லை.

நமது வாழ்க்கைப் பிரச்சினை, ஏழ்மை நீங்க முதலில் 'மணி'யின் (இரத்தினங்களின்) உதவியை நாட வேண்டும். இது பலனளிக்காத பட்சத்தில் மட்டுமே மந்திரங்களை உச்சாடனம் செய்ய வேண்டும். இதுவும் பலனளிக்காத ஒரு சில கேசுகளில் மட்டுமே 'மருந்து' என நம் முன்னோர் "மணி, மந்திரம், ஔஷதம்" என வரிசைப் படுத்தி வைத்துள்ளனர்.

ஆம்! உலகில் உள்ள எல்லா நல்ல சக்திகளையும் (கடவுளின் பலம், சக்தி உட்பட) நவரத்தினக் கற்கள் தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டுள்ளன. இவற்றை அணிய, நம்மிடம் உள்ள தேவையில்லாத சுபாவங்கள், மற்றவர்களுக்கு பிடிக்காத செயல், தன்னம்பிக்கையின்மை போன்ற தன்மைகள் உறிஞ்சப்பட்டு வெளியேற்றப்படுகின்றன.

2-3 லட்சத்திற்கு கார், வீடு வைத்திருப்பதால் நமது வருமானம் அதிகரிக்காது. இவற்றால் அடிக்கடி செலவு நிச்சயம் உண்டு. செலவு ஏதும் வைக்காமல் பண வரவு, சௌகர்யங்கள் ஆகியவற்றை (மறைமுகமாக) தொடர்ந்து கொடுத்துக் கொண்டேயிருப்பது இரத்தினக் கற்கள் மட்டுமே!




**Dr. V. கிருஷ்ணமூர்த்தி**
Flat No. 001, Ground Floor
Building No. 9, Shanthi Park Apts.,
Jayanagar - 9th Block
Opposite to Woody's
Bangalore - 69
Phone: (080) 3292 2523

***At Chennai***
"RAMAN HOUSE"
Old No. 21, Kuppiah Street,
West Mambalam,
Chennai (Madras) - 33
Phone : 6539 3214



கல்கி



2008 நவம்பர் 16
ஸர்வதாரி கார்த்திகை 1
மலர் : 67
இதழ் : 16

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

# உலகம் வியக்கும் ஒபாமா!

**வ**ரலாறு காணாத வெற்றி பெற்றுள்ள ஒபாமாவை உலகமே வாழ்த்தி மகிழ்கிறது. அமெரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதி பராக் ஒபாமா என்பது அவருக்கு ஒரு பெருமைதான். ஆனால், வாக்களிப்பு முறையையும் அபரிமிதமான வாக்கு வித்தியாசத்தில் அவர் பெற்றுள்ள வெற்றியையும் பார்க்கிறபோது, அவரது இன அடையாளத்துக்காக மட்டுமே மக்கள் அவரைத் தேர்ந்தெடுக்கவில்லை என்பது உறுதியாகிறது.

ஒபாமா பெற்றுள்ள வெற்றி, ஜனநாயக கட்சி பக்கம் மக்களின் ஆதரவு திரும்பியிருப்பதை வலிமையாக உணர்த்துகிறது; குடியரசு கட்சியைச் சேர்ந்த ஜார்ஜ் புஷ்ஷின் கொள்கை, கோட்பாடுகள், நிர்வாகம் ஆகியவற்றை அமெரிக்க மக்கள் நிராகரித்திருப்பதையும் உணர்த்து கிறது. கால் நூற்றாண்டாக ஜனநாயக கட்சிக்கு வாக்களிக்காமல் குடியரசுக் கட்சியையே தேர்வு செய்த அமெரிக்க மாகாணங்கள் கூட, இப்போது ஜனநாயக கட்சிக்கு வாக்களித்துள்ளன!

ஆஃப்கானிஸ்தான், ஈராக் மீது போர் தொடுத்தது, அந்நாடுகளில் அப்பாவி மக்களுக்கு நேர்ந்த கொடுமைகள், யுத்தத்தில் அமெரிக்க ராணுவ இளைஞர்கள் காவு கொடுக்கப்பட்டது, அமெரிக்க ஆக்கிரமிப் புப் பகுதிகளில் நடந்த அராஜகம், கைப்பற்றப்பட்ட 'எதிரி' நாட்டு



ராணுவ வீரர்கள் சிறைக் கைதிகளாக அனுபவித்த கொடுமைகள் என்று உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய பல முறைகேடுகளுக்கு புஷ் நிர்வாகம் இடமளித்து விட்டது என்பதுடன் யுத்தம் செய்து அமெரிக்க பராக்கிரமத்தையும் தமது அரசியல் வலிமையையும் காட்டிக்கொள்ள அவர் பல பொய்களும் புனைந்துரைகளும் பேசினார் என்பது அவர் பேரிலுள்ள குற்றச்சாட்டு. ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகச் சொல்லி தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் அமெரிக்க ராணுவம் எவ்வளவு முயன்றும் மாதிரிக்கு ஒன்றுகூட அங்கே அகப்படவில்லை!




தமது ஆட்சியில் இந்த மாதிரியான அநீதிகள் நிகழாது என்பதை உணர்த்தும் வகையில் ஒபாமா, நேர்மையும் ரகசியமற்ற வெளிப்படையான நிர்வாகமும் பேணப்படும் என்று உறுதி அளித்துள்ளார். இந்த வாக்குறுதி நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது. படையெடுப்பு நிகழாது; அமெரிக்க ராணுவம் ஆக்கிரமிப்புப் பிரதேசங்களிலிருந்து திரும்பப் பெறப்படும்; பயங்கரவாதத்துக்கு எதிரான ஒடுக்குமுறை மட்டும் தொடரும் என்றும் ஒபாமா சொல்லியிருப்பது நியாயமான, மனிதநேயம் மிக்க, யதார்த்த அணுகுமுறையை உணர்த்துகிறது.

அமெரிக்க அதிபரின் நோக்கும் போக்கும் சீராகவும் சிறப்பாகவும் அமைவதென்பது அந்நாட்டுக்கு மட்டும் முக்கியமல்ல; உலகுக்கே முக்கியம். ஏனெனில், உலகப் பொருளாதார வளர்ச்சியையும் உலக அமைதியையும் நிர்ணயிக்கிற பலம் இன்று அமெரிக்காவிடம் இருக்கிறது. ஆகவேதான் ஒபாமாவின் தேர்வு, உலக வரலாற்றில் திருப்புமுனையாக அமைய வாய்ப்பு இருக்கிறது.

தற்போது அமெரிக்காவில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடி, ஒபாமாவுக்கு மிகப் பெரிய சவால். ஆனால், உலகே ஒன்று திரண்டு அளிக்கும் வரவேற்பு, அவரது தீர நெஞ்சுக்கு மேலும் உரம் சேர்க்க முடியும். அமெரிக்காவுக்குப் புத்துணர்வு ஊட்டி, உலகப் பொருளாதாரத்தையும் விரைவில் நிலைகொள்ளச் செய்ய, ஒபாமா முனைப்பு காட்டி வெற்றி பெற முடியும். இதையெல்லாம் சாதித்தால், சந்தர்ப்ப சூழ்நிலைகளால் உருவாக்கப்பட்ட ஜனாதிபதி என்ற நிலையிலிருந்து உயர்ந்து, சரித்திரம் படைத்த அமெரிக்க ஜனாதிபதி என்ற பெருமையை அடையலாம். ○




# த்ரீ இன் ஒன் இனிப்பு!

**உ**யிர்க்கொல்லி தேவதை வான் நிறப் படமும் + ஊன் உருக்கும் வலி களும் ஒன்றாய் அளித்த உன்னதப் படைப்பு.

**- கவிக்கோலம் கிருஷ்ணமூர்த்தி, சென்னை**

''**எ**ங்க போறதா இருந்தாலும் சரி யான நேரத்துக்குப் போ. எதைச் செஞ் சாலும் முழு மனசோட செய்'' என்று ராதிகா தன் தந்தை எம்.ஆர். ராதாவி டம் பெற்ற உபதேசம், ராதிகாவுக்கு மட்டுமல்ல, எல்லோருக்குமே உபயோ கப்படும்.

**- கே. கஸ்தூரி, வேலூர்**




**இ**லங்கைப் பிரச்னையில் எழுத்தாளர் தமி ழருவி மணியனின் உச்ச கட்ட பேச்சு, அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

**- கீதா முருகானந்தம், தஞ்சை**

'**ரா**ஜபட்சய'வின் செயல்பாடுகள் எப்படி இருக்கவேண்டும் என்பதை உணர்வுபூர்வமாக விளக்கியிருந்த தலையங்கம் அசத்தல்!

**- ஆர். ராம்சுப்ரமணி, திருவாரூர்**

**டீ**யட் கதை - 12 வித்தி யாசமான காதல் கதை. காதலனை அடைய சுமதி செய்த யுக்தி அபாரம். பல காதலருக்கு இந்த யுக்தி பயன்படும்.

**- எஸ். மீனா, ஸ்ரீரங்கம்**

'**ஹா**ஸ்பிடல் எத்திக்ஸ்' சில பொய்யான டாக்டர்கள் மற்றும் மருத்துவமனைகளின் பொய் முகத்தைக் கிழித்துக் காட்டுகிறது.

**- ஜெனிஹரி, சென்னை**

---

**க**ல்கி, மங்கையர் மலர், கோகுலம் பக்கங்கள் 'த்ரீ இன் ஒன்' என்ற இனிப்பை தீபாவளிக்கு அளித்தது. என் போன்ற 'சர்க்கரை நோயாளிகள்' தடா இன்றிச் சுவைக்க முடிந்தது.

தீப ஒளித் திருநாளை சிறப்பாக்கிய மலர்.

**- எஸ். ஜானகி, உடுமலைப்பேட்டை**

**த**மிழ் இலக்கியநயமும், ரசமும் அவற்றை விரித்துரைத்து எழுதியமையும் அழகமைத்து வரையப் பெற்ற சித்திரங் களுமே கல்கி தீபாவளி மலர் ஸ்பெஷல். மனமார்ந்த பாராட்டுக்கள். இதற்காகவே மலரை எதிர்பார்த்து ஆண்டாண்டுகளாக பத்திரப்படுத்துகிறோம். பிள்ளைப் பெருமாள் ஐயங் காரின் பிரபந்தப் பாடலாகிய ஆடீர் ஊசல் பற்றிய சில நினைவுகள் :

என் நண்பரும், சங்கீத ரசிகருமான திரு. சேஷாசலம் 1985-1986ல் திருமதி எம்.எஸ்.அம்மா விடம் இந்தப் பாடலை ஒரு கச்சேரியில் பாட வேண்டிக் கடிதம் எழுதினாராம். எம்.எஸ்.அம்மாவும் அவரது விருப்பத்தை நிறைவேற்ற அதனை பெங் களூரில் கச்சேரியில் பாடினார்களாம். ஒரு எளிய ஆனால் ஆத்மார்த்தமான ரசிகனுக்காக எம்.எஸ். அம்மா வின் பெருந்தன்மையான இச்செயலை எண்ணி நாங் கள் வியந்து மகிழாத நாளில்லை. இப்போது இதை தீபாவளி மலரில் பார்க்கிறபோது மகிழ்ச்சியால் கண் களில் நீர் முட்டுகிறது.

**- மீனாக்ஷி பாலகணேஷ், பெங்களூரு.**

# எல்.கே. அத்வானி

எழுதிய

# என் தேசம் என் வாழ்க்கை

## நூல் வெளியீட்டு விழா

**12 - 11 - 2008 - புதன்கிழமை**

**- மாலை 6 - 00 மணிக்கு**

## நாரத கான சபா, சென்னை - 18

பங்கேற்பவர்கள்

**ஸ்வாமி தயானந்த சரஸ்வதி**

**எல்.கே.அத்வானி**

**Air Chief Marshal கிருஷ்ணஸ்வாமி**

**சோ**

**பத்மா சுப்ரமணியம்**

**'அல்லயன்ஸ்' ஸ்ரீநிவாஸன்**

சிறப்பு சலுகை

புத்தகத்தின் விலை ரூ. 600/-

12- 11- 2008 - வரை முன் பணம் செலுத்தி பதிவு செய்பவர்களுக்கும்;

வெளியீட்டு விழாவில் வாங்குபவர்களுக்கும் ரூ.450/- மட்டும்

(தபால் செலவு தனி)

அல்லயன்ஸ் (நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

(ப. எண்) 244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மைலாப்பூர் - 600 004

தொலைபேசி 24641314 www.alliancebook.com email: srinivasan@alliancebook.com

# கிரேஸியைக் கேளுங்கள்

# நானும் அழகியாக ஆசைப்படறேன் ஸார்!

**ஜனனி, சென்னை**

***அழகிகள்தான் காதலிக் கப்படுகிறார்கள்... சரிதானே கிரேஸி...?***

அழகுக்காக ஒருத்தி காதலிக்கப் படுவதில்லை... காதலிக்கப்படுவ தால் அவள் அழகியாகிறாள்.

**பி. சிவா, பாளையங்கோட்டை**

***காதல் ஒரு நோயா...? இல்லை நோய் தீர்க்கும் மருந்தா...?***

ஐ.சி.யு... Intensive Care Unit. டாக்டர் வள்ளுவர் தனது Prescriptionனில் , காதலி தனது ஒரு கண்ணால் காதல் என்ற நோயையும், மறு கண்ணால் அந்த நோயைத் தீர்க் கும் மருந்தையும் தருவதாகக் கூறு கிறார். ஆக காதல், நோயா இல்லை மருந்தா என்பது காதலியின் "Eye See You"வைப் பொறுத்தது.

**த. புகழேந்தி, கூகூர்**

***பொங்கலுக்கும், தீபாவளிக்கும் என்ன வித்தியாசம்?***

பொங்கல் - 'வயலும் வாழ்வும்'... தீபாவளி- 'ஒளியும் ஒலியும்'.

**த.சத்தியநாராயணன், அயன்புரம்**

***தங்களுடைய இந்தக் கேள்வி-பதில், புத்தக மாக வெளி வந்தால், அந்தப் புத்தகத்துக்கு என்ன தலைப்பு வைப்பீர்கள்...?***

'கிரேஸியைக் கேளுங்கள்' என்று இந்தப் பகுதிக்கு தலைப்பைக் கொடுத்த 'கல்கியைக் கேளுங்கள்...'

**என்.கோமதி, நெல்லை**

***உலகம் Black and White ஆகிவிட்டால்...?***

கடவுளின் கையெழுத்தைக் காணலாம். Colour இல்லாததால் 'வானவில்' இருக்க முடியாது. 'இத் துடன் மழை முடிந்தது' என்று வானத்தில் எழுதிக் காட்ட வேண்டிய கட்டாயம் கடவுளுக்கு வரும்.

**சுந்தரி, அரக்கோணம்**


***மழையைப் பற்றி நச்சுனு ஒரு புதுக் கவிதை சொல்லுங்க பாப்போம்...?***

''பெய் என்றாள் பத்தினி
போதும் நில் என்றாள் பட்டினி
பெய்த மழை பத்தினியை மட்டும்
நனைத்தது.''

**கல்பனா லோகநாதன், டெல்லி**

***காரண-வாதி, காரிய-வாதி... இரண்டுக்கும் ஒரு உதாரணம் ப்ளீஸ்...?***

காதலித்தவளையே கல்யாணம் செய்து கொள்பவன் காரணவாதி... கல்யாணம் செய்துகொண்டவளைக் காதலிப்பவன் காரியவாதி.





பிச்சா மாமா (புனைப் பெயர்),
ஆதம்பாக்கம்

என் மனைவி என்னை 'கூறு கெட்டவன்' என்கிறாள்... 'கூறு கெட்டவன்' என்றால் என்ன...?

நான்கு சுவற்றுக்குள் நடந்ததை, நாலு பேருக்குத் தெரியும் வண்ணம், என்னமோ தேசிய விருது கிடைத்தது போல பெருமையாகக் கேட்கிறீர்களே... இதுதான் 'கூ.கெ' தனம்... ஏதோ இந்த மட்டும் புனைப் பெயரில் கேட்டீர்களே... அந்த அளவுக்கு உங்கள் கூறு கெடாமல் காப்பாற்றப்பட்டது.

**லோகேஷ், தஞ்சை**

**பெண்கள் கோபம் வந்தால் ஏன் கிரேஸி, மோவாயால் தோளில் இடித்துக் கொள்கிறார்கள்...?**

மேனரிசத்தில் இந்த 'மோவாய்-தோள் மோதல்' மட்டும், பெண்களின் பிரத்யேக 'Wo-mannerism'.

# கடவுளின் கையெழுத்து!

**அ. யாழினி பர்வதம், சென்னை**

**இதயத்தில் இடம் கொடுத்து காதலிப்பவர்களுக்கு இதயநோய் வருமா...?**

வாரி வாரி வழங்கும் வள்ளலுக்குக் கை வலி வருமா...!

**கண்ணுசாமி, மேட்டுப்பாளையம்**

**நாடகத்தில் நடிக்க ஆசையாக இருக்கு. ஆனால் வீட்டில் அதற்கு எதிர்ப்பு... வீட்டுக்குத் தெரியாமல் நடிக்க வழி உண்டா கிரேஸி...?**

வானொலி நாடகத்தில் வாய் பேச முடியாத ஊமை அசரீரி ரோலில் நடியுங்கள்..வீட்டுக்கு என்ன, நீங்கள் நடித்தது உங்களுக்கே தெரியாது!

**இராம.பார்த்திபன், வயலூர்.**

**எது சிக்கனம்?**

தொப்பை தொந்தி இல்லாமல் ஸ்லிம்மாக, 'சிக்'கென்று 'கனம்' இல்லாமல் இருப்பதே சிக்கனம்.


புதிய
வானம்
தொடர்
1

''ஹா ஹா ஹா!'' என்று கான்ஸ்டபிள் சிரித்தபோது, டீ.வி. விளம்பரத்தில் வரும் கோமாளி ராவணன் போல் தெரிந்தார்.

''எப்படி எப்படி? இன்னொரு முறை சொல்லு... அடையாறு பூங்காவுல என்ன பண்ணிக்கிட்டிருந்தே...?''

ராஜு மௌனம் காத்தான். யாருக்குமே இதுவரை புரியாத ஒரு பிரேமையை இந்த ஜெ - 3 காவல்நிலைய போலீஸ்காரரா புரிந்துகொள்ளப் போகிறார்! சீருடைக்குள் அடங்காமல் பிதுங்கிய அவர் உடம்பும் எந்த வரம்புக்குள்ளும் அடங்காமல் திமிறித் தெறித்த கடுஞ்சொற்களும் தன்னை மாறி மாறி கன்னத்தில் அறைவது போலிருந்தது ராஜுவுக்கு.

''சொல்லுடா!'' என்று அவர் நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு எழுந்தபோதுதான் சீதா அவசரமாக உள்ளே நுழைந்தாள்.

'இது யாரு?' என்பதுபோல் அந்த கான்ஸ்டபிள் பார்த்த பார்வையில் அவருடைய மனத்தின் முன் தீர்மானங்கள் கெக்கலித்தன.

''ஸாரி ராஜு, கொஞ்சம் லேட் ஆயிடுச்சு. வண்டி பஞ்சர். கம்ப்ளெயின்ட் எழுதிக் குடுத்திட்டியா? காபி வாங்கிக்கிட்டியா? இன்ஸ்பெக்டர் இருக்காரா? எஃப்.ஐ.ஆர்...?'' அடுக்கிக்கொண்டே போனாள் ராஜுவைப் பார்த்து.

''நீ யாரும்மா? அடையாறு ஆத்தோரம் பாம்பு பிடிக்கறவளா?'' என்று கேட்டு விட்டு கான்ஸ்டபிள் மீண்டும் இடிஇடியென்று சிரித்தார்.

தோள் பையைக் கழற்றி தொப்பென்று அவர் மேஜை மேல் போட்டாள் சீதா. ''மிஸ்டர் மருதமுத்து!'' என்றாள் பேட்ஜில் இருந்த அவருடைய பெயரைப் பார்த்து. அதுவரை தம்மை யாரும் அவ்வாறு அழைத்தறியாத கான்ஸ்டபிளுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

''நாங்க குடுக்கற கம்ப்ளெயின்டை வாங்கிக்க வேண்டியது உங்க கடமை. விசாரணையெல்லாம் அவசியமானா, எஃப்.ஐ.ஆர் பதிவான பிறகு கோர்ட்டில் வைச்சுக்கங்க. இப்போ இந்த ஃபார்மாலிடியை முடியுங்க...''

''சும்மா மிரட்டாதேம்மா! 'அடையாறு ஆத்தங் கரையில நீ என்னா பண்ணிக்கிட்டிருந்தே? அதுவும் காலைல எட்டு மணிக்கு'ன்னு கேட்டா, பறவை பார்த்துக்கிட்டிருந்தேன்னு சொல்றான்! படிக்கற பையன் பேசற பேச்சா இது?''

''ஸார் அது என் ஹாபி. இப்போ நெஸ்டிங் சீஸன் வேற...'' வெள்ளந்தியாய்க் குறுக்கிட்டான் ராஜு.

''ஆமாம்! கண்ட ஹுலாங்க வந்து இல்லாத்தையும் பொல்லாத்தையும் எழுதிக் கொடுக்க வேண்டியது. நாங்க இல்லாத கேஸை தலைமேல ஏத்திக்கினு தூக்கணும்! அப்புறம் 1033 கேஸு இன்னும் தீர்க்காம இருக்குதுன்னு புள்ளி விவரம் காட்டி பேப்பர்ல எழுதுவானுங்க. சர்தான் போம்மா வேலையைப் பாத்துக்கிட்டு!''

மங்கிப்போன இரண்டு மர நாற்காலிகளைத் தரதர வென்று இழுத்துப் போட்டாள் சீதா. பிரமித்து நின்ற ராஜுவின் தோளைப் பிடித்து ஒன்றில் அமர்த்தினாள். மற்றொன்றில் தான் அமர்ந்து,

சீதா ரவி

ஏட்டின் மேஜை மேல் போட்ட பையைக் குடைந்து ஒரு கற்றை வெள்ளைக் காகிதங்களை எடுத்தாள். உறையில் மடித்து வைத்திருந்த கார்பன் ஷீட்டை உருவிப் பிரித்து, பொருத்தி, பால் பாயின்ட்டைத் திறந்து வைத்துக்கொண்டு, ''சொல்லு ராஜு'' என்றாள்.

''ரொம்ப தேங்க்ஸ் கீதா. ஒரு பொண்ணு சொன்ன இடத்துல கண்ணை மூடிக்கிட்டுக் கையெழுத்துப் போடுவேன்னு நான் கனவுலயும் நினைக்கல.'' மடையை உறிஞ்சிக் கொண்டே சொன்னான் ராஜு.

''உடனே புத்தியைக் காண்பிச் சுடுவீங்க இல்ல... வர்ற கோபத்துல மடையை உன் தலையிலயே ஊத்தணும் போல இருக்கு!'' - கீதாவின் குரல் உயர, வீதியில் நடந்து போய்க்கொண்டிருந்த தாத்தா - பாட்டி திரும்பிப் பார்த்து முறைத்தனர்.

''கியூட்டா இல்லை?'' என்றான் அவர்களை நோக்கி ஜாடை செய்து.

''ஓஹோ, உனக்கு இதுவும் ஒரு ஹாபியா? கான்ஸ்டபிள் மருதமுத்துகிட்டே சொல்லி வைக்கறேன். அடுத்த முறை இன்னும் நாலு கேள்வி கேட்க வசதியாயிருக்கும் அவருக்கு!''

ராஜுவின் முகம் இருண்டது.



''நம்ம பெண்ணுக்கு ஒரு சரியான வரன் அமையற வரைக்கும் கொஞ்சம் வெயிட் பண்ணுவோமே; இதுக்காக, நீ ஏன் வருத்தப்படறே?''

''என் கல்யாண விஷயத்தில் எங்க அப்பா இந்த மாதிரி ஒரு முடிவு எடுக்கலையேன்னுதான்!''

- அதிரை புகாரி

''எல்லா ஜம்பமும் எங்கிட்டதான். ஸ்டேஷன்ல போய் ஒரு கம்ப்ளெய்ண்ட் எழுதிக் கொடுக்கச் சொல்லு. ஆளு அப்படியே பொட்டிப் பாம்பாயிடுவாரு. இதுல ஆம்பிளைன்ற அச்சுப்பிச்சுப் பெருமை வேற...! ஏன்? ஒரு பொண்ணோட ஹெல்ப்பை ஏத்துக்கறதால நாலு இஞ்சு உயரம் குறைஞ்சுடுவீங்களோ? அந்த போலீஸ்காரனையே எழுதச் சொல்லிக் கையெழுத்துப் போட்டிருக்கணும். உன் சொத்தையும் சேர்த்து எழுதி வாங்கிக்கிட்டிருப்பான்!''

''எங்கிட்டேயிருக்கற ஒரே சொத்து என் பைனாகுலர்ஸ்தான். அப்பா - அம்மாவுக்குக் கூட சொத்து கிடையாது. வாடகை வீடு. கிராமத்துல...''

இடைமறித்தாள்: ''ஆமா, எதுக்காக நீ பறவைங்கள வாட்ச் பண்ற? இந்த ஹாபில என்ன கிடைக்கப் போகுது உனக்கு?''

''இப்படிக் கேட்டா என்ன சொல்றது? பூவையும் கடலையும் பார்த்தா சந்தோஷப்படலியா? அந்த மாதிரிதான் பறவைங்களும்.''

''ஆஹா, ரொமான்டிக் பொயட் மாதிரில்ல பேசறாரு. நாங்கள்லாம் பூவையும் கடலையும் பார்க்கிறபோது சந்தோஷப் படறோம். நீங்க என்னன்னா குருவிங்களத் தேடித் தேடி சேத்

துலயும் மேட்டுலயும் அலைஞ்சு திரிஞ்சு ஆலாப்பறக்கறீங்க. பொழுது நிறைய இருந்தா எங்ககூட இயக்கத்துல சேர்ந்து வேலை பாரு. சமூகத்துக்காவது உபயோகமாயிருக்கும்.''

**அ**ம்மா பேசுவது போலவே இருந்தது ராஜுவுக்கு. கீதாவின் மீது பார்வையையும் கவனத்தையும் செலுத்தினான். அம்மாவைப் போல் அவள் இல்லை என்பது வலிமையாகப் புரிந்தது. உதடுகள் கண்ணாடி தம்ளரில் நன்கு அழுந்த டீயைச் சுவைத்தாள். அம்மா பருகும்போது தம்ளர் வாயிலிருந்து அரை அங்குலம் தள்ளித்தான் இருக்கும். அவள் நெற்றியில் எப்போதும் பொட்டு இருக்கும். கீதாவின் நெற்றியில் சுருள் கூந்தல் மட்டுமே விளையாடுகிறது. அம்மாவின் முகத்தில் எப்போதும் ஒரு கனிவு - கோபத்திலும்கூட கசிந்தது. இவள் கனிவான நேரங்களில்கூட கடுமையைப் புனைந்துகொள்கிறாள்.

''என்ன அப்படிப் பார்க்கறே?'' என்றாள் டீ கிளாஸைக் கடையில் கொடுத்துவிட்டு.

''ஒண்ணுமில்லே. எங்க அம்மா மாதிரியே பேசுறயேன்னு பார்க்கறேன்...''

**ரா**ஜுவின் பறவைகள் பைத்தியம் அவனை உருப்படாமலடித்துக் கொண்டிருந்தது என்று ருக்மிணி முழுமையாக நம்பினாள். அவன் அப்பாகூட அவனைப் புரிந்துகொள்ள இயலாவிட்டாலும் ஊக்குவிக்கத் தயாராயிருந்தார். ஆனால், 'எம்.காம், ஸி.ஏ முடித்து, தன் தம்பி கஜபதியின் ஆடிட் நிறுவனத்தில் சேர்ந்து, பார்ட்னராகி, கை நிறைய சம்பாதித்து, வீட்டுக்குப் பொருத்தமாக ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு...!' - அம்மா அவனுக்காக வளர்த்துக்கொண்ட ஆதர்சங்களின் பட்டியல், அவன் தலைமீது கல்லாகச் சுமத்தப்பட்டிருந்தது.

அன்று காலையும் அப்படித்தான்... மொட்டை மாடியில் கொடிக்கயிறு அறுந்துவிட்டது. மாற்றிக் கட்டும்படி அவனை அனுப்பியிருந்தாள் அம்மா. பிளாஸ்டிக் கயிறு, தீப்பெட்டி, மெழுகுவர்த்தி, கத்தி என்று தேவையான பொருட்களைச் சேகரித்துக் கையில் தந்து, ''சீக்கிரம் கட்டித் தாடா! கஞ்சி போட்ட புடைவையெல்லாம் காய வைக்கணும்'' என்றாள்.

வெயில் அப்போதுதான் சோம்பல் முறித்து எழப் பார்த்த அந்த நேரத்தில் மொட்டை மாடி ரம்மியமாக இருந்தது. சாலை ஓரத்துத் தூங்கு மூஞ்சி மரத்தில் காக்கைக் கூடு. கரகரத்த குஞ்சுகளின் குரலுக்கிடையில் குயில் குஞ்சின் மாறுபட்ட கிறீச்சிடல் கேட்டுச் சிரித்துக் கொண்டான் ராஜு. எதிர்ச்சாரி பாதாம் மரத்தில் மாங்குயிலின் கூப்பாடு கேட்டது. பின்பக்கம் உயர்ந்து நின்ற மரத்தில், சிவப்புக் கிண்ணைப்

"சார், பிஸினஸ் டல்... வியாபாரமே இல்லாமல் ஈ ஓட்டிக்கிட்டிருக்கிறேன் சார்"

''எது 'ஓட்டினாலும்' டிரைவிங் லைசென்ஸ் அவசியம் இருக்கணும். எடு மாமூல் ஐம்பது ரூபாயை!''

– அரவக்குறிச்சிப்பட்டி எம். அசோக்ராஜா



பூக்களுக்குள் கருநீலத் தேன் சிட்டுக்கள் பாய்ந்து பாய்ந்து களித்தன. 'என் எல்லைக்குள்ளா வருகிறாய்' என்பதுபோல் அவற்றை அதட்டி விரட்டின இரண்டு மைனாக்கள்.

''ராஜு...!'' கீழேயிருந்து மாடிப்படியருகே அம்மாவின் குரல்! ''கட்டிட்டியாடா? துணி காய வைக்க கோமதியை அனுப்பட்டுமா?''

''டென் மினிட்ஸ்!'' என்று கெடு சொல்லிவிட்டு கயிற்றைப் பிணைக்க வேண்டிய கழிகளை அண்ணாந்து பார்த்தான் ராஜு. அவன் விழியோரங்களில் தெரிந்த வானத்து அசைவு நோக்கிப் பார்வை திரும்பியபோது, மகிழ்ச்சியில் மூச்சு நின்றுவிடும் போலிருந்தது அவனுக்கு. நீல வானப் பின்னணியில் ஒளிரும் கறுப்பு நாரைகள் மூன்று, வெகு ஒய்யாரமாகச் சிறகடித்துப் பறந்தன. 'கார்மரன்ட்ஸ்!' என்று உடனே அடையாளம் கண்டான். விரிந்த இறக்கைகளின் ஒயிலும், அலகுகளின் நேர்த்தியும் வானில் அழியாத கவிதை வரிகளைப் பதித்துச் சென்றன. அந்தக் கணத்தினால் உலகமே அழகுற்றதாக உணர்ந்தான் ராஜு. கண் பார்வையிலிருந்து அவை மறையும்வரை பார்த்துக் கொண்டேயிருந்தான்.

பிளாஸ்டிக் கொடிக் கயிற்றை அளந்து கட்டுகையிலேயே அவன் மனம் கணக்கு போட்டுவிட்டது. அடையாறு முகத்துவாரத்தில் கார்மரன்ட் பறவைகள் கூடமைத்துக் குஞ்சு பொறித்திருக்கும். சகதி - சேற்றைப் பொருட்படுத்தாமல் நெருங்கிப் போய்ப் பார்க்க வேண்டும்.




இந்த மழை மாதங்கள் அவற்றின் இனப்பெருக்கப் பருவம். இப்போது ஓரிரு வாரத்துக் குஞ்சுகள் சுள்ளிக் கூடுகளில் சிவப்பு வாய் தெரிய அலகு பிளந்து சோறு கேட்கும். ஆஹா! பார்த்துவிட வேண்டும்.

விறுவிறுவென்று கொடியைக் கட்டிவிட்டுக் கீழே போனான் ராஜு. ''இட்லி வேண்டாம். தோசை தா!'' என்றான், தட்டை நீட்டிய அம்மாவிடம்.

''பஸ்ஸுக்கு லேட்டாயிடும்டா! ரெடியாயிருக்கறதச் சாப்பிட்டுட்டுப் போ...''

''வேணாம்...''

உடை மாற்றி அவன் கிளம்புவதற்குள் தோசையைச் சுடச்சுடப் பொட்டலமாகக் கட்டித் தந்துவிட்டாள் அம்மா. ''காலேஜ் போனதும் சாப்பிட்டுக்கோ...''

காலேஜ் போனால்தானே!

மெரினா எதிரே பிரெஸிடன்ஸி வரை செல்ல பஸ் பாஸ் இருந்தது. அதற்கு முன்பாகவே அடையாறு பாலத்தருகே இறங்கினால் யார் கேட்கப் போகிறார்கள்!

விரைந்து சென்றவன் பைனாகுலர் வழியே முகத்துவாரத்தை அலசினான் - பார்க்கப் போகும் காட்சி தன்னை போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு நிறுத்தும் என்பதைத் துளியும் எதிர்பாராமல்.

(தொடரும்)

சமூகக் கலாச்சார பரிவர்த்தனைக்காக நூறு இளையோர்களைக் கடந்த மூன்று ஆண்டுகளாக சீனாவுக்கு அனுப்பி வைத்து வருகிறது மத்திய அரசு.

இந்த ஆண்டு இந்தியாவிலிருந்து சீனா சென்ற நூறு பேரில், பரத நாட்டியத்துக்கெனச் சென்ற அருள் கண்மணியும், சமூகப் பணிப் பிரிவில் சென்ற சக்திஜோதியும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.

சக்திஜோதி திண்டுக்கல், அய்யம்பாளையம் கிராமத்தில் இயங்கிவரும் ஸ்ரீ சக்தி சமூகப் பொருளாதார கல்வி நலன் அறக்கட்டளை நிறுவனத் தலைவி. கல்லூரிப் பருவத்திலிருந்து சமூகப் பணியாற்றி வருபவர். திண்டுக்கல், தேனி, ஈரோடு, கோவை மாவட்டங்களின் 680 கிராமங்களில், சுமார் மூவாயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி இயக்கி வருகிறார். திண்டுக்கல், தேனி மாவட்டப் பகுதிகளின் பாரத ஸ்டேட் வங்கிகளில் வணிக வழிகாட்டிகளாக ஸ்ரீ சக்தி அறக்கட்டளை மகளிர் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

மகளிர் முன்னேற்றத்துக்கான வழிகாட்டியாகத் தொடர்ந்து செயல்பட்டு வருதலுக்காக, மாநில அளவில் சிறந்த இளையோர் விருதினை நேரு யுவகேந்திரா, சக்திஜோதிக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது. சமூக சேவகியான சக்திஜோதி, கவிஞரும்கூட. நிலம் புகும் சொற்கள் எனும் இவரது கவிதை நூல், சமீபத்தில் வெளிவந்துள்ளது.

அவர் தனது சீனப் பயணக் குறிப்புகளிலிருந்து பகிர்ந்து கொண்ட சுவையான சில...

★ நமக்கு முதலில் பெரும் சவாலாக இருப்பது, சீனர்களின் உணவு வகைகளே. சைவமாக இருந்தாலும் சரி; அசைவமாக இருந்தாலும் சரி, வெந்தது பாதி வேகாதது மீதியென உள்ளே தள்ளுவதில் சீனர்கள் படு கில்லாடிகள். நாம் படு திண்டாடிகள்.

★ வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், வழிகாட்டிப் பலகைகள் என எங்கு நோக்கிலும் சீன மொழியில்தான் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. ஆங்கில எழுத்துப் பலகைகளை அங்கு காண்பது

★ சக்திஜோதி

# சீன மந்திரம்!

பயணம்



அரிது அரிது. (வெளிநாட்டினருக்கு இதுவும் படு திண்டாட்டமாகிப் போகிறது!)

★ சீனாவில் சமீப காலமாகத்தான் பிரைவேட் ஆங்கிலப் பள்ளிகளில் ஆங்கில மொழியும், சில இடங்களில் தனியாக இந்தி மொழியும் பயின்று வருகின்றனர்.

★ இந்தியா போல் சீனாவிலும், கிராமப்புறப் பெண்கள் வெகுளிகளாகவும், நகர்ப்புறப் பெண்கள் விவரம் அறிந்தவர்களாகவும் இருக்கின்றனர்.

★ சீனப் பெருஞ்சுவரின் நுழைவாயிலிலிருந்து இரண்டு கி.மீ. தூரம் படிகளேறிக் கடந்து சென்று, ஒரு முக்கிய இடத்தை அடையும் ஒவ்வொரு நபருக்கும், அவரது பெயர் மற்றும் நாட்டின் பெயர் பொறிக்கப்பட்ட சீனப் பெருஞ்சுவர் நினைவுப் பேழை ஒன்றினைப் பரிசாக அளித்து கௌரவிக்கிறது சீன அரசு. (நானும் அதனை வாங்கியிருக்கேனாக்கும்!).

★ க்யாங்கோ நகரில் 'குவான் இன்' எனப்படும் பெண் புத்தக் கடவுள் கோயில். அதன் திருவுருவச் சிலை பீடத்தைச் சுற்றிலும் இரும்புக் கம்பி வேலியில் சிவப்புத் துணி முடிச்சகள் கொண்ட பிரார்த்தனைக் கயிறுகளைக் கட்டித் தொங்கவிட்டுள்ளனர் சீனர்கள். மனத்தில் நினைத்த காரியம் நிறைவேறி விடுமென நம்பிக்கை கொண்டுள்ளனர்.

★ இந்தியாவில் இருப்பதுபோல் என்.ஜி.ஓ. எனப்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சீனாவில் எங்கும் இல்லை. தற்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு கடுமையான நிபந்தனையோடு அனுமதி அளித்து வருகிறது சீன அரசு.

★ மகளிர் சுய உதவிக் குழுக்களும் சீனாவில் இல்லை. ஆண்களுக்கும் பெண்களுக்கும் அங்கு எல்லா நிலைகளிலும் வேலை வாய்ப்பு அளித்து வருகிறது சீன அரசு. கூலித் தொழிலாளர் குடும்பங்களில் இடைநின்ற பள்ளி மாணவ மாணவிகளுக்கான தொடர் கல்வி நிலையங்களை சீன அரசே ஏற்று நடத்தி வருகிறது.

★ எங்கள் நூறு நபர்களில் ஒவ்வொரு இரண்டு நபர்களும், சீனக் குடும்பம் ஒன்றில் தங்கி ஒரு நாளின் ஆறு மணி நேரத்தைப் பகிர்ந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போதுதான் அம்மக்களின் உணர்வைப்



புரிந்து கொண்ட பயணமாயிருக்குமாம். க்யாங்கோ நகரில் ஒரு குடும்பத்தின ருடன் தங்கியிருந்து, அளவளாவினோம். கோயில், உணவு விடுதி என எங்களை அழைத்துப் போயினர். நாங்கள் பிரியும் நேரத்தில், அந்தக் குடும்பத்தினர் அனை வரும் கண் கலங்கிவிட்டனர்.

★ எங்கள் குழுவிலிருந்து நான்கு பேர் காலைச் சிற்றுண்டிக்காக ஒரு இடத்துக்கு 8.30க்குள் சென்றுவிட வேண்டுமென தகவல் சொல்லப்பட்டிருந்தது. பத்து நிமி டம் தாமதமாகச் சென்றுவிட்டோம். அத னால் எங்களுக்கு காலைச் சிற்றுண்டி கட் ஆகிப்போனது. காலத்தின் மதிப்பைப் பட்டினி போட்டுக் கற்றுத் தந்தார்கள். 'லேட் ஆனது ஒரு தப்பா?' என்றோம்.

'ஒரு வேளை உணவைக்கூட இழந்து விடலாம்; குறிப்பிட்ட நேரத்தை மட்டும் தவற விட்டுவிடக் கூடாது!' எனச் சொல்கின்றனர். இது உங்கள் தேசத் தின் பழமொழியா? எனக்கேட்டால், 'இல்லை. எங்களின் வாழ்க்கை மொழி!' எனப் பளிச்செனப் பதில் வந்தது.

★ இந்தியாவுக்குப் பின் ஓராண்டு கடந்து சுதந்திரம் பெற்றது சீனா. ஆனால், அனைத்து துறைகளிலும் இந்தியாவை விட வேகமான முன்னேற்றம் கண் டுள்ளது. இந்த வெற்றியின் ரகசியம் கேட்டால், ''ரகசியம் ஏதுமில்லை. தேசப்பற்று, கடின உழைப்பு, காலம் தவறாமை - இந்த மூன்றுமே எங்களின் தாரக மந்திரம்!'' என்று வெகு கூலாகப் பதில் கிடைக்கிறது சீனர்களிடமிருந்து.

இந்த மூன்றிலும் நாம் கொஞ்சம் 'வீக்'தானே! இந்த பலவீனத்தைக் குறைக் கும் முயற்சியை, கிராமச் சேவையில் எங்கிருந்து துவங்கலாம் என்பதே திரும்பி வரும்போது எண்ணமா யிருந்தது.

**- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**



★ பெண் புத்தக் கடவுள்

# செதுக்கினா மாதிரி... அம்சமாயிருந்தா போதும்!


இன்றைய இளம்பெண்களை மிகவும் அதிகமாகத் தாக்கும் வார்த்தை 'மாடலிங்'. மிகக் குறுகிய காலத்திலேயே பணம், புகழ், செல்வாக்கு, ஃபேன் க்ளப், ஆடம்பர வாழ்க்கை... என சகலமும் கிடைக்க வாய்ப்புள்ள துறை. ஆனால் எப்படி, யாரை அணுக வேண்டும் என பெண்களுக்கு ஏகக் குழப்பங்கள். நாம் அணுகியது சென்னையின் பிரபல மாடல் கோ-ஆர்டினேட்டரான நந்தினியை...

''மாடல் ஆகணும்னு நெனைக்கற பெண்களுக்கு நிறம் அவ்வளவு முக்கியமல்ல. உயரம் குறைந்தது 5'3 அல்லது 5'4! சருமம் பளபளவென்று ஆரோக்கியமா இருக்கணும். பல் வரிசையா இருக்கணும். எந்த மாதிரி ஹேர் ஸ்டைல் போட்டாலும் முகத்துக்கு ஸூட் ஆகணும். ஸ்லிம்மா இருக்கணும். பொதுவாகவே காமிராவில அஞ்சு கிலோ வெயிட் அதிகமா காமிக்கும். எல்லாத்தையும்விட மிக முக்கியம் மூக்கு(!). அம்சமா செதுக்கினா மாதிரி மூக்கு இருந்தாத்தான் மாடலுக்கு அழகு. எந்தக் கோணத்தில் ஃபோட்டோ எடுத்தாலும் கிளாமராத் தெரியணும். மூக்கு லட்சணமா இருக்கறது அவசியம்'' என நோஸ் புராணம் பாடும் நந்தினியை வியந்து பார்க்கிறோம்.



கடந்த ஐந்து வருடங்களாக மாடல் கோ-ஆர்டினேட்டராகச் செயல்படும் நந்தினி, மாடலாக வேண்டுமெனத் துடிக்கும் இளம்பெண்களுக்கு அட்வைஸும் தந்தார். ''ஏஜெண்ட், காமிராமேன், துண்டு விளம்பரச் செய்திகளை நம்பி உங்களை ஒப்படைக்காதீர்கள். உங்கள் புகைப்படங்களை ஈமெயிலில் அனுப்பாதீர்கள்.

இப்படி அனுப்பும் புகைப்படங்கள் பல கை மாற வாய்ப்பு இருக்கிறது. தவறான காரியங்களுக்கு யூஸ் பண்ணுவார்கள்; உங்களுக்கே தெரியாமல். ஜாக்கிரதை! எங்களை மாதிரி மாடல்



மாடலிங் மாடலிங் நந்தினி



உடையழகு... நடையழகு!

கோ-ஆர்டினேட்டர்களை அணுகினால் குறைந்த செலவில் அழகான போர்ட் ஃபோலியோ ரெடி பண்ணிக் கொடுப் போம். அட்வர்டைசிங் ஏஜென்ஸிகளுக்கு அனுப்புவோம். பத்திரமாகப் பார்த்துப் போம். ஒரு பெண் ஷூட்டிங் போனாள் என்றால் அவளுடன் இருந்து உணவு, உடை, மேக்-அப், பேமெண்ட் என சகலத் தையும் கவனிப்போம். அவங்களுக்குப் பெயர், புகழ் கிடைக்கும்; எங்களுக்கு கமி ஷன், புரிஞ்சுதுங்களா..?'' என்கிறார் நந்தினி.

''முதல்ல மாடலா வருவாங்க. அடுத்த என்ட்ரி சினிமாதான். ஊரை விட்டுப் புறப் படறதுக்கு முன்னாடி ஏஜெண்டுகளைப் பற்றி, பி.ஆர்.ஓ. பத்தியெல்லாம் தீர விசா ரிச்சுட்டுதான் கௌம்பணும். ஸ்க்ரீன் டெஸ்ட் ஷூட்டிங் என்றால் சாதாவாகத் தான் போகணும். மேக்-அப் போடக் கூடாது. உங்களுக்குத் தெரியாமலேயே உங்கள் புகைப்படம் பலவிதமான விளம் பரங்களுக்குப் பயன்படுத்தப்படும் அபா யம் உண்டு. 'நீ ரொம்ப அழகு. உன்னை எங்கேயோ கொண்டு போயிடுவேன்' என பசப்பு வார்த்தை சொல்லும் புகைப்படக் காரர்களிடம் எச்சரிக்கையா இருக்கணும்'' என்ற நந்தினி தொடர்ந்து பேசினார் :

''மாடலான பிறகு சினிமா, குண்டான பிறகு டீ.வி, சான்ஸ் இல்லாம இருந்தால் ரியாலிட்டி ஷோவின் ஜட்ஜ்... என பக்கா வாக ப்ளான் போடத்தான் செய்கிறார்கள் மாஜி மாடல்கள். மாடல் ஆகிப் பேர் புகழ் வரணும்னா எக்ஸர்சைஸ் செய்யணும், பழம், காய்கறிகள் அதிகமாகச் சாப்பிட ணும். பத்திரிகைகள் படிக்க உலகத்தைத் தெரிஞ்சுக்கணும்'' என்றும் சொல்கிறார்.

**வருங்கால மாடல்களுக்கு சில டிப்ஸ்:**

★ கடும் உழைப்பு தேவை. அத்துடன் பொறுமை டன் கணக்கில் இருத்தல் அவசியம்.

★ ஒரு புரொஃபஷனல் போட்டோ கிராஃபர் அல்லது மாடல் கோ-ஆர்டினேட்டரை நாடி போர்ட்ஃபோலியோ பண்ண வேண்டும். ப்ளாக் அண்ட் வொய்ட், மற் றும் கலரில் ஃபோட்டோ எடுத்து ரெடியாக வைத்திருக் கவும். சுமார் எட்டி லிருந்து பத்து ஃபோட் டோக்கள் போதும். எல் லாம் ஒரே மாதிரி, ஒரே போஸ்களில் இல்லாமல் வெரைட்டியாக இருத்தல் நலம்.

★ பல ஊர்களுக்கு ட்ராவல் செய்ய வேண்டி வரும். அதனால் சுதந்திர மாகச் செயல்பட வேண்டி யிருக்கும். தனிமை, பய மாயிருக்கு, எனக்கு வேலை செஞ்சு பழக்க மில்ல... இதெல்லாம் சொல்லக்கூடாது.

★ ஷூட்டிங் என்றால் பல மணி நேரம் போகும். போர் அடிக்குது, ஸ்ட்ரெஸ் என அழுதால் உங்கள் முகம் காண்பித்து விடும். ஆதலால் பொறு மையுடன் பாஸிடிவ்வாக இருக்கவும்.

★ ஃபேஷன் இன் டஸ்ட்ரீ பற்றித் தெரிந்து கொள்ளவும்.

★ பார்ட்டி என்பது சகஜம். மது, சிகரெட், போதைப் பழக்கத்தி லிருந்து காததூரம் ஓட வும்.

- லதா சேகர்







# இந்த

வெவ்வேறு காரணங்களுக்காக சென்னைக்குப் புதிதாகக் குடிபெயர்ந்து வருபவர்களும், சென்னைவாசியாகவே இருந்தாலும் தமக்கென்று ஒரு அடையாள அட்டை இல்லாமல் தவித்தவர்களும் இனி நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொள்ளலாம், தபால் நிலையத்தின் தயவில்.

''சென்னையில் மயிலாப்பூர் பகுதி முதல் தாம்பரம் வரை 94 இடங்களில் முகவரி அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பத்து ரூபாய் செலுத்தி தபால் நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து, அருகில் உள்ள தபால் நிலையங்களில் கொடுத்துவிட வேண்டும். அவர்கள் கொடுத்து முடித்தபின், விண்ணப்ப படிவத்தில் குறிப்பிட்ட முகவரியில்தான் அவர் வசிக்கிறாரா என்பதை உறுதி செய்து கொண்டு, தலைமை தபால் நிலையத்திலிருந்து அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள அழைப்பு வரும். அதன்படி ரூ. 240 செலுத்தி அவர்கள் அந்த அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம்'' என்கிறார் தலைமை தபால் நிலையத்தில் பணிபுரியும் தொழில் வளர்ச்சித் துறை மேலாளர் கோவிந்தசாமி.

''எங்கள் Chief Post Master General ராமானுஜன் அவர்களின் எண்ணத்தில் உருவானதுதான் இந்த முகவரி அடையாள அட்டை வழங்கும் திட்டம். வேலை மாற்றம் காரணமாக சென்னைக்குக் குடிபெயர்பவர்கள் காஸ் கனெக்ஷன் வாங்குவதிலிருந்து தொலைபேசி, ரேஷன் என எதற்குமே ஒரு Proof of address இல்லாமல் ரொம்பவே திண்டாடிப் போகிறார்கள். அவர்களை மனத்தில் கொண்டுதான் இந்த முகவரி அடையாள அட்டையைக் கொண்டு வர முடிவு செய்தோம். இது இந்தியாவிலேயே முதன்முதலாக சென்னையில் மட்டுமே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு கிடைக்கும் வரவேற்பைப் பொறுத்தே தமிழகத்தின் பிற பகுதிகளுக்கும், இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கும் இதை அறிமுகம் செய்யப் போகிறோம். இதுவரை பொதுமக்களிடம் நல்ல வர

# ID போதுமா?



● ராமானுஜன்

வேற்பு இருக்கிறது. நாங்கள் இந்த விண்ணப்பப் படிவத்தைக் கொடுக்க ஆரம்பித்த பதினைந்தே நாட்களில், பத்தாயிரம் விண்ணப்பங்கள் விற்கப்பட்டுள்ளன. இதில் ஆயிரம் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டு தபால் நிலையங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. வெகு சீக்கிரத்தில் இவை பரிசீலிக்கப்பட்டு பொதுமக்களைச் சென்றடைந்துவிடும். புகைப்படத்துடன், விண்ணப்பதாரரின் ரத்த வகை மற்றும் செல்ஃபோன் எண் போன்றவையும் இந்த அட்டையில் பதிவு செய்யப்பட்டிருக்கும். ஏதாவது விபத்து என்றால் கூட இந்த அட்டையில் உள்ள குறிப்புகள் உதவியாக இருக்கும். ஆனால் இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்தான் நேரிடையாக தலைமை தபால் அலுவலகத்தில் சென்று அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். உரியவரிடத்தில் இந்த அடையாள அட்டை சென்று சேர வேண்டும் என்பதில் நாங்கள் ரொம்பக் கண்டிப்பாக இருக்கிறோம்'' என்கிறார் டெபுடி மானேஜர் செல்வராம் சிங்.

**- நளினி சம்பத்குமார்**

# 21.E, சுடலைமாடன் தெரு, திருநெல்வேலி டவுன்



✱ வண்ணதாசன், எஸ். ராஜகுமாரன், தி.க.சி.

பாரம்பரியம் மிக்கது நமது கலைஞர்களின், எழுத்தாளர்களின் பயணம். அவர்களின் வாழ்வை, அனுபவத்தை செயல்பாட்டை ஆவணப்படுத்தி அடுத்த தலைமுறைக்கு அளிக்கும் அக்கறை தமிழனுக்குக் கொஞ்சம் குறைவுதான்.

அந்த ஆவண அறிவு சமீபத்தில் உத்வேகமடைந்துள்ளது. ரவிசுப்ரமணியத்தின் ஜெயகாந்தன், மா.அரங்கநாதன் ஆகியோரின் ஆவணப்படங்களை அடுத்து, தோழர் எஸ்.ராஜகுமாரன் தி.க.சி.யைப் பற்றிய ஆவணப் படத்தை இயக்கியுள்ளார். சாகித்ய அகடமி விருது பெற்ற இலக்கிய விமர்சகர் தி.க.சி. பற்றி அறுபது நிமிடங்கள் ஓடும் இந்த ஆவணப் படம் சமீபத்தில் திரையிடப்பட்டது. 'தமிழ்க் கூடம்' சார்பாக வெளிவந்திருக்கும் இப்படம், மூன்று பார்வைகளில் வாசக உரையாடுகிறது. 1.தி.க.சி. பற்றி தி.க.சி. 2. தி.க.சி. பற்றி இயக்குநர் 3. தி.க.சி. பற்றி இன்னபிற எழுத்தாளர்கள். இந்த ஆவண முயற்சியில் என்னென்ன அம்சங்கள்? ராஜகுமாரன் சொல்கிறார் : "திருநெல்வேலி வரும் இலக்கியவாதிகள், தலைவர்கள் போன்றோர் நெல்லையப்பர் கோவில், தாமிரபரணியையடுத்துப் பெரிதும் விரும்புவது தி.க.சி.யைச் சந்திக்கத்தான். 150 வருட பூர்வீக வீட்டில் தனிமையில் வாழும் இலக்கிய விமர்சகர். இன்று பிரகாசிக்கும் பல எழுத்தாளர்களை உற்சாகப்படுத்தி விமர்சனத்தால் செதுக்கி, தான் ஆசிரியராயிருந்த தாமரை இதழில் எழுதத் தளம் அமைத்துத் தந்தவர். இன்று புதியதாக ஒருவன் ஒரு கவிதை எழுதி அவருக்கு அனுப்பினால் கூட அடுத்த வாரம் அஞ்சல் அட்டையில் ஆறுதல் விமர்சனம் அவனை அரவணைத்துக் கொள்ளும். கலை மக்களுக்கானது என்கிற உன்னத ரகத்தைச் சேர்ந்த தி.க.சி. தமிழின் கடித இலக்கியம், கடித விமர்சனத்துக்குப் பெரும்பங்காற்றியவர். 84 வயதாகும் தி.க.சி.யைப் பற்றித் தமிழ் இலக்கியச் சூழலின் கருத்து என்ன? அவரின் பணியும் பயணமும் என்ன? என்பதை ஆவணப்படுத்த இதைப் பதிவு செய்தேன்." இந்த ஆவணப்படத்துக்கு தி.க.சி.யின் விலாசத்தையே தலைப்பாகக் கொடுத்தது சிறப்பு. திரை இசையமைப்பாளர் தினாவின் தந்தை 70 வயது பத்மகல்யாண் இசையமைக்க, இரா.சண்முகசுந்தரத்தின் ஒளிப்பதிவில் ஒரு ஆரோக்கியமான அவசியப் பதிவு இது என்று பாராட்டத்தான் வேண்டும்.

**- அமிர்தா**

## அருள்வாக்கு

# அன்பு

**ஸ்**வாமிக்கு நம்மிடம் இருக்கும் அன்புக்கு ஒரு காரணமும் இல்லை. காரணத்தை அவர் பாராட்டுவதாக இருந்தால் நமக்கு ஒரு வேளை சோறுகூடப் போடமாட்டார்! நம் பிழைகளையெல்லாம் பொறுத்துக்கொண்டு, நம்மை இந்த மட்டும் காப்பாற்றுபவர் அன்புமயமான பரமேசுவரனே.

அந்தக் காரணமற்ற பரமசிவ அன்பை நாமும் அப்பியசிக்க வேண்டும். தப்பு செய்பவன் என்று காரணம் பார்த்து நாம் ஏன் ஒருவனை வெறுக்க வேண்டும்? நாமே தப்புச் செய்கிறோமே, அப்போது நம்மை நாமே உதறித் தள்ளுகிறோமா? அப்படியே மற்றவர்களிடத்திலும் இருக்க வேண்டும். மகா பெரியவர்களிடத்தில் அன்பு இருப்பது விசேஷம் இல்லை. மகா பாவியிடமும் அதே அன்பு இருக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் அவனிடமே அதிக அன்பு வைக்க வேண்டும். "நாம் தப்புச் செய்வதுபோலவே இவனும் செய்கிறான். இவன் மனம் இவனை இப்படித் தூண்டுகிறது. அந்த மனத்தை நல்லதாக்க முயற்சி பண்ணுவோம்" என்று நினைக்க வேண்டும்.

ஆரம்பத்தில் ஒரே ஒரு மனிதரிடம் காரணமில்லாத தூய அன்பை வைக்கப் பழகிவிட்டால், பின்னால் அதுவே நம்மை அன்பு மயமாக்கி, அந்த அன்பை எல்லோரிடமும் பரப்ப உதவி புரியும். குருவிடம் இவ்விதம் பயன் எதிர்பாராமல் பூரண அன்பு வைக்கப் பழக வேண்டும் என்பது பெரியோர்கள் ஏற்படுத்தியுள்ள விதி. பின்பு அந்த அன்பு தருகிற ஆனந்தத்தில் பழகிப் பழகி லோகம் முழுவதும் குருவாக நினைத்து, சமஸ்தப் பிராணிகளிடமும் காரணமில்லாத சமமான அன்பு செலுத்த வேண்டும். லோகம் முழுதும் அன்பை நிரப்பினால் அதுவே ஆனந்த நிலை.

– ஜகத்குரு காஞ்சிகாமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



# நடுவர்கள்

**வா**சற்படியில் வந்து கிடந்தது அந்த அதிர்ச்சி.

'வாக்கிங்' போகலாம் எனக் கிளம்பிய போது கதவருகே, சிறகொடிந்து விழுந்த பறவை மாதிரி. சிதறிக் கிடந்த பேப்பரைத் திரட்டி எடுத்துக்கொண்டு படிக்கத் திறந்த போது, அந்தப் பயங்கரம் அதில் விரிந்து கிடந்தது. 'அமெரிக்கப் பொருளாதார நெருக்கடி; குடும்பத்தைக் கொன்று விட்டுத் தன்னையும் சுட்டுக் கொண்ட இந்திய இளைஞர்' என முதல் பக்கத்தில் விரிட்ட அந்தச் செய்தி, அந்தக் கோரச் சம்பவத்தை, கற்பனைக்கு இடம் வைக்காத ஒரு க்ரைம் நாவலைப் போல் விவரித்திருந்தது.

வாசற்கதவிலேயே சாய்ந்து கொண்டு, அதை வாசிக்கத் தொடங்கினான் மாதவன்.

**சு**ரேஷ் ஜெயராமனை, ஒரு வேளை உங்களுக்குத் தெரிந்திருக்கும். பதினைந்து வருடத்துக்கு முன், அதிகாலையிலிருந்து அமெரிக்கத் தூதகரத்தின் முன் காத்திருந்த வரிசையில், அவரை நீங்கள் பார்த்திருக்கக்கூடும். அவரை உங்களுக்கு அறிமுகம் இல்லையென்றாலும் அவரது வாழ்க்கை உங்களுக்குப் பரிச்சயமானதுதான். இந்தியாவின் படித்த, நகர்ப்புற நடுத்தரவர்க்கத்துக்குப் பரிச்சயமான வாழ்க்கை.

அப்பா ஜெயராமன், பொதுத்துறை நிறுவனத்தில் பெரிய அதிகாரி; அம்மா நிர்மலா ஆங்கிலப் பேராசிரியர். இரண்டு பேரும் மூன்று வருடங்களுக்கு முன்னர் தான் ஓய்வுபெற்றார்கள்.

பத்தாம் வகுப்புப் படிக்கும் காலத்திலிருந்தே அமெரிக்கக் கனவுகளைச் சுவாசித்து வளர்ந்த பையன் சுரேஷ். அவன் 'வெட்டி அரசியல்' பேசுவதில்லை; உள்ளூர் அரசியல்வாதிகள் எவர் மீதும் உயர்ந்த



# சிறப்புச் சிறுகதை

அபிப்ராயங்கள் கிடையாது. கணினியில் மேயும்போது, இணையத்திலிருந்து இலவசமாக இறக்கி வைத்த இசைக் கீற்றுக்களைக் கேட்பதுண்டு. ஆனால், காதுதான் அதைக் கேட்டுக் கொண்டிருக்குமே தவிர கவனம் எல்லாம் கணினியின் மீதுதான் இருக்கும். பதின்மவயதில் எழும் ஹார்மோன் கிளர்ச்சிகள்கூட அவனைக் 'கவிழ்த்து' விடவில்லை. பெண் சிநேகிதர்கள் உண்டு. ஆனால், அவர்களில் எவரும் காதலிகள் இல்லை... பள்ளி இறுதித் தேர்வில் மாநில அளவில் ஏழாவதாகவோ எட்டாவதாகவோ ராங்க். பெங்களூர் ஐ.ஐ.எம்.ல் எம்.பி.ஏ. அப்புறம் அங்கேயே ஒரு பன்னாட்டுக் கம்பெனியில் கணினி முன் அமர்ந்து ஆஃபீஸ் வேலையும் பார்த்துக் கொண்டு, அவ்வப்போது 'பிளாக்' எழுதிக் கொண்டு, ஒரு இரண்டு வருடம் போயிற்று. அதற்குப்பின் ஸ்காலர்ஷிப் கிடைத்து, அமெரிக்காவுக்குப் படிக்கப் போனான். அறையை நான்கு பேருடன் பகிர்ந்துகொண்டு, முறை வைத்து சமைத்து, கட்டில் கிடைக்காத குளிர் நாட்களில் ஸ்லீப்பிங் பைக்குள் பொதிந்து கொண்டு தூங்கி, ஸ்காலர்ஷிப் பணத்தை மிச்சம் செய்து பழைய கார் வாங்கி, அங்கேயும் ஒரு எம்.பி.ஏ. முடித்தான். அசத்தலான ப்ராஜக்ட். அதனால் கேம்பஸ் இண்டர்வ்யூவில் மெரில் லிஞ்சில் வேலை கிடைத்தது. அம்மா, தன் கூட வேலை பார்த்தவரின் பெண்ணையே தேர்ந்தெடுத்துக் கல்யாணம் செய்து வைத்தாள். அவனுக்கு அதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆட்சேபிக்கிற அளவுக்குக் கனகாவும் அப்படி ஒன்றும் சோடை போனவள் அல்ல. அவனது கனவின் இந்தியப் பிரதியாகவே அவள் இருந்தாள்.



அமெரிக்கப் பொருளாதாரத்தையும், அதன் மூலம் உலகப் பொருளாதாரத்தையும் தீர்மானிக்கும் வால் ஸ்ட்ரீட் வேலையில் அழுத்தம் அதிகம் இருந்தது. ஆனால், அது வாரிக் கொடுத்தது. 'அப்பா, மாதச் சம்பளத்தில் நாட்களை நகர்த்தும் மத்தியதர வாழ்க்கையிலிருந்து விடுதலையாகிவிட்டோம்'

**: மாலன்**

என்று உற்சாகமாகக் கடிதம் எழுதினான் சுரேஷ். 'சந்தோஷம். காசு வருகிறபோதே அதில் கொஞ்சத்தைச் சேர்த்து வை. நான் வேண்டுமானால் இங்கே இடம் பார்க்கட்டுமா?' என்று பதில் எழுதினார் ஜெயராமன். 'வேண்டாம். இங்கேயே மியூச்சுவல் ஃபண்டில் முதலீடு செய்து வருகிறேன். ஆறை நூறாக்க அதுதான் சிறந்த வழி' என்று சுரேஷ் மின்னஞ்சல் அனுப்பினான்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா அடி எடுத்து வைத்ததும், அதன் பொருளாதாரம் அதிர்வுகள் எழுப்பியது. சுரேஷ் வேலை மாற்றிக் கொண்டான். இராக் யுத்தத்தை அடுத்துப் பொருளாதாரத்தில் இறுக்கமான சூழ்நிலை நிலவியது.

''இந்தியாவுக்கே திரும்பிப் போய்விடலாமா?'' என்றாள் கனகா.

''எப்படிப் போக முடியும்? போனால் நம் கௌரவம் என்னாகும்? அவர்கள் நம்மை ஏதோ சாதனையாளர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சந்தோஷத்தில் மண் அள்ளிப் போட வேண்டுமா?''

''பெற்றவர்கள்தானே... புரிந்துகொள்ள மாட்டார்களா?''

''எப்படி முடியும் கனகா? இத்தனை நாள் இங்கே இருந்துவிட்டு, அங்கே திரும்பிப் போனால் மூச்சு முட்டும். அவ்வப்போது லீவுக்குப் போகும்போது பார்க்கத்தானே செய்கிறாய்? ஏர்போர்ட்டில் இறங்கி இமிக்ரேஷன் க்யூவில் நிற்கும்போதே எரிச்சல் ஆரம்பித்துவிடும். ஏதாவது அரசியல்வாதி அல்லது அவரது குடும்பத்தினர் க்யூவை உடைத்துக்கொண்டு முன்னால் போய் நிற்பார்கள். யாரும் கேட்க முடியாது. அதிகாரம் இருந்தால், பணம் இருந்தால், இந்தியாவில் ஒரு முன்னுரிமை. ஓர் அறிவிக்கப்படாத சலுகை. இல்லாவிட்டால் வேற மாதிரி மரியாதை. எந்த வேலையும் நேரத்தில் முடிக்க முடியாது. திட்டமிட்டு எதையும் ஆரம்பிக்க முடியாது. ஆரம்பிக்கும்போது திடீரென்று பவர் கட். இரயில்வே ரிசர்வேஷனிலிருந்து எலெக்ட்ரிசிட்டி வரை எதுவும் நிச்சயம் கிடையாது. முழி பிதுங்கிவிடும்.''

''இருபத்திரண்டு வயது வரைக்கும் நாம் அங்கேதான் வளர்ந்தோம் சுரேஷ்.''

''நாம் வளர்ந்தோம். இவர்களால் வளர முடியுமா?'' என்று குழந்தைகள் நிதினையும் நித்தியாவையும் காட்டினான் சுரேஷ். ''பனிரெண்டு வருஷம் இங்கே படித்த பிறகு அவர்களைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு போக முடியுமா? போனாலும் அங்கு ஒட்டுமா?''

அத்தனை சுலபமல்ல எனப் புரிந்த போது கனகாவுக்குக் கொஞ்சம் கலக்கமாகத்தான் இருந்தது.

ஆனால், சுரேஷ் கலங்கியது அடுத்தடுத்து அமெரிக்க வங்கிகள் திவாலான போதுதான். கலங்கினான் என்று சொல்வதைவிட இடிந்துபோனான். எவரிடமும் பேசாமல் எப்போதும் யோசனையிலேயே இருந்தான். சில நேரம் கண்ணை மூடிக் கொண்டு காற்றில் விரல்களால் கணக்குப் போட்டான். இரவில் இருட்டில் எழுந்து உட்கார்ந்துகொண்டான். இரண்டொரு முறை காரை எடுத்துக்கொண்டு முப்பது



மைல் தள்ளி இருக்கும் ராமர் கோவி லுக்குப் போய் வந்தான். அப்போது அவன் காரை ஓட்டுகிற வேகத்தைப் பார்த்தால் பயமாக இருந்தது. கனகா சற்றுக் குழம்பி, நிறையத் தயங்கி, மாமனாரைக் கூப்பிட்டு அவராக ஃபோனில் கூப்பிடுவது போலக் கூப்பிடச் சொன்னாள். ஃபோன் மணி அடித்தபோது அவன் எடுக்கவில்லை. அவள் எடுத்து ஃபோன் வந்திருப்பதாகப் போய்ச் சொன்னபோது, "செத்துப் போயிட் டேன்னு சொல்லு" என்று சீறினான்.

அதன் மறுநாளுக்கு மறுநாள் எல் லோருமே செத்துப்போனார்கள்; அவனால் கடப்பட்டு.

"பேப்பர் படிப்பதை வாக் போய்ட்டு வந்து வைச்சுக்கலாமா? ஏற் கெனவே உனக்குக் கொழுப்பேறிக் கிடக்குனு ஊர்ல பேச்சு இருக்கு. கொஞ்சம் நடந்தாலாவது அது குறையுதான்னு பார்க்க லாம்." குரல் வந்த திசையைப் பார்த்தான் மாதவன். தினமும் அவனுடன் கடற்கரை யோரம் நடைபழகும் நண்பர்கள் நின்றிருந் தார்கள்.

"கொழுப்பு கிழுப்புனு ஏன் சொல்ற? அவன் உள்ளத்தாலும் உடலாலும் இனி மையானவன். அதனால் நடந்தால் நல் லது" என்றான் நம்பி, மறைமுகமாக அவ னது டயாபடீசைச் சுட்டிக்காண்பித்து.

"காலங்கார்த்தால அவரோட தலையை உருட்ட, அவரோட ஹெல்த் ரிப்போர்ட் தான் அகப்பட்டதா உங்களுக்கு?" என்று கடிந்துகொண்டாள் அனுராதா.

மாதவன் நண்பர்களோடு கடற்கரையை நோக்கி நகர்ந்தான். அரை டிராயரும் நடப் பதற்கேற்ற காலணியும் அணிந்திருந்தார் கள். நாற்பதைத் தாண்டியவர்கள் என்றா லும் டீ ஷர்ட் அணிந்திருந்தார்கள். அதை யும் மீறி பீர் ஊற்றி வளர்த்த அவர்களது தொப்பை, வயதை அறிவித்துக்கொண்டு முன்னே நின்றது.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றால் ராஜா சம்பளம் தரவில்லை.



அந்தக் காலனிவாசிகள், அந்த அரை டிராயர்களுக்கு 'அறிவுஜீவி கிளப்' என்று பெயர் வைத்திருந்தார்கள். அதற்குக் கார ணம் அவர்களில் பலர் அறிவுசார்ந்த தொழில்களில் - 'நாலட்ஜ் இண்டஸ்ட்ரி யில்' உழைக்கும் வெள்ளைக் காலர் வித்த கர்கள். மாதவன், அங்கீகரிக்கப்பட்ட எழுத் தாளன். நம்பி, மென்பொருள் நிறுவனத் தில் குழுத்தலைவன். அனுராதா, ஐ.ஏ.எஸ்., அதிகாரி. கிறிஸ்டோபர் டெலி விஷன் செய்தியாளன். சபாபதி, வங்கி அதிகாரி.

"இத்தனை இடிக்கறோம்... சார் வாயைத் திறக்கிறாரா பார்?" என்றான் கிறிஸ்டோபர். மாதவன், மனம் முழுக்க சுரேஷ் ஜெயராமனின் கதை நிறைந்து கிடந்தது.

"யாரும் பேப்பர் பார்க்கலையா?" என் றான் மெதுவாக.

"ஏன் என்ன விஷயம்? அரசாங்கம் கவுந்திருச்சா?"

"அதற்கு நித்தியகண்டம்,

பூரண ஆயுசு. ஆனால், பாவம் அமெரிக்காவில்தான் நம்பனை மாதிரி ஒரு நடுவயசுக்காரன்...''

மாதவன், பேப்பரை விரித்துக் காட்டினான்.

''என்னய்யா கொடுமை இது?'' என்றான் நம்பி.

''என்னவாக இருக்கும்?'' என்றாள் அனுராதா.

''டிப்ரஷன்''

''அது புரிகிறது. ஆனால் ஏன்? இத்தனை படித்தும், அந்தப் படிப்பு தன்னம்பிக்கையைத் தரவில்லையே? மன உறுதியைத் தரவில்லையே''

''அப்படிச் சொல்லிவிட முடியாது. அமெரிக்காவில், ஏன் எந்த வெளி தேசத்திலும், முற்றாத இளம்வயதில் படிக்கப் போகிறவர்களுடைய மனஉறுதியை, அத்தனை எளிதாகச் சந்தேகப்பட்டுவிட முடியாது. அங்கே சின்னதும் பெரிதுமாக எத்தனையோ ஏமாற்றங்கள், அவமானங்கள். அதைக் கண்ணில் தண்ணீர் வராமல் ஜீரணித்துக்கொள்ள வேண்டியிருக்கும். வலிக்கும் அந்த நிமிடங்களில் தாங்கிப்பிடிக்க அருகில் குடும்பம் என்ற 'சேஃப்டி நெட்' கிடையாது. தாய்மொழியில்லாத பாஷையின் புதிய உச்சரிப்புக்களைப் பழகிக்கொள்ள வேண்டும். புதிய நண்பர்களைச் சேகரிக்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் எல்லாவற்றையும் ஆரம்பத்திலிருந்து புதிதாகத் துவங்க வேண்டும். அந்த அனுபவங்கள் எந்த மனிதனையும் புடம்போடும்; மன உறுதியைத் தரும்.''

''பணம் போய்விட்டதே என்ற பதற்றமாக இருந்திருக்கும். இதுபோல இன்னும் சில நிகழ்வுகளை எதிர்பார்க்கலாம்.''


''அவனுடைய அமெரிக்கக் கனவு முறிந்து விழுந்த துக்கமாகக்கூட இருக்கலாம்.''

''இருக்கலாம். ஆனால், ஒரு கோணத்தில் பார்த்தால் இது ஈகோ பிரச்னையாகக்கூட இருக்கலாம் எனத் தோன்றுகிறது. வால் ஸ்ட்ரீட் அனலிஸ்ட். ஆனால் அவனால் அவனது பணத்தையே காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை என்னும்போது அவனது ஈகோ விழுந்து நொறுங்கியிருக்கும். ஈகோ இல்லாமல் மனிதர்களால் வாழ முடியாது. ஈகோ இஸ் தி பவுண்டன் ஹெட் ஆப் ஹ்யூமன் ரேஸ். அயன்ராண்ட் சொன்னது.''

''ஈகோ இஸ் தி டிரைவிங் ஃபோர்ஸ் ஆஃப் இந்தியன் மிடில் கிளாஸ் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். ஈகோதான் நம்மை செலுத்திச் செல்கிறது.''

''உன்னை வைத்துச் சொல்கிறாயா?''

''மிடில் கிளாஸுக்கு ஈகோவே இருக்க முடியாது. அதைச் செலுத்தும் சக்தி சுயநலம்தான். நரி இடம் போனால் என்ன வலம் போனால் என்ன... என்னை விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி என்பதுதான் அவர்களது தத்துவம். தன்னைப் பாதிக்காத எந்த விஷயத்தைக் குறித்தும் அபிப்ராயங்களைக்கூட அவர்கள் உருவாக்கிக்கொள்ள மாட்டார்கள். செல்ஃப்



''அடுத்த ஜென்மத்துலேயும் நான் தமிழ்நாட்டுல வந்து பிறக்கணும்...''

''எதுக்கு...?''

''அப்பத்தானே இந்த டீ.வி. சீரியலோட முடிவைத் தெரிஞ்சுக்க முடியும்...''

- வி. சாரதி டேச்சு

செண்டிரிக் ப்பூப்பின்.''

''நான் ஆட்சேபிக்கிறேன். உலகில் ஏற்பட்ட பல மாறுதல்களுக்கு மிடில் கிளாஸ் தான் காரணம்.''

''இருக்கலாம். ஆனால் அந்த மாற்றங்களால் அதிகம் பலனடைந்ததும் அவர்களாகத்தான் இருக்கும்.''

''நான் சொன்னதைத்தான் நீயும் சொல்கிறாய். தன்னை மையமாகக் கொண்ட சிந்தனைதான் ஈகோவுக்கும் அடிப்படை.''

''நான் தத்துவ விசாரணைக்குள் போக விரும்பவில்லை. சுரேஷ் ஜெயராமன், தன் குடும்பத்தையும் சாய்த்திருக்கிறான். என்ன காரணம்?''

''என்ன காரணம்?''

''அமெரிக்கப் பொருளாதார சுனாமி, தன்னுடைய சேமிப்பையெல்லாம் அடித்துக்கொண்டு போய்விட்டது. தான் போன பின், கடன் சுமை தன் மனைவி மீதோ குழந்தைகள் மீதோ விழுந்து அவர்கள் துன்பப்பட வேண்டாம் என அவன் நினைத்திருக்கலாம்.''

''அது உண்மையாக இருக்கும் என்றால், அந்த அன்பும் தன்னை மையமாகக் கொண்டதுதான்.''

''ஆளை விடுங்கப்பா. ஆஃபீஸ் சாவி என்னிடம் இருக்கிறது. நேரத்துக்குப் போய் கல்லாவைத் திறக்கவில்லை என்றால் எனக்கு வேலை போய்விடும். என்னைச் சுட்டுக்கொள்ள என்னிடம் துப்பாக்கிகூடக் கிடையாது'' என்றான் சபாபதி.

ஏனோ தெரியவில்லை. எல்லோரும் சிரித்தார்கள்.

**மா**தவன் வீட்டுக்குத் திரும்பி, பேப்பரை இன்னொரு முறை மேய்ந்தான். எட்டாம் பக்கத்தில் ஒரு ஓரமாய் ஆந்திரப் பிரதேசத்தில் இன்னொரு விவசாயி தற்கொலை எனச் செய்தி வந்திருந்தது. கடன் சுமை தாளாமல் இந்தியாவில் 32 நிமிடத்துக்கு ஒரு விவசாயி தற்கொலை செய்துகொள்வதாகச் சொல்லியது செய்தி.


நீண்ட அங்கிப் பாதிரி
கையுயர்ந்த ஆசி
கோவணச் சிறுவன்



இந்தத் தற்கொலைகள் பற்றி என்றைக்காவது அறிவுஜீவிகள் கிளப் பேசியிருக்கிறதா என்ற கேள்வி மாதவன் மனத்தில் ஓடி மறைந்தது. இல்லை. ஏன்? எட்டாம் பக்கத்தில் வந்த செய்தி என்பதால் கவனத்துக்கே வராமல் போய்விட்டதா? அந்த மரணங்கள் முகமற்று, 32 நிமிடத்துக்கு ஒருவர் எனப் புள்ளிவிவரமாகச் சுருங்கிப் போனதால், மனத்தில் தைக்கத் தவறியதா? ஏன் இந்தச் செய்தி முதல் பக்கத்தில் இடம்பிடிக்கவில்லை? ஏன், ஏன் என்று நாள் முழுவதும் கேள்வி குடைந்து கொண்டிருந்தது.

இரவில் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தபோது, காலையில் கிறிஸ்டோபர் சொன்னது ஞாபகம் வந்தது : ''மிடில் கிளாஸைச் செலுத்தும் சக்தி சுயநலம்தான். தன்னைப் பாதிக்காத எந்த விஷயத்தைக் குறித்தும் அபிப்பிராயங்களைக் கூட அவர்கள் உருவாக்கிக்கொள்ள மாட்டார்கள். செல்ஃப் செண்டிரிக் ப்பூப்பின்.''


உண்மைதானோ? ●



''தென்னை மரத்தில் ஏன்டா ஏறித் தேங்காய் பறித்தே?''

''ஏறாம பறிக்க முடியாதுங்களே...''

- ஆர். நரசிம்மன்



''ஊழல்ல மாட்டின அந்தத் தலைவருக்கு அவங்க 'கட்சி'யோட கதவை மூடிட்டாங்களாம்!''

''ஒரு கதவு மூடினா, வேறொரு கதவு திறக்குமே?''

''கரெக்ட். இப்ப அவருக்கு 'ஜெயில்' கதவு திறந்திருக்குது.''

- வெ. சீதாராமன்



''மோப்ப நாய் வர்றதுக்கு முன்னாடியே, திருட வந்தது நம்ம கபாலிதான்னு எப்படி அவ்வளவு உறுதியாச் சொல்றே...?''

''அவன் அடிக்கிற காஸ்ட்லியான சென்ட் வாசனைதான் இன்னும் போகலையே...''

- திருத்துறைப்பூண்டி சேகர்

"அரசியல்வாதியைக் கட்டியிருக்கக் கூடாது..."

"ஏன்?"

"வீட்ல அது இல்லை. இது இல்லைன்னு சொன்னா மனுவா எழுதிக் கொடு... பரிசீலிக்கறேங் கறார்..."

- அம்பை தேவா





"போலீஸ் ஸ்டேஷன் பக்கத்துலயே கபாலி குடியிருக்கானே... ஏன்?"

"நைட்ல தொழிலுக்குப் போய்ட்டா வீட்டுக்குப் பாதுகாப்பு வேணுமாம்!"

- அம்பை தேவா

# ஹைய் ஜாலி... வசூல் மழை!



"என்ன, டாக்டர் மழையில டான்ஸ் ஆடறார்?"

"இனிமே ஆஸ்பிடலுக்குக் கேஸ் வருமாம்!"

- தென்றல் சண்முகசுந்தரம்

காா்க்கி என்றால் கசப்பு. எனவே, அந்தப் பெயரை விருப்பத்துடன் தனக்குச் சூட்டிக் கொண்டார். மாக்ஸிம் கார்க்கிக்கு ரஷ்யா மீது அளவு கடந்த வெறுப்பு இருந்தது. பன்னிரண்டாவது வயதில் வீட்டை விட்டு ஓடிப் போனார், பாட்டியைப் பார்க்க. வாஞ்சையுடன் அரவணைத்துக்கொண்ட பாட்டி, மடியில் கிடத்தி கதை, கதையாகச் சொல்லத் தொடங்கினார்.

பாட்டி இறந்தபோது, தற்கொலைக்குத் தயாரானார்; தோற்றார். பிறகு, கதைகளில் வருவது போல் நாடோடி வாழ்க்கை வாழ்ந்து பார்க்கலாம் என்று தோன்றியது. ஊர் சுற்ற ஆரம்பித்தார். ஐந்து ஆண்டுகள். ரஷ்யா முழுவதும் சுற்றினார்.


மாக்ஸிம் கார்க்கி, தகர வீட்டில் வாழும் மனிதர்கள், குழந்தைகள், திருடர்கள், வணிகர்கள், கூலி வேலை செய்பவர்கள், வேலை தேடி அலைபவர்கள், விசிறிக்கொண்டே நடந்து செல்லும் சீமாட்டிகள். வெள்ளையுடை கப்பல் மாலுமிகள், திருடர்கள், வழிப்பறிக் கொள்ளையர்கள்... சந்திக்கும் ஒவ்வொருவரிடம் இருந்தும் அனுபவங்களைத் திரட்டிக் கொண்டார். பிறகு, எழுத ஆரம்பித்தார்.

காற்றில் பறந்து போகும் அலகைப் போல் இருக்கும் அவர் எழுத்து. எப்போது பாயும், எப்போது அமைதியடையும், எப்போது பறக்கும் என்று கண்டுபிடிக்க இயலாது.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் ஆரம்பித்து இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரையிலான ரஷ்ய வாழ்க்கையை, உள்ளது உள்ளபடி படம் பிடித்துக் காட்டுகிறது கார்க்கியின் தாய். அவர் எழுதியதில் மிகவும் புகழ் பெற்ற படைப்பும், பரவலாக அனைவராலும் வாசிக்கப்பட்ட படைப்பும் இதுவே.

நாவலில் வரும் தாய் Pelageya Nelovna. காலை

# தாய் தயாரித்த




எழுந்து அடுப்பு மூட்டி தேநீர் காய்ச்ச வேண்டும். மதிய உணவு தயாரிக்க வேண்டும். பிறகு மாலை தேநீர், இரவு உணவு. மறுநாள் காலை முதல் இதே வரிசையில் மீண்டும் பணிகள் தொடங்கும். அவர் அதிகம் கவலைப்படுவதும், அதிகம் விவாதிப்பதும், அதிகம் கனவு காண்பதும் இவற்றைப் பற்றி மட்டுமே. சமையலறைதான் உலகம். தன் மகன் பாவேலைத் தவிர இன்னொருவரை அவர் அறியார். (கணவர் உயிருடன் இல்லை.)

சக்கரம் போல் ஓடிக்கொண்டிருந்த அவர் வாழ்க்கையில் திடீரென்று ஒரு தடுமாற்றம். பாவேலைத் தேடி கண்ட நேரத்தில் கண்டவர்கள் வர ஆரம்பித்திருக்கிறார்கள். இரவு வெகு நேரம் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

# புரட்சி!


மருதன்

பேசுவதற்கு அப்படி என்னதான் விஷயம் இருக்குமோ தெரியவில்லை! இரண்டு, மூன்று முறை தேநீர் தர வேண்டியிருந்தது.

பிரச்னை அதுவல்ல. அவர்கள் பயன்படுத்தும் சில சொற்றொடர்கள் அச்சமூட்டுவதாக இருக்கின்றன. புரட்சி, புரட்சி என்றபடி முஷ்டியை மடக்கி ஒருவன் கத்துகிறான். சர்வாதிகாரத்தை ஒழிப்போம் என்கிறான் மற்றொருவன். 'பொறு நண்பா, சரியாகத் திட்டமிடுவோம்' என்கிறான் பாவெல். தேநீரை எடுத்துக்கொண்டு அறைக்குள் சென்றால், அமைதியாகிவிடுகிறார்கள். எனில், பயம் வருமா? வராதா?

மெல்ல மெல்லதான் விஷயம் தெரிய வருகிறது. பாவெல் நடத்துவது போர். அடாவடி அரசாங்கத்துக்கு எதிரான போர். அதற்காகத்தான் தொழிலாளர்களை அவன் திரட்டிக் கொண்டிருக்கிறான். சமையலறையில் தான் தேநீர் தயாரிப்பது போல், அவன் தன் தோழர்களுடன் இணைந்து ஒரு புதிய ரஷ்யாவைத் தயாரித்துக் கொண்டிருக்கிறான். ஆம், ஆபத்தான பணிதான் இது. சந்தேகமேயில்லை. மாட்டினால், மீள்வது சிரமம்.

அந்தத் தாய்க்கு உடனே தோன்றியது இதுதான். தான் ஏன் தன் மகனுக்கு உதவக் கூடாது? அவன் தேர்ந்தெடுத்திருக்கும் பாதையில் அவன் தோழர்களோடு சேர்ந்து தானும் ஏன் பயணம் செய்யக்கூடாது? பெரிய அளவில் தன்னால் எதுவும் செய்ய முடியாது. உண்மை. ஆனால், தன்னால் முடிந்ததை செய்யலாம் அல்லவா? சிறிய அளவிலேனும்?



● கார்க்கி

இதுதான், இந்த மன மாற்றம்தான் ஒரு நாவலாக உருவெடுத்திருக்கிறது. கார்க்கியின் தாய்க்கு உலக இலக்கிய வரிசையில் உன்னதமான ஓர் இடம் எப்போதும் உண்டு.



# குரு பெயர்ச்சிப் பலன்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி...



## துலாம்

துலாம் ராசியினராகிய உங்களுக்கு குருபகவான் தனுசு ராசியிலிருந்து மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். அதாவது மூன்றாமிடத்திலிருந்து நான்காம் இடத்துக்குப் பெயர்ச்சி ஆகிறார். நான்காமிடம் என்பது வீடு வாசல், சுகம், கல்வி, வாகனம், வித்தை போன்றவற்றைக் குறிக்கும் இடமாகும். உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டாகும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். புதிய வீடு வாசல் வாங்கும் யோகம் கிட்டும். திருமணம் கைகூடும். உயர் கல்விக்காக மேல்நாடு செல்லும் யோகம் கிட்டும். தொழில் துறையில் நல்ல வளர்ச்சி ஏற்படும். தாய் வழி சொத்துக்கள் வந்து சேரும். வேலையில் இருந்து வந்த தொல்லைகள் விலகும். சுப விரயங்கள் உண்டாகும். குடும்பப் பொறுப்புகள் அதிகமாகும். அரசியல்வாதிகள் வெற்றி வாகை சூடுவார்கள். கலைஞர்களுக்கு ஏற்றம் மிகுந்து காணப்படும். பத்திரிகைத் துறை, அச்சுத் துறையில் உள்ளவர்களுக்கு நல்ல சன்மானம் கிட்டும். ஏற்றுமதி, இறக்குமதி தொழில் செய்பவர் நல்ல பலனை அடைய நேரிடும். கட்டடத் தொழில் செய்பவர்களுக்கு நல்ல வளர்ச்சியான யோகம் கிட்டும். வியாழன்தோறும் குருபகவானுக்கு விளக்கு ஏற்றி பூ வைத்து வழிபாடு செய்வது நற்பலனை அளிக்கும்.

## விருச்சிகம்

இந்த வருடம் குரு பகவான் தனுசு ராசியிலிருந்து மகர ராசிக்குப் பிரவேசம் செய்கிறார். அதாவது இரண்டாம் இடத்திலிருந்து மூன்றாவது இடத்துக்கு பெயர்ச்சி ஆகிறார். மூன்றாமிடம் என்பது சகோதரம், மன தைரியம், காரியம், வெற்றி போன்றவற்றைக் குறிக்கும் இடமாகும். பிள்ளைகளுக்கு இட மாற்றம் ஏற்படும். சிலருக்குத் தந்தை தாயை விட்டு இடம் மாறிச் செல்ல நேரிடும். எடுத்த காரியங்களில் வெற்றிகளைப் பறிப்பீர்கள். உடன் பிறந்த சகோதரர்கள் வழியில் நற்பலன் கிட்டும். சுப காரியப் பேச்சுவார்த்தை பலனளிக்கும். விளையாட்டுத் துறையில் ஆர்வம் அதிகரிக்கும். தந்தை வழி சொத்துகள் கிட்டும். வழக்கு, வியாபாரம் வெற்றி அளிக்கும். கலைஞர்கள் ஏற்றம் காண்பார்கள். புதிய பட வாய்ப்புகள் வந்து சேரும். ஏற்றுமதி, இறக்குமதி தொழிலில் நல்ல வருவாய் கிட்டும்.



வீடு, மனை வாங்க உகந்த காலம். வியாழக்கிழமை தோறும் ராகவேந்திர சுவாமியை வழிபட்டு வர நற்பலன் அதிகரிக்கும்.

சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயர் சுவாமி வழிபாடு செய்துவர சங்கடங்கள் தீரும்.

# தனுசு



குரு பகவான் ஜென்ம ராசியில் இரண்டாம் இடத்துக்குப் பெயர்ச்சி ஆகிறார். இரண்டாமிடம் தனம், கல்வி, குடும்பம், வாக்கு, வித்தை, நிதி நிலைமை போன்றவற்றைக் குறிக்குமிடமாகும். ஆதலால் கடந்த காலத்தில் ஏற்பட்ட பண நெருக்கடிகளை முதலில் சரி செய்வார். பொருளாதாரம் உயரும். பணக்கஷ்டம் நீங்கும். குடும்ப வாழ்வில் ஏற்பட்ட மனப் புயல்கள் ஓயும். வாழ்க்கைத் துணைவர் வந்து சேருவார். கடந்த காலத்தில் ஏற்பட்ட அவமானம், தலைகுனிவு போன்றவை சரியாகும். சமூகத்தில் நல்ல மதிப்பு, மரியாதை ஏற்படும். கல்வியில் ஏற்பட்ட கணக்கம் மாறி ஊக்கம் ஏற்படும். கடன் தொல்லை தீரும். உடல் நிலையில் இருந்து வந்த பிரச்னைகள் தீரும். நண்பர், உறவினர்கள் இடையில் இருந்து வந்த மனக்கசப்பு விலகும். வழக்கு வெற்றிப் பாதையில் செல்லும். தடை விலகி திருமணம் கைகூடும். மகப்பேறு இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிட்டும். ராகு/கேது வழிபாடு செய்து வர நற்பலன் அதிகரிக்கும்.

# மகரம்

இந்த வருடம் குருபகவான் தனுசு ராசியிலிருந்து மகர ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார். இதுநாள் வரை பன்னிரண்டாமிடம் என்று சொல்லக்கூடிய மறைவு ஸ்தானம், விரய ஸ்ானத்தில் சஞ்சரித்த குரு தற்போது ஜென்ம ராசிக்குப் பிரவேசம் செய்வதால் வாழ்வில் புதிய ஒளி பிறக்கப் போகிறது. கடந்த வருடத்தில் பிரதான கிரஹங்கள் எதுவும் நல்ல இடத்தில் சஞ்சாரம் செய்யாததால் பலமான சோதனைகளைச் சந்தித்தீர்கள். ஆனால் தற்பொழுது குரு பகவான் ஜென்ம ராசிக்கு வரப்போவதால் வாழ்வில் புத்துணர்ச்சி ஏற்படும். சிரமங்கள், கஷ்டங்கள் விலகும். மனச் சலனம் விலகும். குழந்தைகள் பற்றிய கவலை நீங்கும். வீட்டில் சுபகாரியப் பேச்சுவார்த்தை நல்ல பலன் அளிக்கும். கணவன் மனைவிக்குள் இருந்துவந்த கசப்புகள் போகும். விலகிப் போனவர்கள் விரும்பி வருவார்கள். நீண்ட தூரப் பிரயாணம் வந்து சேரும். வீடு மாற்றம் உண்டாகும். பூர்வீக வழியில் சொத்து பாகப்பிரிவினை ஆகும். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வியாழன்தோறும் குருபகவானை வழிபட்டு வரவும். ராகு/கேது வழிபாடு செய்துவர நற்பலனை அடைவீர்கள்.



தஞ்சை பரத்வாஜ்

(06.12.2008 முதல் 16.12.2009 வரை)



# கும்பம்

குருபகவான் இந்த வருடம் பதினொன்றாம் இடத்திலிருந்து பன்னிரண்டாவது இடத்துக்குப் பெயர்ச்சி ஆகிறார். பன்னிரண்டாம் இடம் என்பது விரய ஸ்தானம் ஆகும். குருபகவான் வருவது அவ்வளவு சிறப்பு இல்லை. அநாவசியமான செலவுகள் வந்து சேரும். தொழில் துறையில் அகலக் கால் வைக்கக்கூடாது. பார்த்து முதலீடு செய்வது நற்பலனை அளிக்கும். தடைகள் விலகித் திருமணம் கைகூடும். பண வசதி சற்று குறையும். தொழில்துறையில் சற்று மந்தமான சூழ்நிலை காண்பிக்கும். கடன் சுமை அதிகரிக்கும். வழக்கு, வியாபாரம் சற்றுத் தள்ளி போகும். உடல் நிலையில் கவனம் தேவை. வேலையில் இடமாற்றம் உண்டாகும். கல்வியில் அக்கறை எடுத்துப் படிக்கவும். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் வந்து சேரும். யாருக்கும் ஜாமீன் போடாமல் இருப்பது நல்லது. சினிமாத் துறையில் உள்ளவர்களுக்கு சற்று மந்தமான சூழல் ஏற்படும். வியாழன் தோறும் குருபகவானுக்கு பூ வைத்து வழிபட்டு தீபம் ஏற்றவும். சனி பகவானுக்கு சனிக்கிழமைகளில் தீபம் ஏற்றி சனி காயத்ரி படித்து வர சங்கடங்கள் தீரும்.

# மீனம்

இந்த வருடம் குரு பகவான் பதினொன்றாம் இடத்துக்கு பெயர்ச்சி ஆகிறார். பதினொன்றாம் இடம் என்பது லாப ஸ்தானம் ஆகும். தொழில் துறையில் அபரிமிதமான லாபத்தை அளிப்பார். மூத்த சகோதரன், சகோதரிகளால் அனுகூலம் உண்டாகும். புதிய தொழில் முயற்சி பலனளிக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தடை விலகித் திருமணம் கைகூடும். பூர்விகச் சொத்துகள் வந்து சேரும். நண்பர்/உறவினர் அனுகூலம் ஏற்படும். விலகிப் போனவர்கள் விரும்பி வருவார்கள். கல்வி வளம் மேலோங்கும். மேல்நாடு சென்று கல்வி கற்கும் யோகம் கிட்டும். மகப்பேறு பாக்கியம் உண்டாகும். மனத்தில் தைரியம் அதிகரிக்கும். வீடு/மனை வாங்க உகந்த நேரம். வாகன சுகம் கிட்டும். வேலைப்பளு குறையும். புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். கடன் சுமை தீரும். சமூக ஆர்வலர்களுக்கு நல்ல விருது கிடைக்கும். ஏற்றுமதி, இறக்குமதி தொழில் செய்பவர்களுக்கு நல்ல வருவாய் கிட்டும். கலைத் துறையில் உள்ளவர்களுக்கு நல்ல ஏற்றம் மிகுந்த காலம். செவ்வாய், வெள்ளிக்கிழமைதோறும் ராகு/கேது வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.





திருப்புகழ் ஏ.எஸ்.ராகவன் தம்பதியர்

# திருப்புகழ் யாத்ராவில் ஒரு திருவிழா!

பிரதிபலன் பாராமல், தமிழின் ஆன்மிக ஆன்மாவான திருப்புகழை தேசமெங்கும் பரப்பி வருபவர் திரு ஏ.எஸ்.ராகவன். இவர் திருச்செந்தூருக்கு அருகிலுள்ள ஆறுமுக மங்கலத்தில், இசைப்பாரம்பரியம்மிக்க குடும்பத்தில் பிறந்தார். இளம்பிள்ளை வாதத்தினால், இரு கால்களும் நடப்பதற்குப் பயனில்லாமல் போயின. எந்த வைத்தியமும் பலனளிக்கவில்லை. பெற்றோர்கள் அவரை செந்திலாண்டவனுக்கே அர்ப்பணித்து விட, அப்போது நிகழ்ந்தது அற்புதம். சிவலிங்க நாடார் எனும் முருகபக்தர் அவருக்குச் சிகிச்சை அளித்து, திருச்செந்தூர் கோயில் மணலிலே நடக்க வைத்தார். முருகனின் திருவருளால் கிடைத்த நடையைக் கொண்டு, அவன் புகழ் பரப்பவே யாத்திரை துவங்கினார் ராகவன்.

அதுமுதல், முருகன் புகழ் பாடுவதையே சிரமேற்கொண்டு தன் வாழ்க்கையையே அதில் அர்ப்பணித்தார். கர்நாடக இசையில் நல்ல தேர்ச்சி பெற்றார். அருணகிரிநாதரின் 501 திருப்புகழ் பாடல்களுக்கு, சந்த தாளத்துடன் இசை அமைத்துள்ளார்.

மிகக் கடினமான திருப்புகழ் பாடல்களை, அவர் பிரித்துப் பாடும்போது, கேட்பவர்களுக்கு அதன் பொருள் விளங்கி, ஈடுபாடு அதிகரிக்கும். அவரின் அன்பும், எளிமையும், உண்மையான பக்தியும் பலரைக் கவர்ந்தன.

கட்டுப்பாடுடன் பாடும்படியான ஒரு திருப்புகழ் இசைவழிபாட்டு முறையை அமைத்து, எல்லோருக்கும் இலவசமாக கற்றுக் கொடுத்தார்.

டில்லியில் ஆரம்பித்து, பம்பாய், பெங்களூர், கல்கத்தா, சென்னை முதலிய பல இடங்களில் அவருக்கு ஐயாயிரத்துக்கும் மேல் சீடர்கள் பெருகியுள்ளனர்.

கந்தர் அனுபூதி பாடல்கள் அனைத்தையும் இந்தச் சீடர்களால் புத்தகம் பாராமல் பாட முடியும் என்பது, அவர்களது குருஜியுடைய எளிய கற்பிக்கும் முறைக்குச் சான்று!

சீடர்களும், குருஜியின் குடும்பத்தாரும் இணைந்து அவரது சதாபிஷேக விழாவை, சென்னை அடையார் காந்தி நகரில் உள்ள காஞ்சி மஹாஸ்வாமி அனந்த மண்டபத்தில் வெகு சிறப்பாக நடத்தினர். நூற்றுக்கணக்கானோர் இவ்விழாவில் பங்கேற்றனர். சீடர்களின் கியூ பெரிய அரங்கைக் கடந்து தெருவாசல் வரை நீண்டபோதிலும் அமைதி, கட்டுப்பாடு! அவரின் திருப்புகழ் பயணத்துக்கே சதாபிஷேகம் நடந்தது போலிருந்தது.


– கே. முத்துஸ்வாமி

**கல்லூரிச் சாலை**

Pearl Academy of Fashion க்குள் நாம் நுழைந்தபோது முற்றிலும் வித்தியாசமான ஒரு கல்லூரிக்குள் நுழைந்திட்ட பிரமிப்பும் வியப்பும் நம்மைச் சட்டெனத் தொற்றிக்கொண்டன.

''ஸ்வாகதம், நமோஸ்தே, நமஸ்கார், ஸாஸ்த்ரி ஆகால், வந்தனம்'' கோரஸாக வரவேற்க, நாம் திகைத்தோம். ''மினி பாரதவிலாஸா உங்களுக்கு வணக்கம் சொல்றோம்னு பாக்கறீங்களா? இந்தியாவுல பல மாநிலங்கள்லேர்ந்தும் இங்க வந்து இந்த காலேஜ்ல நாங்க சங்கமிச்சிருக்கோம்'' எனப் பேச ஆரம்பித்தார் சப்பி அகர்வால்.

''டில்லி, மும்பை எல்லாம் கம்பேர் பண்ணினா, சென்னை அவ்வளவா ஸ்டைல் காட்றதுல முன்னேறலைன்னுதான் சொல்லணும். இப்படி ட்ரெஸ் பண்ணினா இவங்க என்ன நினைச்சுப்





பாங்களோ? அவங்க என்ன சொல்வாங்களோ. என நினைச்சு நினைச்சே பாதி பொழுது போய்டுதுப்பா'' என சலித்துக் கொண்டார். ''ஹேய் என்ன... சென்னையைப் பார்த்தா ஸ்டைல் பண்ணத் தெரியலைன்னு சொல்ற...? நான் சுத்தமான அக்மார்க் சென்னைப் பொண்ணு. நம்ம நமீதா தொடங்கி ஸ்ரேயா வரைக்கும் என்னைப் பார்த்துத்தான் ஸ்டைல் கத்துக்கறாங்க தெரியுமா?'' என்றபடி தான் கழுத்தில் கட்டியிருந்த ஸ்கார்ப்பைச் சரிசெய்து கொள்கிறார் நந்திதா.

''இதோ கட்டியிருக்கேனே இந்த ஸ்கார்ப். இது, அடாது மழை பெஞ்சாலும் கழுத்துல இருக்கும். விடாத




வெயில் அடிச்சாலும் விழாம இங்கேயே தான் இருக்கும். இதுதான் என் ஸ்டைல் ஸ்டேட்மென்ட். நிறைய படத்துல பாருங்க சினிமா ஹீரோக்கள்கூட இதே ஸ்டைல்தான் காப்பி பண்றாங்க. எல்லாம் எங்கிட்ட



கத்துக்கிட்ட பாடம்தான்'' என்ற நந்திதாவை, ''ஓஹோ அதான் நம்ம க்ளாஸ் பசங்க கூட கரெக்டா நந்திதா பெஞ்சு பக்கம் வந்து, அவ இல்லாத போது ஸ்கார்ப்பைத் திருடப் பாக்கறாங்களா?'' என ராதிகா கோயல் கேள்வி எழுப்ப சில்லென சிரிப் பொலி.

''ஹே ஹே, நம்ம நடமாடும் bullet proof மேட்டரை மறந்துடாதீங்க'' எனப் பின்னாலிருந்து குரல்கொடுத்தார் ஸ்டுடண்ட் கவுன்சிலர் ராஷ்மி. ''அது என்ன புல்லட் மாட்டர்?'' என அப்பாவியாய்க் கேட்க, ''அதுதாங்க உடம்பு பூரா ஓர் இடம் கூட விடாம, எல்லா இடத்துலேயும் மெட்டல் மெட்டலா மாட்டிக்கிட்டு ஃபாஷன்ங்கற பேர்ல, பயங்கரமா படுத்தறாங்களே அவங்கதான் அது'' என விளக்கவுரை அளித்த பிராஜன்யா, ''என்னைப் பாருங்க காது குளிர எப்படி விதவிதமா ரிங்க்ஸ் மாட்டியிருக்கேன்னு. இதுதான் சூப்பர் இல்ல'' என்று கேட்டார். ''இதப் பாருங்க ஸ்டைல் மன்னரை. இவரை மாதிரி காலுல கொலுசு, தத்துவம்ஸ்ன்னு வரைஞ்சுக்கிட்டு சென்னை வீதிகள வலம்வரமுடியுமா?'' என்றபடி நிர்மலை அழைத்தார் செந்தில். ''இந்தக் கொலுச செய்ய மட்டுமே எக்கச்சக்கமா செலவு ஆச்சு.



ஒவ்வொரு மாசமும், இந்த டாட்டுஸ்க்காகவே 15,000 வரை செலவு செய்வேன். அந்தக் கால தாத்தாக்கள் குத்திக்கிட்ட பச்சை பேரு தாத்தூஸ். இதோ இப்போ நாங்க குத்திக்கிற துக்கு பேரு டாட்டூஸ்'' என புது விளக்கவுரை அளித்த வரைத் தொடர்ந்து, ''என் டாட்டூஸைப் பாருங்க... இது மேரி மாதா... இத வரைஞ்சுக்க 11,000 செலவு செஞ்சேன்'' எனத் தன் கையைக் காண்பித்தார் ஸாயல்.



''எங்க அம்மா அப்பா, நாங்க ஐ.ஏ.எஸ். ஆவோம்னு கனவு கண்டாங்க. ஆனா நாங்க ளெல்லாம் இப்போ ஐ பாட் கலெக்டர்ஸா மாறிட்டோம்'' என கோரஸாகக் குரல்கொடுத்து அதிரடி ஸ்டேட்மென்ட் விடுகின்றனர்.

**- நளினி சம்பத்குமார்**

படங்கள் : **குமார்**

# சட்டம் ஒரு கழுதை

முதலில், நான் மன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டும். யாரிடமென்று உங்களுக்குச் சொல்ல வேண்டிய தில்லை அல்லவா? ஆம், நீங்கள் நினைப்பது சரிதான். கழுதையிடந்தான்! கழுதையைச் சட்டத்துடன் ஒப்பிட்டது கழுதைக்கு அகௌரவமாகத்தான் தோன்ற லாம். ஆனால், இந்த அவதூறுக்கு நான் பொறுப்பாளியல்லேன். 'சட்டம் ஒரு கழுதை' என்று கூறியவர் ஓர் ஆங்கில ஆசிரியர். எனவே, கழுதை அவதூறு வழக்குத் தொடர எண்ணினால், தப்பு... தப்பு! மறுபடியும் மன்னிக்க வேண்டும். கோர்ட்டுக்குப் போவது போன்ற அறிவீனமான செயலைக் கழுதை செய்யுமா என்ன? ஒரு நாளுமில்லை. அது மனிதர்களால்தான் முடியும்!

எனினும், சட்டத்தைக் கழுதையுடன் ஒப்பிடுவது மிகவும் பொருத்தமான விஷயம் என்று நான் குறிப்பிடா திருக்க முடியவில்லை. அவதூறு வழக்கைப் பற்றிய அச்சம் இல்லாதபடியால் இதைத் தாராளமாகச் சொல்லலாம்.

ஐரோப்பியர்கள் கீழ்நாட்டுக் கறுப்பு மனிதர்களின் சுமையைச் சுமந்து திரிவது என் ஞாபகத்துக்கு வரும். அடுத்தாற்போல், சட்டத்தைப் பற்றி ஆங்கில ஆசிரியர் கூறியதும் நினைவில் தோன்றும்.

ஆம்; கழுதையின் மீது எவ்வளவு சுமை போட்டாலும் அது எப்படி முணுமுணுக் காமல் சுமந்து செல்கிறதோ, அப்படியே சட்டத்தின் மீது எவ்வளவு பாரம் போட்



டாலும் அது தாங்குகிறது. உங்களுக்கு இதில் சந்தேகம் இருந்தால் ஓர் உதாரணம் கூறுகிறேன்.

சென்னை ஹைகோர்ட்டில் சில மாதங்களுக்கு முன் பந்தகப் பத்திரம் சம்பந்தமான ஒரு வழக்கு நடந்தது. பந்தக நிலங்களில் தனக்கு ஜீவனாம்ச பாத்தியம் உண்டென்று மீனாக்ஷியம்மாள் என்னும் பெண்மணி ஒரு குறுக்கு வழக்குத் தொடுத்தாள். அதில் அந்த அம்மாளுக்கு அநு கூலமாகத் தீர்ப்புக் கிடைத்தது. ஜீவனாம்சத் தொகையும் செலவுத் தொகையுமாகச் சேர்த்து ரூ.503-8-0 அந்த அம்மாளின் வக்கீல் பிரதிவாதிகளிடமிருந்து பெற்றுக்கொண்டார். ஆனால், வக்கீல் இந்தப் பணத்தை மீனாக்ஷியம்மாளிடம் கொடுக்கவில்லை. பலமுறை கேட்டும் பயனில்லாமற் போகவே, அந்தப் பெண்மணி வக்கீல் மீது வழக்குத் தொடுத்தாள். இவ்வழக்கு கீழ்க் கோர்ட்டுகளையெல்லாம் தாண்டி ஹைகோர்ட்டுக்கு வந்தது. நீதிபதி மாதவ நாயரும், நீதிபதி ஜாக்ஸனும் வழக்கை விசாரித்தார்கள். வக்கீல் ஸ்ரீமான் விசுவநாதய்யரின் சார்பாக மிகவும் பிரபலமான ஒரு வக்கீல் தோன்றி வாதமிட்டார். மேற்படி ஜீவானம்ச வக்கீல் ஸ்ரீமான் விசுவநாதய்யருக்கு வக்கீல் கூலி ரூ.550 வர வேண்டுமென்றும், அதற்காகத் தம் கட்சிக்காரருக்குத் தீர்ப்பான தொகையை அவர் நிறுத்திக் கொண்டதாகவும் எடுத்துக் கூறினார்.

ஏன்? நன்றாயிருக்கிறதல்லவா? ஜீவனாம்சமும் செலவுத் தொகையும் சேர்ந்து ரூ.503-8-0. இத்தொகைக்காக வழக்கு நடத்திய வக்கீலுக்கு கூலி ரூ.550. இது அநீதியே ஆனாலும் சட்டம் அதற்கு இடங் கொடுக்கிறதென்றும், வக்கீல் குற்றவாளியல்லவென்றும் கனம் நீதிபதிகள் தீர்ப்பளித்தார்கள்!

இது சம்பந்தமான சட்டத்தைத் திருத்தியமைத்தால் நலமென்று அவர்கள் யோசனை சொன்னார்கள்.

அதுதான் விஷயம். சட்டம் வேறு, நீதி


## வழக்குத் தொடராமலிருக்க பிள்ளையாரை வக்கீலாக அமர்த்தியிருப்பதாகக் கேள்விப்படுகிறேன்



வேறு. இரண்டும் ஒன்றுதான் என்று நினைக்கிறார்கள்.

இப்படி நினைத்த சாது மனிதன் ஒருவன் வெளியூர் கோர்ட் ஒன்றில் நீதிபதியைப் பார்த்து, ''எஜமானே! நீதி செய்ய வேண்டும்!'' என்று முறையிட்டான். நீதிபதி கொஞ்சம் நகைச்சுவை உள்ளவர். அவர் உடனே, ''இங்கே நீதி கிடையாது. அப்பனே! நீதி கிடையாது. சட்டம்தான் உண்டு'' என்று விடையிறுத்தார். ஏழை ஸ்திரீ ஒருத்தியின் ஜீவனாம்சத் தொகை முழுவதையும் வக்கீல் விழுங்கிவிடுதல் நீதிக்கும் பொருந்தாது என்று குட்டிச் சுவரைக் கேட்டாலும் சொல்லும். இதைத் தென்னாப்பிரிக்கா வெள்ளைக்காரன்கூட ஒப்புக்கொள்வான். ஆனால், சட்டம் அதற்கு இடங்கொடுக்கிறது. சட்டத்தின்படி, தமக்குப் பாக்கிச் சேர வேண்டிய ரூ.46-8-0க்கு அந்தப் பெண்மணியின் மீது வழக்குத் தொடராமலிருந்தாலே பெரும் பாக்கியம்! (அவர் அப்படிச் செய்யாதிருப்பதற்காக, மீனாக்ஷியம்மாள் மூன்று தேங்காயும், நூற்றெட்டுக் கொழுக்கட்டையும் 'பீஸ்' பேசிப் பிள்ளையாரை வக்கீலாக அமர்த்தியிருப்பதாகவும் கேள்விப்படுகிறேன்.) இது எவ்வாறாயினும் 'சட்டம் ஒரு கழுதை' என்று ஆங்கில ஆசிரியரின் வாக்கு உண்மை அல்லவா? நீங்களே சொல்லுங்கள்.

**ம**யிலாப்பூரில் ஏறக்குறைய எழுபது வயதானவரும் ஆசார சீலருமான ஒரு பெரிய வக்கீல் இருக்கிறார். இவர் சமீபத்தில் விவாக வயதுக் கமிட்டியாரின் முன்பு சாட்சியம் தருகையில், பெண்களுக்குப் பதினொரு வயதுக்குள் கல்யாணம் செய்து, பெரியவளாகிப் பதினாறாம் நாள் சாந்தி முகூர்த்தம் நடத்தி, அதற்கடுத்த வருஷம் குழந்தை பிறந்து, அதில் தப்பிப் பிழைத்தால் இருபது வயதுக்குள் கிழவியாகிக் கண்ணால் பார்க்க வேண்டுமென்றும், பெண்களுக்கு அடுப்பங்கரைக் கல்வியே அதிகமென்றும் அதற்கு மேல் கொடுத்தால் அஜீரணமாகிவிடுமென்றும், இன்னும் பல முன்னேற்றமான யோசனைகளும் கூறிக் கடைசியில், இவைதான் நம்முடைய மதம் என்றும், 'என் மதத்துக்காக நான் உயிரையும்விடச் சித்தமாயிருக்கிறேன்' என்றும் சொல்லி முடித்தார்.






ஆனால், தற்போது அவர் தினந்தோறும் கோர்ட்டுக்கு வந்து பணத்துக்காக உயிர் விடுவதைத்தான் நாம் பிரதியக்ஷமாகப் பார்க்கிறோம். இப்பெரியார் சமீபத்தில் ஒரு அரிய யோசனை கூறினார். அதாவது, 'பத்து வருஷ காலத்துக்குச் சட்டக் கலாசாலையை மூடி வைக்க வேண்டுமென்று அவர் தெரிவித்தார்.

இந்த யோசனை எனக்கு மிகவும் பிடித்திருந்தபடியால் சட்டக் கலாசாலை மாணாக்கர் சிலரிடம் இதைப் பற்றி அபிப்பிராயம் கேட்டேன். 'இதைவிட, குறிப்பிட்ட வயது தாண்டிவிட்ட வக்கீல்கள் கோர்ட்டுக்கு வரக் கூடாதென்று சட்டம் செய்தால் நலம்' என்று அவர்கள் சொன்னார்கள்.

பின்னர் கட்சிக்காரர் சிலரிடம் இந்த யோசனையைப் பற்றிச் சொன்னேன். 'சட்டக் கலாசாலையை மூடுவதை விடக் கோர்ட்டுகள் எல்லாவற்றையும் பத்து வருஷ காலத் துக்கு மூடிவிட்டால் சர்வோத்தம்மாயிருக்கும்' என்று அவர் கள் அபிப்பிராயப்பட்டார்கள்.

வக்கீல் தொழிலில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை இவையெல்லாம் தெரிவிக்கின்றனவல்லவா?

''வக்கீல்களின் தொகை நாளுக்குநாள் பெருகி வரு கிறது; கட்சிக்காரர்களோ நாளுக்குநாள் ஏழையாகி வரு கிறார்கள். எனவே, போகும் வழியென்ன?'' மாயவரத்துக்கு ஜில்லா நீதிபதி வந்திருந்தபோது வக்கீல்கள் அவரை இந்தக் கேள்விதான் கேட்டார்கள். ''வேறு வழியொன்றும் எனக் குப் புலனாகவில்லை. ஈசுவரனைப் பிரார்த்தியுங்கள்'' என்று அவர் பதில் அளித்தார். தற்போது மாயவரம் வக் கீல்கள், 'ஈசுவரா! வழக்குகளும் கட்சிக்காரர்களும் பெருகும் படி அருள் செய்வாய்!'' என்று தினந்தோறும் மூன்று வேளை பிரார்த்தனை செய்து வருகிறார்களென்று நம்பு கிறேன்.

'ஆகவே, வக்கீல் தொழிலும் தலைகீழ்ப் பாடம்தான் போலும்' என்று நீங்கள் முடிவு செய்திருக்கலாம். அதில் சந்தேகமே கிடையாது. வழக்குகளும், விவகாரங் களும் அதிகமாக ஆக, வக்கீல்களுக்கு வருவாய் அதிகம் என்றிருக்கும் வரையில், அவர்கள் சம ரசத்தில் அதிகப் பற்றுக் கொள்ளாதிருத்தல் ஆச்சரியமாகாதன்றோ!

வைத்தியர்களைப் போலவே வக்கீல்களும் மனிதர்கள்தான் என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். சீன தேசத்தார் வைத் தியர்கள் விஷயத்தில் கையாளும் கதை ஒன்று தான் இந்நிலைமைக்குப் பரிகாரமாகும். நம்முடைய குடும்ப வக்கீல், நமக்கும் அண்டை அயலார்களுக்கும் நேரிடும் சச்சரவுகளையெல்லாம் சமரசமாகத் தீர்த்து வைத்து, நம்மைக் கோர்ட்டுக்கு இழுக்காத வரையில், அவருக்கு மாதம் இவ்வளவென்று சம்பளம் கொடுத்து வருவோம். அப்படி யின்றிக் கோர்ட்டுக்குப் போக நேர்ந்துவிட்டால் சம்பளத்தை நிறுத்தி விட வேண்டும். ஸ்டாம்புக் கட்டணம் முதற்கொண்டு கோர்ட்டு சேவகனுக்கு இனாம் வரையில் எல்லாச் செலவுகளும் வக்கீலே செய்ய வேண்டும்.

ஒரு தீர்மானம் ஏகமன தாக நிறைவேறிவிட்ட படியால்... இன்னொரு பிரேரேபணையும், உங்கள் முன் கிளப்ப எனக்குத் தைரியம் உண்டாகிறது. போலீஸ் இலாகா விஷயத்



திலும், ஏன் இதே முறையைக் கையாளக் கூடாது? ஊரில் திருட்டு, கொலை, கலவரம் எதுவும் நிகழாதிருக்கும் வரையில் போலீஸ்காரர்கள் தாராளமாகச் சம்பளம் வாங்கிக் கொள்ளட்டும். அதிகக் காலம் எந்தப் பிரதேசத்தில் குற்றம் நடவாமலிருக்கிறதோ, அந்தப் பிரதேசத்திலுள்ள போலீஸ்காரர்களுக்குச் சம்பள உயர்வும் உத்தியோக உயர்வும் அளிப்போம். ஆனால், கொலையும் களவும் எங்கே நிகழ்கின்றனவோ, அங்கேயுள்ளவர்களுக்கு சம்பளப் பிடித்தம் செய்வோம். ஏன் முதல் தரமான ஏற்பாடல்லவா?




இதற்கு மாறாக இப்போதுள்ள ஏற்பாட்டின் ஊழலைக் கவனியுங்கள். கொலை, களவு நடந்த பின்னர் குற்றவாளிகளை யார் கண்டுபிடித்துத் தண்டனை வாங்கி வைக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் சம்பள உயர்வு, உத்தியோக பதவி எல்லாம்! இந்த நிலைமையில், நீங்களே போலீஸ்காரர்களாயிருந்தாலும், குற்றம் நிகழாமல் தடுப்பதில் உங்களுக்குச் சிரத்தை இருக்குமா? நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள். பார்க்கலாம்!

இதே முறையை இன்னும் சிலர் விஷயத்திலும், நீங்கள் கையாண்டு பார்க்க விரும்புவீர்களென்று நான் அறிவேன். உதாரணமாக, சிற்சில ஆசாமிகள் புதிய நாவல் எதுவும் எழுதாமல் இருப்பதற்காக நீங்கள் பணம் கொடுக்கச் சித்தமாயிருப்பீர்கள். சில பத்திரிகைகள் வெளிவராமல் இருக்கும் பொருட்டுப் பணம் கொடுக்கவும் சம்மதிப்பீர்கள். உங்களுக்கு அடுத்த வீட்டில் உள்ள சங்கீத வித்வான் பாடாமல் இருப்பதற்கும், உங்கள் விதியில் வசிக்கும் நாககரக்காரர் நாயனம் வாசியாமல் இருப்பதற்கும், நீங்கள் மனமுவந்து பணங் கொடுப்பீர்கள். சிற்சில நடிகர்கள் அரங்கத்துக்கு வராமல் இருக்கவும், சிற்சில பிரசங்கிகள் மேடையில் ஏறாமல் இருக்கவும் ஒப்புக்கொண்டால் நீங்கள் சந்தோஷமாகப் பணம் கொடுப்பீர்கள். ஏன்? 'கல்கி' கட்டுரை எழுதாமல் இருக்கச் சம்மதித்தால் பணம் கொடுக்க முன்வரக் கூடியவர்களும் உங்களில் சிலர் இருக்கலாம்! என்னைப் பற்றிய வரையில் அதற்கு இணங்க ஆட்சேபமே கிடையாது. கட்டுரை எழுதாமல் இருப்பதற்காக எனக்கு யாராவது பணங் கொடுத்தால் இரண்டு கையையும் நீட்டி வாங்கிக்கொண்டு, 'கப்சிப்' என்று இருக்கத் தயார். அத்தகைய புண்ணியவான்கள் யாராவது முன் வருகிறார்களா? என்று அடுத்த 'விகடன்' இதழ் வெளியாகும் வரையில் பொறுத்திருந்து பார்க்கிறேன்.

**– ஆனந்தவிகடன், 15.12.1928**

# வீடு திரும்புதல்

• உமா ஷக்தி



மரங்களும் சாலைகளும்
முடிந்து போன ஒரு
புள்ளியில்
இருந்ததாக ஞாபகம்
எனக்கொரு வீடு!
எனது சௌந்தர்யத்தையும்
இளமையையும் எடுத்துக்கொண்டு
தன் தனிமையையும் துயரையும்
திருப்பித் தந்தது அது!
ஆவேசமற்ற
ஆற்றாமையுடன்
அதனிடம் முறையிட்டபோது
இறுக்க சாத்திக்கொண்டது
தன் கதவுகளையும்
ஜன்னல்களையும்.
வளையல்கள் உடைய
ரத்தம் கசிய
தட்டியும் ஒருபோதும்
திறக்கவில்லை
அவ்வாழ்வின் கதவுகள்.
அசைக்க முடியாத
நம்பிக்கையுடன்
மீண்டும் மீண்டும் வீடு
திரும்புகிறேன்
சாத்திய கதவுகளுக்கு
அப்பால்
சாத்தியப்படும் வாழ்வினைத்
தேடி!

''அப்பல்லாம் எங்க ஊர்ல ஒவ்வொருத்தருக்கும், கந்து வட்டிக் கடன் ரொம்ப இருந்தது. காலம்பற பத்து மணியானாப் போதும். மோட்டார் பைக் போட்டுட்டு ஊருக்குள்ளார வரிசையாக கந்து வட்டிக் காரங்க, தினசரி வசூலுக்கு வந்துக்கிட்டே இருப்பாங்க. நாலு வருஷம் ரொம்பக் கஷ்டப் பட்டோம். மொதல் வேலையா படிப்படியா எங்களோட கந்து வட்டிக் கடனைக் கொறைச்சுக் கிட்டே வந்தோம். அதுலேருந்து சுத்தமா மீண்டு எங்களுக்கு இந்த ஐடியாவைச் சொல்லி, வங்கிக் கடன் பெற்றுத் தந்தாங்க. இப்ப எங்க ஒவ்வொருத்தர் வீட்லயும் சொந்தத் தறியில கோராப்பட்டு நெய்யறோம்!'' என்கிறார் ஊக்குநர் எஸ்.எஸ்.மணி.





• வெண்ணிலா

ஈரோடு மாவட்டம், அந்தியூர் அருகேயுள்ள சந்திபாளையம் கிராமத்தில் திரும்பிய பக்கமெல்லாம் கைநெசவுத் தறிகள். அந்தக் கிராமத்துப் பெண்களின் வீட்டுப் பொருளாதாரத்தை மேம்படச் செய்துள்ளன மகளிர் சுய உதவிக் குழுக்கள்.

''வெவரம் தெரிஞ்ச நாள்லேருந்து, எங்க ஊர்ல பொண்டுக எல்லாம் நெசவுக் கூலியாத்தான் போய்ட்டு இருந்தோம். இப்ப இந்த மூணு வருஷமா நாங்க எல்லாரும் அப்படியில்ல. ஒவ்வொருத்தர் வூட்லயும் ஒரு நெசவுத் தறி. சொந்தத் தறி. மூலப் பொருளைக் கொண்டாந்து தர்றாங்க. நாங்க வூட்லயே நெய்ஞ்சு தர்றோம். நாங்க எங்க மனசால நெய்யறோம் கோராவ'' எனக் கோரசாகக் கூறுகின்றனர் ஸ்ரீ முருகன் மகளிர் சுய உதவிக் குழுவினர்.

இந்தக் கோராப்பட்டுச் சேலையினைக் கைத்தறி நெசவில்தான் நெய்ய முடியும். கோராப்பட்டுச் சேலையின் தனிச் சிறப்பு இதுவே. விரித்துப் பிரித்தால், பலவித வண்ணங்களில் பலவித வடிவங்களில் விழிகளைக் கவர்கிறது கோராப் பட்டு.

''ஒரு சேலை நெய்ய இரண்டு நாள் ஆகும். வாரத்துல எப்பிடியும் மூணு சேலை நெய்ஞ்சுக்குவோம். சரிகை, நூல், கோராப்பட்டுப் பாவு எல்லாத்தையும் கொண்டாந்து குடுத்துடுவாங்க. ஒரு பாவுக்குப் பத்து சேலை நெய்யலாம். ஒவ்வொரு சேலைக்கும் வியாபாரிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் விரும்பற டிசைனில், அவங்க கேக்கற கலர்ல நெய்ஞ்சு தர்றோம். மூணு வருஷத்துக்கு முன்னாடி எங்க குழுவுக்குத் தொழில் கடனா ஒரு பெரிய தொகை சாங்ஷன் ஆச்சு. அதுல நாங்க ஒவ்வொருத்தரும்







● செல்வி

# நெறஞ்ச மனசால நெய்யும் பட்டு!

அவங்க வீட்ல சொந்தமா தறி நெசவு போட்டுக்கிட்டோம்!'' எனக் கூறுகிறார் செல்வி.

சந்திபாளையம் கிராமத்தில் மட்டும், ஒரு வாரத்துக்கு நூற்றைம்பது கோராப் பட்டுச் சேலைகள் உற்பத்தி ஆகின்றன. ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்குள் அடக்க விலையாகும் கோராப்பட்டு, கடைகளில் சுமார் மூவாயிரம் ரூபாயிலிருந்து ஐந்தாயிரம் ரூபாய் வரைக்குமாக விற்பனை செய்யப்படுகிறது.

''கோரப்பட்டுச் சேலை பவர் லூம் நெசவில் நெய்ய முடியாது. கைத்தறி நெசவில்தான் நெய்ய முடியும். வீட்டுக்குள் நெய்வதால் வெளிச்சம் தேவை. அதனால் கைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, கைத்தறி நெசவு செய்யும் ஒவ்வொரு வீட்டுக்கும் மாதம் ஐம்பது யூனிட் மின்சாரம் இலவசமாகத் தந்து வருகிறது தமிழக அரசு. சந்திபாளையம் ஸ்ரீ முருகன் மகளிர் சுய உதவிக் குழுவினர், கடந்த காலங்களில் பெரும் கடனாளிகளாக இருந்துள்ளனர். கோராப்பட்டுச் சேலையினைச் சொந்தமாக நெய்யத் தொடங்கிய சமீபத்திய மூன்று வருடங்களில், அவர்களின் வங்கிச் சேமிப்பு (வட்டித் தொகை சேர்த்து) மூன்று லட்ச ரூபாயாக உயர்ந்துள்ளது. கோராப்பட்டுச் சேலை நெய்து, வாழ்க்கையில் ஜோராக முன்னேற்றம் கண்டுள்ளனர் சந்திபாளையம் ஸ்ரீ முருகன் சுய உதவிக்குழுப் பெண்கள்!'' எனச் சொல்கிறார் அந்தியூர் வட்டார மகளிர் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புச் செயலாளர் வெண்ணிலா.

மனசு நெறைஞ்சு இருந்தா கல்லும்கூட கலையா மாறும். கோராப்பட்டு எம்மாத்திரம், அதுவும் ஜோராத்தானே வரும்?!

– **ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

''ஏங்க... இங்கே மாரியம்மாங் கறது...''

''ஏங்கண்ணு... நாந்தாஞ்சாமீ... வாங்கோ... ஆரப்பா நீங்கோ...''

''அம்மா நாங்க இந்த வார பத்திரிகை யிலிருந்து வர்றோம்.''

''அப்பிடியா.. எழுதறவியளா... சந்தோ சங்கண்ணு. உள்ள வாங்கோ. இப்பிடி காத்தோட்டமா திண்ணையில குக் குங்கொ... ராத்திரி ஆக்குன கம்மஞ் சோத்து புளிதண்ணிதா சட்டியிலிருக்குது. காப்பி தண்ணிக்குனெங்கெ போகுட்டு...''

''அம்மா... அம்மா அதெல்லா ஒண் ணும் வேண்டாம். வாங்க. எங்களுக்கு புளிதண்ணி குடுங்க. அதா வேணும். புதுசா பேண்ட் சர்ட் போட்டிருந்தாலும் எங்க மனசு பழசு தா'' என்று கூட வந்த புகைப்படக் கலைஞர் சுரேஷைப் பார்த் தேன்.

''இருங்கப்பொ வெங்காமருஞ்சு போட்டுத் தாரேன்.''

மெல்ல, ''உங்களுக்குத் தெம்மாங்கு கும்மியெல்லாம் தெரியும்னாங்க. அதப் பத்தி மக்களுக்குப் புரியவைக்க உங் கள மாதிரி கலைஞர்க கிட்டே பேசி, அதப் போட்டோம்னா மக்களுக்கு ஒரு விழிப்புணர்வு

# குலை

**• சி.சாமிநாதன் •**

வரும். அதுக்காக வந்திருக்கோம்.''

''என்னெடுத்து என்னச்சாமீ... எம்பாடே பெரும்பாடா கெடக்குது. கஷ்டோங் கஷ்டோன்னு கோயிலுக்குப் போனா... அங்கே நூறு கஷ்டொ அவுத்து போட்டுட்டாடுதாமா... இவியப்பனிருக்கற முட்டும் எல்லாமிருந்துச்சு. இவியப்பெம் போனா அல்லாம் போச்சு.

குடிங்கொ குடிங்கொ. இன்னுங் கொஞ் சூண்டு ஊத்துட்டா... வகுறுமுட்ட குடிங்கொ. வேறேனென்னிருக்குது குடுக் கறதுக்கெங்கிட்டெ.''

''போதும்மா. இதே போதும் எங் களுக்கு.''

''நீங்கொ அம்மா அம்மாங்கறெப் பெல்லா எம்மகனும் வாய் நெறஞ்சு அப்பிடி கூப்புடமாட்டானான்னு வகுறுவாயெல்லா வேகுது கண்ணு. ஓடியாடி என்றொ பேச்சு நின்னு, அதிருக்கு ஏழெட்டு வருசொ. அவியப் பெம்பிஞ்ஜின் (பென்சன்) வருது... நானுண்டு நெஞ்சு மேலெ நடக்குற எம் பையனுண்டுனு காலம் போகுதப்பா... நானென்ன செய்ட்டு''

பெருமூச்செறிந்தபடி அழுதழுது இறுகி வற்றிப் போன அடிநெஞ்சில் அழுதைரிய மில்லாது, சேலை நுனியால் துளிக் கண்ணீரைச் சுண்டி வீசியெறிந்தாள்.

''இவியெப்பனெ நெனிக்கிறப்பெல்லா நெஞ்சுக்குழி முட்டுது கண்ணு. அப்பேர்ப் பட்ட மனுசெ. எட்டாவதுக்கு மேலே இவயப்பெ தலையால தண்ணி குடிக்க பாத்தாரு.. இவன் புத்தியெங்கெ படிப்பிலிருந்துச்சு. ம்ம் கேப்பாரு பேச்செ கேட்டு ராத்திரி பகலா சிட்டாட்றது பீடி குடிக்கிறதுன்னு தலைக்கி மேலெ வளந்த புள்ளெய எப்பிடி தட்டிக் கேப்பாரு, சத்தம் போட்டே பேசாத மனுசெ.''

''ம்ம்...'' மனம் முறுகி எச்சில் சேர்த்து சொல்லப்போகும் கசப்பையும் விழுங்கிய

படி, ''அதோட நின்னானா... பண்ணாம் பாருங்க கூத்து சாமீ... அதெல்லாம் பாத்து நானின்னும் உசுரோட இருக்குறனெ...''

முகம் பொத்தி விசும்ப ஆரம்பித்தாள். நீர் நிறைந்து நிறைந்து காய்ந்து வற்றிப் போன குட்டையில், வாழ்ந்ததற்கான அடையாளமாய் நண்டு ஓட்டின் சிதிலங்களும் உள்கவியும் வாசனையும் உயிரின் இருப்பைப் பற்றி உணர்த்துவது போல, அழுது முடித்த கண்ணீரின் சருகுகளாய் இருந்தது அந்த விசும்பல்.

''அங்கங்கெ கை வெப்பா சின்னதா பீடி சிகரெட்டுக்குன்னு. சிக்குனா வுடுவாங்களா. கம்பத்துல கட்டி வெச்சு நொருங்க குடுத்தனுப்புவாங்க. உள்ளெ சிப்புடுச்சு மாசக் கணக்குல ஜூட்லெ கெடப்பான். மறுவடி எங்காதுன்னு சங்கதி வரும். ஏறிவருவாங்கய்யா சிப்புல. இழுத்துட்டுப் போயி சும்மா அடிச்சாங்கன்னா... அடடடா கடவுளே... ம்ஹ¨ம்.. காலெப் புடிச்சுட்டு கெஞ்சுவா.. 'சாமீ நாஞ்செய்லெ சாமீ... உட்ருங்கோ உட்ருங்கோன்னு...' வுடுவாங்களாய்யா.

'அப்பிடி திருடித் திங்கறதுக்கு போய் எங்காவது தொங்க வேண்டியதானெ'ன்னு கேக்கறாங்க. நாலெங்கெ போயி சாகுட்டு! நேயந்தா... தொங்க வேண்டியதா... முடியலியே...

இவியப்பந்தெ வாத்தியாராச்சே. ஊருபசங்களுக்கெல்லாம் பாடஞ்சொல்லிக் குடுக்கறவரு. இவருகிட்டெ படிச்சவங்க ளெல்லா லண்டனு அமெரிக்கான்னு போறாங்க. இவரு பெத்த புள்ளெ ஜெயிலுக்குப் போறா... நெலமயப் பாருங்கொ...



தலைநிமிந்து நின்ன மனுசனுக்குத் தாங்குமாய்யா சொல்லு. ஐயோன்னு பதறிப் போன

**போட்டிக் கதை-13**

மனுசனுக்கு பாதியுசுரு அங்கியெ செதறிப் போச்சு.

நெஞ்சுவலின்னு வந்து படுத்ததுதா. ஒரட்டாங்காலும் கையுமிழுத்துட்டு படுக்கையிலெ வருச கணெக்குல.

படுக்கையிலியெ கெடந்த இவியப்பனுக்கு நெஞ்செல்லா குமுறுது. கண்ணுல ஆறா பொங்குது.

எத்தனையோ நோயெல்லாம் பாத்தவெ பயந்துட்டா வுட்டுப் போட்டு போயிருமா... சொல்லு கண்ணு. பாவம்.. இதியெல்லா நெனிக்க நெனிக்க உண்டது சீரணமாகமெ ஒன்னுக்கு ரண்டுக்கெல்லாம் காலோட போயிரும். னென்ன பண்றது. சுடுதண்ணி வெச்சு எல்லாந்தொடச்சு நாத்தம் போக பவுடர் போட்டு வுடுவே. பாத்தாரு... னெத்தன நாளிக்குதா அழுந்து வாரு.

கூப்டாரு ஒரு நா... அது இப்பொ கூப்டாப்லெ கண்ணுல ஆடுது கண்ணு...

'மாரீம்மா.. மாரீம்மா'ன்னு. சத்தமே வராது. கூப்பிட்டாரு.

'திடுதிப்புன்னு நிய்யி போயிட்டன்னா... எனக்கு ஆரிருக்குறா சொல்லு. ஒரு வா சோறு ஆரு வூட்டுவா. நாத்தம் புடிச்ச துணியெ ஆருவந்து கசக்கிப் போடுவா'னு கேட்டாரு.

நேயந்தானெ.

எங்கையெப் புடிச்சுட்டாரு. பண்ணு சத்தியம் பண்ணிக் குடுன்னே நின்னுட்டாரு. நாலா பக்கொ நானு ரண்டு நாளா ஓசன பண்டுனெ. கடெசிய ஈரக் கொலையெ கையிலெ புடிச்சுட்டு செரிங்கவும்,

அது னெத்தனை நாளா ஓசன பண்டி பண்டி யாரு குடுத்த காசொ சாமீ... நாலெட்டாமடுச்சு இதுக்குன்னே தலைகாணிக்கடியில வெச்சவுரு போல எடுத்துக் குடுத்தாரு சாமீ...

எல்லா நெனச்சு நெனச்சு உசுர வுடற துக்கு உசுரோட இருக்குறப்பவெ போய்ச் சேரட்டும் என்ற மகராசென்னு வாங்கிட்டு வந்து பாலோடெ சேத்தி. ஆத்துறே ஆத்துறே நொர கெளம்பொ அப்பிடி ஆத்துறே.

ஊத்தி வெச்சுட்டு வெளியெ வந்துட்டே. அதென்னா பால் பாயசமா குடிக்கிற அழகெ பாக்றக்கு.

அன்னிக்கு ஒரு கலாசு பாலு ரண்டு உசுரெ ஒன்னாக்குச்சு. இன்னிக்கு அதே ஒரு கலாசு ஒத்த உசுரெ துண்டாக்கிதேன்னு வாயெப் பொத்திட்டு வெளியெ போனவதான் சாமீ...

அப்புறம்..."

நீண்ட பெருமூச்செறிய மெல்லிறுக்கத்திலிருந்து மீள, புஸ்புஸ்ஸெனெ ஆசுவாசமாகிறாள்.

"டீவில நடிக்க சான்ஸ் கிடைக்கும்னு எப்படிச் சொல்றீங்க ஜோசியரே?"
"உங்க ஜாதகப்படி நீங்க தினமும் அழணும்னு இருக்கே!"
- அம்பை தேவா



கொஞ்ச தூரத்தி 'டணங் டணங்'கென்று கையும் காலும் ஒரே சங்கிலியால் பிணையப்பட்டு, ஒரு வலுவுள்ள இரும்புக் குண்டை உருட்டி இழுத்தபடி மத்தியான சோற்றுக்கு வரும் மகனை, எந்த வார்த்தை அறிமுக சம்பிரதாயமுமில்லாது முன் முனைத்த மொட்டைத் தலையை மடியிலிட்டுத் தடவு

கிறாள்.

அறிமுகப்படுத்துதலிலிருந்த அவஸ்தை புரிந்தது.

அழுக்கான வாழ்க்கையிலிருந்து சலவை செய்த வார்த்தைகளாய் அவன் மெல்ல பேசத் தொடங்கினான்.

''பாவம்ண்ணா எங்கம்மா... அம்மாவுக்கும் ஒடம்பு முடியல... அப்பாவும் போயாச்சு. நானுமிப்பிடி...'' என்று சொல்லச் சொல்ல, எங்கோ பார்வை நிலைத்திருக்க இடைவிடாது தலைகோதலில் தெரிந்தது தாயின் பாசம்.

''அம்மா ஒரு நா என்னிய கூப்புட்டுச்கண்ணா...''

''கூப்புட்டு...ஆசாரியெ கூட்டிட்டு வந்து கையிலியும் கால்லையும் சங்கிலி மாட்டி இந்த குண்டும் சேத்துப் பூட்டிடிச்சி. இதியெ தூக்கிட்டு நாலெட்டு வைக்கறக்கே பத்து நிமிசமாகும். வலிக்கும். செரி... இத்தன நாளு அம்மா சொன்னது எதையுமே கேக்குல. இதையாவது கேப்பமேன்னு பேசாமிருந்துட்டெ. சங்கிலி பூட்டும்போது அம்மாதா அழுதுட்டேயிருந்து.

அண்ணா... இப்போ போயி ஊருக்குள்ளெ கேட்டுப் பாருங்க. என்னியெ யாருமே திருடேன்னு சொல்றதில்லே தெரியுமா...''னு மகன் சொல்லச் சொல்ல,

இறுக்கி கடித்துப் பிடித்த சேலையோடு இழுத்து அணைத்துக் கொண்டதில், அவமானமும் வேதனையும் ஆற்றாமையும் பாசமும் கலந்து,

''எப்பவோ நானும் போயிருப்பேஞ் சாமீ... இந்த நாய்க்காகதெ உசுரே வெச்சுருக்கெ. நானும் போய்ட்டேனா இதியெ

## ஸ்டார் கார்னர்

### புள்ளி ராஜா!

பிரபல நாவலாசிரியர் ஆஸ்கார் ஒயில்ட் தமது படைப்புகளில் ஒன்றை வெளியிடுவதற்காக ஒரு பதிப்பாளருக்கு அனுப்பியிருந்தார். பதிப்பாளரோ... 'அந்நாவலில் காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி எதுவுமே இல்லை; அவற்றை உரிய இடங்களில் இட்டு அனுப்புங்கள்' எனத் திருப்பி அனுப்பி விட்டார். கோபமுற்ற நாவலாசிரியர் ஒரு வெள்ளைத் தாளில் அனைத்துப் புள்ளிகளையும் போட்டு, 'இக்குறியீடுகளைத் தேவைக்கேற்ப பொறுக்கி அவசியமான இடங்களில் இட்டு நிரப்பிக் கொள்ளவும்' என்று நாவலுடன் இணைத்து அனுப்பினாராம்.

- இனாம்மணியாச்சி கேசவன்.



ஊர்க்காரங்கொ கல்லுல டிச்சே கொன்னிருவாங்க. நானிருக்கற வரைக்கும் காப்பாத்திருவேன். அப்புறம் ஆண்டவன் விட்ட வழி. ஊருக்கு எப்பிடின்னாலும் எனக்கு புள்ளதானேப்பா... என்னங்கறீங்கொ'' என்று வாஞ்சையுடன் கம்மஞ்சோற்றைப் பிசைந்து ஊட்டுகிறாள்.

மகன் எச்சிலூர நாக்குலாவி சுவைத்துப் பசியாற... புறங்கையால் முகம் துடைத்துக் கொள்கிறாள்.

பேச எதுவுமில்லை. எழுந்து கொண்டோம். நின்றவர்களைக் கைகூப்பி வணங்கி அது தாலாட்டா ஒப்பாரியா தெரியாது... நீண்ட ஒரு பாடலை ராகமிட்டுப் பாடினாள்.

நீண்டு நெளிந்து குனிந்து நிமிரும் வார்த்தைகள். அவள் வாழ்க்கையின் சாயலில் அவை வெறும் வார்த்தைகளல்ல... ●

**காதைக் குடுங்க...**



● ராஜா

# முதல்வரின் புதிய தலைவலி!

● நவம்பர் பத்தாம் தேதி துவங்கவிருக்கும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் இடி, மின்னல்களுக்குக் குறைவிருக்காது என்கிறார்கள். மின்வெட்டு, விலைவாசி, இலங்கைத் தமிழர் பிரச்னை, ஜெயலலிதா பாதுகாப்பு போன்ற பிரச்னைகள் ஆளும் தரப்புக்கு பெரிய தலைவலியைக் கொடுக்கும். குறிப்பாக இலங்கைப் பிரச்னையில் அ.தி.மு.க.வின் செயல்பாடு, காங்கிரஸ் மற்றும் தி.மு.க.விடையே இன்னும் இடைவெளியை அதிகப்படுத்தும்விதமாக இருக்கும். இந்த நிலையில் சட்டமன்ற சூட்டைத் தணிக்கும் விதமாக சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தி.மு.க. மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக மின்வெட்டு பிரச்னையில் கட்சிகளின் தாக்குதல் வேகத்தைக் குறைக்கும் வகையில் ஆற்காடு வீராசாமியின் இலாகாவை மாற்றிவிடலாமா என்றுகூட பலமான யோசனை இருக்கிறதாம்.

● கலைஞரின் விருப்பப்படி திட்டக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார் தமிழருவி மணியன். ஆனால், தற்போது ராஜினாமா செய்துவிட்டார். எந்தவிதமான கமிட்மெண்ட்டும் இல்லாமல் கருத்துச் சுதந்திரம் அனுபவிக்க வேண்டும் என்றே விலகி விட்டாராம். ராஜினாமாவை ஒப்புக் கொள்ளத் தயங்குகிறார் கலைஞர். 'திரும்பப் பெறுங்கள்' என்று அழுத்தம் கொடுக்கப்படுகிறதாம்.

● செல்ஃபோன் சேவைக்கான ஸ்பெக்ட்ரம் அலைவரிசை விற்பனை தொடர்பான பிரச்னையில் சர்ச்சைகள் தொடர்கின்றன. அலைவரிசையைப் பெற்ற 'ஸ்வான்' என்ற நிறுவனம், சேவை துவங்கும் முன்னரே பங்குகளை விற்று, பல மடங்கு லாபம் பெற்றுவிட்டது. இப்போது யூனிடெக் (unitech) என்ற மற்றொரு நிறுவனமும் அதேபோல், சேவை துவங்கும் முன்னரே பங்குகளை விற்று, கொள்ளை லாபம் அடித்தது தெரியவந்திருக்கிறது. ஆங்கில, தேசிய பத்திரிகைகள் இதை அம்பலப்படுத்தி பல கேள்விகளை எழுப்பி வருகின்றன. மத்திய அரசுக்கு 45000 கோடி வருவாய் இழப்பு உண்மைதானோ என்ற எண்ணம் வலுப்பட்டு வருகிறது. பாராளுமன்ற தேர்தலில் ஏற்கனவே உள்ள பல பிரச்னைகளால் பாதிப்பு வருமோ என்று பயந்து கொண்டிருக்கும் தி.மு.க., இப்போது அமைச்சர் ராஜா பிரச்னையும் மற்றொரு தலைவலியாகச் சேர்ந்துவிடுமோ என்று அஞ்சத் துவங்கிவிட்டது!

– ஸ்ரீநி

சினிமா விமர்சனம்

# சேவல்



பூ விற்பவரின் மகனுக்கும் கோயிலில் பூஜை செய்பவரின் மகளுக்குமான காதல்தான் கதை. அதிகம் காரம் மசாலா குழைத்து, கொஞ்சம் கதை குறித்து கவனம் குவித்தும் திரைக்கு வந்திருக்கிறது சேவல்.

ஹீரோ பரத்துக்கு, அவரின் கமர்ஷியல் படங்களின் வரிசையில் மற்றுமொரு படம். 'காதல்' படத்துக்குப் பிறகு நேட்டிவிட்டி மாறாமல் நடிப்பில் கவனம் செலுத்தியிருக்கிறார். தன் மீது திருட்டுக் குற்றம் சுமத்தியவர்களைத் துரத்தித் துரத்தி அடிக்கும் வேகம், பூனம் பஜ்வா வில்லன் கைகளில் மாட்டிக்கொள்கையில் உச்சத்தை அடைகிறது. ஹீரோயின் பூனம் பஜ்வா, வழக்கமான தமிழ்க் கதாநாயகி. ஆனால், கண்ணை உறுத்தாத உடையில் வந்து செல்கையில் மனசில் குளிர்கிறார். சிம்ரன் ஏதேதோ செய்யப்போகிறார் என எதிர்பார்ப்பு எகிறும்போது, புற்றுநோயால் இறந்துபோவது சீத்தல் பட்டாசு.

வடிவேலு, சரியான கடிவேலு. காமெடியை விட காதல் தூது போவதில் கவனம் செலுத்தியதால் போஸ்ட்மேன் பாத்திரத்தில் புஸ்வாணமாகிறார்.

பாளையங்கோட்டை ஜெயிலிலிருந்து புறப்படும் பரத்தின் ஃப்ளாஷ்பேக் காட்சிகளில் சுவாரஸ்யக் குறைச்சல். திரும்பத் திரும்ப ஜெயிலுக்குப் போகையில், எதற்காக ஜெயிலுக்குப் போகிறார் என்ற கேள்வி இயல்பாக எழுகிறது. கிருஷ்ணாவைக் கழுத்தறுத்துக் கொல்வது, சண்முகராஜன் மீது டிராக்டரை ஏற்றிக் கொல்வதென ஆரம்பத்தில் எதிர்பார்க்க வைக்கும் திரைக்கதை, போகப் போக நூலறுந்த பட்டமென திசைகள் குழம்பித் தவிக்கிறது.

இசை ஜி.வி.பிரகாஷ்குமார், தன் இருப்பைத் தக்கவைத்துக் கொள்கிறார். எடிட்டிங் வி.டி.விஜயன். இவரது கத்திரி முனை மழுங்கி சுமார். காட்சி அமைப்பு, திரைக்கதை, தேர்ந்தெடுத்த கதை, எல்லாவற்றிலும் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம் இயக்குநர் ஹரி. சேவல் - **ஊமைக்கோழி.**

**- மகிமைராஜன்**



## அக்கம் பக்கம்

# அபராதம்

● டெல்லியில் மெட்ரோ ரயில் ஓடிக் கொண்டிருந்தாலும், அதன் விரிவாக்கப் பணிகள் தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அண்மையில் மெட்ரோ ரயில் பாதையில் பாலம் கட்டும் பணி நடக்கும் ஒரு இடத்தில், மேலிருந்து ஒரு பெரிய கர்டரை கிரேன் மூலமாகத் தூக்கும்போது, அது தவறி கீழே விழுந்துவிட்டது. அதன் காரணமாக அந்தப் பகுதியில் சென்றுகொண்டிருந்த ஒரு பஸ்சின் டிரைவர், ஒரு தொழிலாளி என இருவர் பலியானார்கள். தவிர பதினாறு பேருக்குக் காயம். போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கத் தவறிய பாலம் கட்டும் காண்டிராக்டருக்கு மெட்ரோ ரயில் நிர்வாகம் பத்து லட்சம் ரூபாய் அபராதம் விதித்துள்ளது. ஐயோ பாவம்! கான்டிராக்டர் இல்லை; பலியான அப்பாவிகள்!

● காங்கிரஸும், சமாஜ்வாதி கட்சியும் நெருங்கி வந்திருந்தாலும், உ.பி.யில் தேர்தல் உடன்பாடு ஏதும் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. ஆனாலும், உடனடியாக சமாஜ்வாதி கட்சியிடமிருந்து ஒரு உதவியை எதிர்பார்க்கிறது காங்கிரஸ். அது என்ன? உ.பி. சட்டசபையில் மொத்தம் 404 எம்.எல்.ஏ.க்கள். இவர்களில் காங்கிரஸ் கட்சிக்கு வெறும் 21 பேர்தான். இதனால், உ.பி.யிலிருந்து ராஜ்யசபைக்கு காங்கிரஸ்காரர்கள் யாரும் செல்ல முடியாத நிலை இருந்துவந்தது. இப்போது சமாஜ்வாதி ஒரு கை கொடுத்தால் ஒரு காங்கிரஸ்காரருக்கு ராஜ்ய சபாவுக்குப் போகும் அதிர்ஷ்டம் அடிக்கும். முலாயம் சிங்கா? முடியாது சிங்கா? பொறுத்திருந்து பார்க்கலாம்.

# ரூ.10 லட்சம்

● 'தாரே ஜமீன் பர்' புகழ் பையன் தர்ஷீல் சஃபாரி சினிமா, விளம்பரங்கள் என்று ஒரே பிஸி. அண்மையில் டெல்லியில் நடந்த ஒரு ஃபேஷன் ஷோவில் அவர்தான் முக்கிய மாடல். ஷெர்வானி உடையில் தர்ஷீல் மேடையில் தோன்றியதும் அரங்கம் முழுவதும் உற்சாகக் கூக்குரல்தான். நிகழ்ச்சி முடிந்ததும் அம்மாக்களும் வாண்டுகளும் தர்ஷீலைச் சூழ்ந்துகொண்டு ஃபோட்டோ எடுத்துக் கொள்வதும், ஆட்டோகிராஃப் கேட்பதுமாக குட்டி ஸ்டாரை பெண்டு நிமிர்த்தி விட்டார்கள்.

● பா.ஜ.க. வட்டாரத்தில் ஒரு சிறு சலசலப்பு. பாராளுமன்றத் தேர்தலில் பீகாரின் பாட்னா தொகுதிக்கு இரண்டு பேர் குறி வைத்திருக்கிறார்கள். ஒருவர் நடிகர் சத்ருகன் சின்ஹா. இன்னொருவர் ரவிசங்கர் பிரசாத். இரண்டு பேரில் யாருக்குக் கொடுப்பது என்று சிக்கல் எழுந்தால், பேசாமல் அந்தத் தொகுதியை ஐக்கிய ஜனதாதளம் கட்சிக்கு ஒதுக்கிவிடலாம் என்ற ஐடியாவும் தாமரை மேலிடத்துக்கு இருக்கிறதாம். நல்ல ஐடியாதான்!

● லாலு பிரசாத்தை விமர்சிப்பவர்களுக்கு வெறும் வாய்க்கு அவல் கிடைத்தால் சும்மா இருப்பார்களா? அண்மையில் கான்பூர் ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு, பீகாருக்குச் செல்ல வேண்டிய ரயில், வழி மாறி அலகாபாத் செல்லும் பாதையில் சென்றுவிட்டது. கான்பூரிலிருந்து சுமார் 15 கி.மீ. தூரம் சென்ற பின்னர், பயணிகள் குழப்பம் அடைந்து, ரயிலை நிறுத்திவிட்டார்கள். அதன் பிறகு சரியான பாதைக்கு ரயில் திரும்பியது. வழக்கம்போல, தவறு எங்கே என்று கண்டறிய என்கொயரிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கைகாட்டி மரம் தப்பு செய்துவிட்டது என்று காரணம் கண்டுபிடிக்காமல் இருந்தால் சரி!



* சத்ருகன் சின்ஹா



* முலாயம் சிங்

– மௌலி

# ஹாஸ்பிடல் எத்திக்ஸ்

ஜி.எஸ்.எஸ்.



மருத்துவ உலகின் பிரம்மாண்டமான கமிஷன் ராஜ்ஜியத்தை மேலும் அறிவதற்கு முன்னால், வேறொரு முக்கியமான, சங்கடமான சூழலைப் பார்ப்போம்.

எத்திக்ஸ் தொடர்பான கேள்விகளில் புதிய சவால்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நோய்களில் மிக முக்கியமானது எய்ட்ஸ்.

இப்படி ஒரு இளைஞன் டாக்டரை அணுகுகிறான் என்று வைத்துக் கொள்வோம்.

''ரத்த தானம் செய்யணும்கிற முடிவுக்கு வந்துட்டேன் டாக்டர். என்னாலே ஒரு உயிர் காப்பாற்றப்படுமானால், அது

## எலிசா – ஃபர்ஸ்ட்...

எவ்வளவு சந்தோஷமான விஷயம்'' என்ற அவனைப் பார்த்து, டாக்டர் பெருமைப் பட்டார்.

ஆனால், அந்தப் பெருமை அதிக நேரம் நீடிக்கவில்லை. யாருடைய ரத்தத்தையும் சில பரிசோதனைகளைச் செய்து பார்த்த பிறகுதான் மற்றவர் உடலில் செலுத்த வேண்டும். ரத்தத்தினால் பரவக்கூடிய நோய்களைத் தடுப்பதற்காகத்தான் இந்த நடைமுறை. இதைத்தான் அந்த டாக்டரும் பின்பற்றினார். அந்தச் சோதனைகளில் ஒன்று எலிசா சோதனை. அதாவது ரத்தத்தில் எய்ட்ஸ் (HIV) கிருமிகள் இல்லை என்பதை உறுதிசெய்துகொள்ளப் பயன்படும் சோதனை இது.

மேற்படி இளைஞனின் ரத்தத்தில் ஹெச்.ஐ.வி. கிருமிகள் காணப்பட்டன. எனவே அந்த ரத்தத்தை டாக்டர் பயன்படுத்தவில்லை.

இந்த இடத்தில் ஒரு கேள்வி. அந்த இளைஞனின் உடலில் தோன்றி உள்ள விபரீதத்தை டாக்டர் அவனிடம் குறிப்பிட வேண்டியது அவசியமா இல்லையா?

''இதுபோன்ற சந்தர்ப்பம் ஏற்பட்டால் அந்த இளைஞனைக் கூப்பிட்டு இது குறித்து விளக்குவேன். தன்மையாகப் பேசி குறைந்தபட்ச அதிர்ச்சியோடு அவனைத் தன் உடல்நிலையை ஏற்றுக்கொள்ள வைக்க முயற்சிப்பேன். (இதுகுறித்து அவனுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை. அப்படித் தெரிந்திருந்தால் ரத்ததானம் செய்ய முன்வந்திருப்பானா?)

'இதனால் டாக்டர்கள் யாரும் உன்னை வெறுத்துவிடப் போவதில்லை. அதே

# தானம் – நெக்ஸ்ட்!

போல் உன் மனைவியும் உன்னை வெறுத்து ஒதுக்கிவிட மாட்டாள். எனவே மனைவியிடம் இதை வெளிப்படுத்துவதுதான் நல்லது. அவளைத் தவிர வேறு யாருக்கும் இந்த விஷயம் தெரிய வராது. இதனால் சமூகத்தில் உன் மதிப்பு இறங்கிவிடாது. தவிர எல்லாவற்றையும் விட முக்கியமாக, உனது பாதிப்பை உன்னால் ஏற்க முடிந்தால்தான் உரிய சிகிச்சை எடுத்துக் கொள்ள முடியும்.'

இப்படி விரிவாகப் பேசினால் 99 சதவிகிதம் பேர் மனைவியிடம் இதைப் பகிர்ந்துகொள்ளச் சம்மதித்துவிடுவார்கள்.''

எலிசா சோதனை செய்வதற்கு முன்பும், பின்பும் சம்பந்தப்பட்டவருக்கு உரிய தயார் நிலையை (Pre-test and post-test counselling) மருத்துவர் அளிக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டார் டாக்டர் அமுதா ஹரி. மகளிர் நல மருத்துவரான இவர் ஹெச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவான ஓர் அமைப்பில் முக்கிய பங்குவகிக்கிறார்.

99 சதவிகிதம் இருக்கட்டும். அந்த பாக்கி ஒரு சதவிகிதம்? அதாவது டாக்டர் விளக்கிய பிறகும், 'எனக்கு எய்ட்ஸ் பாதிப்பு இருப்பதை என் மனைவியிடம் சொல்ல மாட்டேன்' என்று பிடிவாதம் பிடிப்பவர்களை என்ன செய்வீர்கள்?

இப்படி அடுத்த கேள்வியை முன்வைத்ததும், மௌனம் பதிலாக வந்தது. 'என்ன செய்வது? மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு மௌனமாக இருக்க வேண்டியதுதான்' என்பதை அந்த மௌனம் உணர்த்தியது.


✱ டாக்டர் அமுதா ஹரி

இன்றைய தேதியில், மருத்துவ எத்திக்ஸ் வழிகாட்டலின்படி, 'அவசியம் இல்லை' என்பது மட்டுமல்ல; 'குறிப்பிடக்கூடாது' என்பதுதான் உண்மை.

அது மட்டுமல்ல; ஒரு நோயாளியின் உடல்நிலை குறித்த விவரங்களை, அவரது அனுமதியில்லாமல், வேறு யாரிடமும் பகிர்ந்து கொள்ளவேகூடாது. அந்த 'வேறு யாரிடமும்' என்பதில் நோயாளியின் நெருங்கிய உறவினர்களிடமும் என்பதும் அடக்கம். 'Informed Consent' அவசியம் என்கிறது மருத்துவ விதி.

வேறொரு வித்தியாசமான சூழலில் இதே போன்ற பிரச்னை ஏற்பட்டால்?

ஓர் இளைஞனின் மனைவி விபத்தொன்றில் சிக்கிவிடுகிறார். அவருக்கு உடனடியாக நிறைய ரத்தம் தேவைப்படுகிறது. 'நல்லவேளையாக எனக்கும் என் மனைவிக்கும் ஒரே ப்ளட் க்ரூப்தான் டாக்டர். எவ்வளவு ரத்தம் வேண்டுமானாலும் எடுத்துக்குங்க' என்றபடி தன் மனைவிக்கு ரத்ததானம் அளிக்க முன் வருகிறார் அந்த இளைஞர். சோதனைகளில் அந்த இளைஞருக்கு 'ஹெச்.ஐ.வி. பாஸிடிவ்' என்று தெரியவருகிறது. இந்த நிலையில் டாக்டர் என்ன செய்ய வேண்டும்? அவர் மனைவியிடம் கணவரின் உடல்நிலையைச் சொல்ல வேண்டுமா? கூடாதா?

டாக்டர் அமுதா ஹரி அளித்த பதில் இதுதான்.



**"பாவி, நீ பண்ணின தப்புக்கு நான் வியாதியைச் சுமக்கிறேனே."**

''என் சக டாக்டர் ஒருவருக்கு இதேபோன்ற சூழல் ஏற்பட்டது. உடனே மனைவியிடம் 'உன் கணவருக்கு ஹெச்.ஐ.வி. பாஸிடிவ்வாக இருக்கிறது. எனவே ஜாக்கிரதையாக இரு' என்று எச்சரித்தார். கூடவே சூழலை எப்படிக் கையாள வேண்டும் என்பதை விரிவாகக் கூறி அனுப்பினார்.

அப்போதைக்கு தலையாட்டிவிட்டுச் சென்றாள் அந்தப் பெண். ஆனால் அன்று இரவு வீட்டுக்கு வந்த தன் கணவரைப் பார்த்ததும் வெறுப்பும் வருத்தமும் பொங்கின. அவை தீ வார்த்தைகளாக வெளிப்பட்டன.

அடுத்த நாளே மருத்துவமனைக்கு வந்த அந்தக் கணவர் டாக்டரிடம் சண்டை போட்டார். 'இனிமே எப்படி நீங்க ப்ராக்டிஸ் செய்றீங்கன்னு பார்க்கலாம். உங்க மேலே நஷ்டஈடு கேட்டு வழக்குத் தொடுக்கப் போறேன்' என்றார். அந்த டாக்டருக்கு வக்கீல் நோட்டீஸ"ும் சீக்கிரமே வந்து சேர்ந்தது. வேறு சிலரின் தொடர்ந்த முயற்சிகளால் நல்லவேளையாக நீதிமன்றத்தை எட்டிப் பார்க்காமல் தப்பித்தார் அவர்'' என்று விவரித்த டாக்டர், வேறொரு அநியாயத்தையும் சுட்டிக் காட்டினார்.

''கர்ப்பமான ஒரு பெண்ணுக்குச் சோதனை செய்து பார்க்கையில் அவள் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. இதைக் கூறியதும் இடிந்து போய் விட்டாள் அவள். கணவனிடம் இதைப் பகிர்ந்துகொண்ட அவள், 'பாவி, நீ பண்ணின தப்புக்கு நான் வியாதியைச் சுமக்கிறேனே' என்று கத்தியிருக்கிறாள். உடனே அவன், 'நீதான் தகாத உறவு வச்சுக்கிட்டு இந்த நோயை வாங்கியிருக்கே. அதை எனக்கும் பரப்பியிருப்பாயோன்னு பயமா இருக்கு' என்கிறான்.

இதை டாக்டரிடம் கூறிக் கதறினாள் அந்தப் பெண். அவளது கணவன் யாரென்பதை அறிந்ததும் டாக்டருக்கு அதிர்ச்சி. காரணம் அவனை அவருக்கு முன்பே தெரியும். ஏற்கெனவே எய்ட்ஸ் நோய்க்கான சிகிச்சையை, திருமணத்துக்கு முன்பே அவரிடம் பெற்று வருபவன்.

அவனைத் தனியாகச் சந்தித்து இது குறித்து டாக்டர் கேட்டபோது, 'நான் என்ன செய்யறது டாக்டர்? அப்படி நான் அவ மேல பழிபோடாம என்னிடம் தப்புன்னு ஒத்துக்கிட்டா என் கௌரவம் போயிடுமே! தவிர, எங்கப்பா தன் சொத்திலே எனக்கு பைசா கொடுக்க மாட்டாரு' என்றான் கூலாக. பழிசுமத்தப்பட்ட அந்தப் பெண், இன்று அவள் பிறந்த வீட்டில் சோகத்துடன் வாழ்நாளை எண்ணிக் கொண்டு இருக்கிறாள்.''

(தொடரும்)



# தேடு... தெரியும்!

- சீதாராம்

“எத்தினி ஏழை ஜனங்க, எவ்வளவு சீக்காளிங்க, நெறைய அனாதைக் கொழந்தைங்க... சொல்லிக்கிட்டே போலாம். எப்படிச் சொல்றீங்க தெய்வம் இருக்குதுன்னு...?'' சரவணனின் சிகையைத் திருத்திக்கொண்டே பேசினான் சோமு.

அத்துடன் வாதத்தை நிறுத்திக்கொள்வதே உசிதமென்று சரவணனுக்குத் தோன்றியது. மாதம் ஒருமுறை அந்த சலூனுக்கு வரும் போதெல்லாம் அவனுக்கும், சோமுவுக்கும் பழக்க தோஷத்தில் ஏதாவது விதண்டாவாதம் நடக்கும். இன்று கடவுள் இருக்கிறானா இல்லையா என்று ஆரம்பித்து எதிர்வாதம் முடியாமல் தடுமாறியிருந்தான்.

பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியே வரும்போதுதான் கவனித்தான். தாடியும் மீசையுமாய் சற்று அலங்கோலத்தில் இருந்த ஒருசிலர் வீதியில் சென்றுகொண்டிருந்தனர்.

படபடவென்று மறுபடியும் சலூனுக்குள் நுழைந்தவன் சோமுவைப் பார்த்து, ''ஊர்ல முடிவெட்டறவங்களே கெடையாது தெரியுமா?'' என்றான்.

கேலியாகச் சரவணனைப் பார்த்து, ''என்ன உளர்றீங்க!'' என்றான் சோமு.

''இருந்தா தெருவில இவ்வளவு பேர் தாடி, மீசை, பரட்டைத் தலையோட போவாங்களா?''

''அவங்க எங்களைத் தேடி வரலைன்னு அர்த்தம்!''

''அந்த மாதிரிதான் தெய்வமும்! நாம தேடிப் போனாதான் தெரியும்!''

தற்காலிகமாய் ஜெயித்த சந்தோஷத்தில் சட்டென வெளியேறினான் சரவணன். ○

# நியூஸ்!



சீரியல் பார்த்துக்கொண்டிருந்தாள் லக்ஷ்மி. ''ஏய் சீக்கிரம் மாத்து! நியூஸ் ஓடிட்டு இருக்கு. நியூஸ் பார்ப்போம். ஊர் ஊலகத்துல என்ன நடக்குதுன்னு தெரிஞ்சுக்கலாம்கிறது இல்லாம சீரியலைக் கட்டிக்கிட்டு அழு.'' திட்டிவிட்டு செய்தியில் லயித்துப் போனான்.

மறுநாள் வேலையிலிருந்து திரும்பினான்.

''என்னங்க... இன்னிக்கு மதியம் நியூஸ் பார்த்தேன். அதுல நியூஸ் வாசிக்கிற லேடி வட்டவட்டமா கோடு போட்ட புடைவை கட்டியிருந்தாள். அதுமாதிரி ஒண்ணு எடுக்கணுங்க.''

'இதுக்கு நீ சீரியலே பார்த்திருக்கலாம்.' மனத்துக்குள் எண்ணிக் கொண்டான் விக்ரம். ○



- வானவன்

**பிரபாவதி** என்பது அம்பாளின் பிரகாசத்தை எடுத்துரைக்கும் திருநாமம். பிரபை என்றாலே பிரகாசம் என்றுதான் பொருள். பிரகாசம் சூழத் துலங்குபவள்; நமக்குப் பலவிதமான பிரகாசங்களைத் தருபவள் அம்பிகை.

**பிரபா ரூபா** - பிரகாச ரூபமாகவே இருக்கக்கூடியவள்.

**பிரஸித்தா** - பிரஸித்தி பெற்றவளாக, பலவித பிரபாவங்களோடு இருப்பவள்.

**பரமேசுவரி** - பரமேசுவரனான சிவனின் ஈசுவரி.

- இப்படியே பல நாமங்கள் அவள் புகழைச் சொல்லிக்கொண்டே வருகின்றன. இந்தத் தொடர்ச்சியான நாமங்களின் வரிசையில் இடம்பெறுவது **மஹா காமேச நயன குமுத ஆஹ்லாத கௌமுதி**. இந்த நாமத்தை நாம் சற்று விரிவாகப் பார்க்க வேண்டும். ஏனென்றால், இது மிகுந்த அழகும் தத்துவார்த்தமும் அடங்கியுள்ள நாமம். ஆகவே, இதனை அனுபவிக்கும் முன் வேறு சிலவற்றைப் பார்த்து விடுவோம்:

**வியாபினி** - எல்லா இடங்களிலும் வியாபித்திருப்பவள் - எல்லாவற்றின் உட்பொருளும் அவளே.

**விவிதாகாரா** - அதே சமயத்தில், பல விதமான வண்ணங்களாகவும் வடிவங்களாகவும் இருக்கிறாள்.

**வித்யா அவித்யா ஸ்வரூபிணி** - வித்யா ஸ்வரூபிணியாக - ஞானம், அறிவின், கல்வியின் வடிவமாக இருப்பவள், அவித்யை - அதாவது அறிவின்மையின் வடிவமாகவும் இருக்கிறாள்.

# குமுதம் மலர்த்தும் குளிர் நிலவு

### மணிவாசகர்!


**மா**ணிக்கவாசகர் சிவபெருமானைப் பார்த்துப் பாடிக்கொண்டே வருகிறபோது, 'ஜோதி ஸ்வரூபமாக இருக்கக்கூடியவரே!' என்பார். ஈசுவரனை ஜோதி ஸ்வரூபமாக வழிபடுவதும் பரமேசுவரியையும் அப்படியே ஜோதி ஸ்வரூபமாகக் காண்பதும் வழிபாட்டு முறையில் உண்டு.

**அந்தஸ்திமிர மிஹிர த்வீப நகரி** என்று ஆசார்யர் சொல்வார். அதுபோல்தான் மாணிக்கவாசகர் 'ஜோதியனே' என்று அழைக்கிறார் பெருமானை. அப்படிச் சொன்னதுமே அவர் மனத்தில் ஒரு சிறு நெருடல் ஏற்படுகிறது. 'ஒளியாக இருக்கக் கூடியவர் சரி. பரமாத்மா சாசுவதமான ஒளி. அப்படியானால் இருள்...? அதன் வடிவம் யார்?' என்ற கேள்வி!

ஜோதி மட்டுமே இறைவன் அல்ல; இருளும் அவனே என்று உணர்ந்து, அடுத்த வார்த்தையாக **'துன் இருளே!'** என்று பரமேசுவரனை அழைக்கிறார் மாணிக்கவாசகர்.

இதுதான் நமது ஸநாதன தர்மத்தினுடைய அழகு! ஒரு வார்த்தையால் இறை

**மூன்றாம் பாகம்**


சுதா சேஷய்யன்
8
ஸ்ரீ லலிதா

வனை வர்ணிக்கிறபோது, மற்றவை அவனுக்குப் பொருந்தாது என்று ஆகிவிடாது. உலகம் ஏற்கிற விஷயங்களில் எல்லாம் அவன் இருப்பது போலவே உலக வழக்கால் ஒதுக்கப்படுகிற, அஞ்சப்படுகிற, நிராகரிக்கப்படுகிற விஷயங்களிலும் அதே இறைவன்தான் வியாபிக்கிறான். இருட்டினிடையே ஒளியாக எம்பெருமான் விளங்குகிறான் என்றால், அந்த இருட்டுக்குள்ளும் அவனே இருப்பதாகத்தானே அர்த்தம்!

அதே மாதிரிதான் **வித்யா - அவித்யா ஸ்வரூபிணி.** வித்யா ஸ்வரூபிணியாக இருக்கக்கூடிய அம்பாள்தான் அவித்யை என்று நாம் கருதக்கூடிய விஷயங்களிலும் இருக்கிறாள்.

இந்த அம்பாளே **மஹா காமேச நயன குமுத ஆஹ்லாத கௌமுதி.** மஹா காமேசரான சிவனின் குமுத மலர்க் கண்களை மலர்த்தக் கூடியவள். அம்பாள் சந்திரிகை (நிலவு); பூர்ணிமையாக (முழு நிலவு) இருக்கக்கூடியவள். குமுத



## இதுதான் நமது ஸநாதன தர்மத்தினுடைய

## வர்ணிக்கிறபோது, மற்றவை அவனுக்குப்

மலர் அல்லது குவளை மலர், நிலவு உதயமானதும் மலரும்.

சாதாரணமாக, சிவபெருமானுடைய கண்களை, தாமரை என்றுதான் வர்ணிப்பது வழக்கம். அம்பாளை வர்ணிக்கிற போது, அவள் கண்களைக் குவளைக் கண்களென்று சொல்வதுண்டு. மாணிக்க வாசகர் இப்படித்தான் வர்ணித்துப் பாடுகிறார். சிவசக்தி ஐக்கிய ஸ்வரூபத்தை முழுக்க முழுக்க ஆராதித்தவர் மாணிக்க வாசகர். அவர் பாடல்கள் சிவபெருமானைத் தனியாகப் பாடுவது போல் தோன்றும். ஆனால், வார்த்தைகளைக் கூர்ந்து பார்த்தால், இரண்டையும் சேர்த்துச் சேர்த்துத்தான் சொல்லியிருப்பார்; அபிராமி பட்டர் அபிராமியைப் பாட வந்தார் என்றாலும் சிவனையும் கூடவே பாடினார். சிவனையும் சக்தியையும் பிரிக்க முடியாது என்பது மஹான்களுக்குத் தெரியும். 'திருப்பெருந்துறையில் எனக்கு குருவாக வந்தவரே!' என்றுதான் ஆரம்பிக்கிறார் மாணிக்க வாசகர்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க

கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க என்று, கோகழி என்கிற திருப்பெருந்துறையில் தம்மை குருந்த மரத்தடியில் ஆட்கொண்ட குருவான பரமேசுவரனைத் துதிக்கிறார். ஆனால், உள்ளுக்குள்ளே, உள்ளுக்குள்ளே புகுந்து பாடுகிற போது, சிவசக்தி ஸ்வரூபத்தைச் சேர்த்துத்தான் சொல்கிறார்.

## பொய்கை தரும் உவகை

ஒரு பொய்கை - ஒரு குளம் இருக்கிறது. விடியற்காலை நேரம் எழுந்து, பாவை பாடலைப் பாடக்கூடிய பெண்கள் சென்று அந்தத் தடாகத்தைப் பார்க்கிறார்கள். அதிலே ஒருபுறம் தாமரையும் இன்னொரு புறம் குவளை மலர்களும் இருக்கின்றன.

அதிகாலையில் வெளிச்சம் வர வர, தாமரை கொஞ்சம் கொஞ்சமாக மலர்ந்து கொண்டே வருகிறது. அதே சமயத்தில், வெளிச்சம் கூடக் கூட, குவளை மலர் கூம்பிக்கொண்டே வருகிறது. இரண்டு பூக்களுமே முழுதுமாகக் கூம்பவும் இல்லை, மலரவும் இல்லை என்கிற ஒரு கட்டம். மலர்ந்தும் மலராமல் அவை இருக்கின்ற தன்மையைப் பார்த்தவுடனே, இந்தப் பெண்களுக்கு எப்படி இருக்கிறதாம்?

வெளிர் சிவப்பு நிறத்துத் தாமரை, பொன்னார் மேனியனான சிவ ஸ்வரூபமாகக் கண்ணுக்குத் தெரிகிறதாம்! கருநீலமாக இருக்கக்கூடிய நீலோத்பல (குமுத) மலர்கள், நீல மேனியளான மலைமகள் பரமேசுவரியாகக் கண்களுக்குத் தெரிகின்றனவாம்.

'எங்கள் கோமானும் எங்கள் தாயும் போன்றிலங்கும் பொய்கை' என்கிறார் மாணிக்கவாசகர்.

அதேபோல்தான், அம்பாளையும் ஐயனையும் பிரிக்க முடியாது என்கிற தன்மையைச் சொல்வதற்காக வந்த ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம திருநாமம்தான் **மஹா காமேச நயன குமுத ஆஹ்லாத கௌமுதி.**

சாதாரணமாக சிவபெருமானின் கண்களைத் தாமரை என்றும், அம்பாளுடைய நயனங்களைக் குமுதமலர் என்றும் வர்ணிப்பதே வழக்கம் என்பதைப் பார்த்தோம். அப்படிச் சொல்லாமல், இங்கே பரமேசுவரனின் நயனங்களை குமுத நயனங்களாகவும் அம்பாளைச் சந்திரிகையாகவும் சொல்லியிருக்கிறது.

சந்திரிகை வந்தால் குமுதம் மலரும் என்பது ஓர் அர்த்தம். இன்னொரு அர்த்தம் என்ன...? தாமரை அழகுதான். ஆனால், சூரியன் பட்டதும் மலர்வது எனில் அதில் சற்றே வெப்பம் என்கிற தன்மை கலந்து விடுகிறது. ஆனால், குமுத மலரை மலர்விக்கும் சந்திரிகையின் கிரணங்கள் குளிர்ச்சியானவை. துளிக்கூட வெப்பமில்லாத கிரணங்கள். வெப்ப ஸ்வரூபமாக இருக்கக்கூடிய சிவபெருமானின் வெப்பத்தைத் தணித்து, மொத்தமாகப் போக்கடிக்கக் கூடியவள் அம்பிகை; முழுக்க முழுக்க முழுக்க குளிர்ச்சியைத் தந்து மாற்றக்கூடியவள். அழிக்கவல்ல அவருடைய நெற்றிக் கண்ணின் அக்னியைக்கூட ஒன்றுமில்லாமல் செய்யக்கூடியவள். அந்த நெற்றிக் கண்ணையே குமுத நயனமாக மாற்றக்கூடியவள் **மஹா காமேச நயன குமுத ஆஹ்லாத கௌமுதி!**

**அழகு! ஒரு வார்த்தையால் இறைவனை பொருந்தாது என்று ஆகிவிடாது.**

(வளரும்)

வண்ணப்படம்:
**ஸ்ரீ சிவகாமி அம்மன் (ஸ்ரீவைகுண்டம்)**

ச.ந.கண்ணன்





# குட் கான்டெக்ட்

கும்ப்ளே எப்போது ரிடையர் ஆவார் என்றுதான் இத்தனை நாளாக பலரும் விருப்பப்பட்டார்கள். ஆனால், தோள்பட்டை காயங்கள் காரணமாகவும், டெல்லி டெஸ்டில் உண்டான விரல் காயத்தாலும் ஓய்வெடுப்பதாக கும்ப்ளே அறிவித்தபோது கிலி ஏற்பட்டது என்னவோ உண்மைதான். இனிமேல் இன்னொரு கும்ப்ளே கிடைப்பது சாத்தியமா?

70 - 80களில் இந்திய அணிக்கு மிகச் சக்தி வாய்ந்த ஸ்பின்னர்கள் கிடைத்தார்கள். ஆனால், லஷ்மண் சிவராமகிருஷ்ணன், ஹிர்வானி ஆகியோர் ஆரம்பித்த வேகத்தில் சுருண்டுபோனபோது இந்திய அணியில் ஒரு தேக்கம் நிலவியது. மே.இ. தீவுக்கு எப்படி வேகப்பந்து வீச்சாளர்கள் பலமோ அதுபோல இந்தியாவுக்கு ஸ்பின்னர்கள் பெரும் பலம். ஸ்பின்னர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் இந்திய மண்ணில் வெற்றி பெறுவது மிகக் கடினம். அப்படியொரு இக்கட்டான தருணத்தில்தான் அனில் கும்ப்ளே கிடைத்தார்.

கிரிக்கெட்டில் ஸ்பின்னராக இருப்பதை விடவும் பாவப்பட்ட ஒன்று எதுவும் கிடையாது. பதினொன்றாவதாக ஆட வருகிறவர்கள்கூட ஸ்பின்னரைப் பதம் பார்க்கத் துடிப்பார்கள். இந்தியாவைத் தவிர வேறு எங்கு சென்றாலும் ஸ்பின்னுக்கு உகந்த பிட்ச்கள் கிடைக்காது. ஆனால், இவை எதுவும் அனில் கும்ப்ளேவுக்குத் தடைக்கற்களாக இருந்தது இல்லை. என்னால் முடியும் என்கிற அவரது அடிப்படை குணமே அவரை வெகு உயரத்துக்கு அழைத்துச் சென்றது.

132 டெஸ்ட் போட்டிகளில் 619 விக்கெட்டுகளைப் பெற்றுள்ளார் அவர். கடந்த பதினெட்டு ஆண்டுகளில், 43 டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியின் வெற்றிக்கு கும்ப்ளேவின் பங்களிப்பு உதவியுள்ளது. இன்னும் சொல்லப் போனால் கும்ப்ளே சோபிக்காத பெரும்பாலான ஆட்டங்களில் இந்திய அணி தோல்வி அடைந்திருக்கிறது. இந்த வெற்றி சதவிகிதம், வேறு எந்த இந்தியப் பந்துவீச்சாளருக்கும் கிடையாது.

'கும்ப்ளேவுக்கு எதிராக ஆடியதை எங்களுடைய எல்லா வீரர்களும் பெருமையாகக் கருதுகிறார்கள்' என்று பாண்டிங் கும்ப்ளேவுக்கு வாழ்த்து சொல்லியிருக்கிறார். யாராலும் மறுக்க முடியாத ஒன்றாக இருந்தது, கும்ப்ளேவின் போராடும் குணம்.

தெருச்சண்டைபோல கிரிக்கெட் மைதானத்திலும் பல அத்துமீறல்

களை நாம் பார்த்து வருகிறோம். ஆனால் மோசமான நடத்தைக்காக ஒருமுறைகூட மேட்ச் ரெஃப்ரி முன்பு நிற்காதவர் கும்ப்ளே. கேப்டனான பின்புதான் ஸ்ரீசாந்த், ஹர்பஜன் சிங் போன்றவர்களின் மோசமான நடத்தைக்காக முதல்முறையாக மேட்ச் ரெஃப்ரியை நேரில் சந்தித்தார் அவர். சிட்னி டெஸ்டில் ரத்தக்களறி எதுவும் நேராமல் இருந்ததற்கு கும்ப்ளே காண்பித்த பொறுமையும் பக்குவமுமே காரணம்.

# கும்ப்ளே!




'என்னால் முடியவில்லை. பல காலமாகவே என் உடல் நான் சொன்னபடி கேட்பதில்லை. நானும் எத்தனையோ பெயின் கில்லர் மாத்திரைகளை உபயோகப்படுத்திவிட்டேன். இறுதியில் இதற்கு மேலும் என்னால் உடலோடு போராட முடியாது என்று தெரிந்துவிட்டது' என்று தன் ஓய்வு அறிவிப்புக்கான காரணத்தைக் கூறியிருக்கிறார் கும்ப்ளே. சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டாலும் தொடர்ந்து ஐ.பி.எல். ஆட்டங்களில் ஆடுவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

கும்ப்ளே நட்டநடு வீதியில் இந்திய அணியை விட்டுச் செல்லவில்லை. தோனி முதிர்ச்சி அடையும்வரை டெஸ்ட் கேப்டன் பதவி அவருக்குத் தரப்பட வேண்டாம் என்கிற நெருக்கடி நிலையின்போது, இந்திய அணிக்குத் தலைமை தாங்கினார் கும்ப்ளே. நினைத்ததுபோலவே இன்று தோனி டெஸ்ட் போட்டியில் பக்குவப்பட்டு விட்டார். அதேபோல கும்ப்ளே இல்லாவிட்டாலும் அமித் மிஸ்ரா, பியூஷ் சாவ்லா ஆகிய இருவரும் கும்ப்ளேவின் இடத்தைப் பூர்த்தி செய்வார்கள் என்கிற நம்பிக்கை இப்போது எழுந்துள்ளது. தன் விலகல் முடிவால் அணிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாமல் சரியான தருணத்தில் கிரிக்கெட்டிலிருந்து விலகியிருக்கிறார். ○



ரோமன் கத்தோலிக்க பாதிரியாரான பிரான்காய்ஸ் க்யாடியர் எழுதிய துணிச்சல்மிக்க கட்டுரையின் தமிழ் வடிவம். இதில் இடம்பெறும் துவேஷம் மிக்க சில வாக்கியங்களை, பிரச்னையின் தீவிரம் உணர்த்த மட்டுமே வெளியிடுகிறோம். வாசகர்கள் உணர்ச்சி வசப்படாமல் ஆரோக்கியமான ஆலோசனைகள் அளிக்க அழைக்கப்படுகிறார்கள்.

# ஹிந்துக்களின் கொந்தளிப்பு ஏன்?

**- ப்ரான்காய்ஸ் க்யாடியர்**

சிறிய வயதிலேயே, ஆசியாவுக்குச் சென்று மதபோதகராகி முடிந்த அளவுக்கு மதமாற்ற சேவை செய்யவேண்டும் என்னும் ஆசை எனக்குள் துளிர்த்தது. 'ஹிந்துக்களின் கடவுளர்கள் எல்லாம் பொய்யானவர்கள். மதமாற்றம் செய்து நிலைமையைச் சீர் செய்ய வேண்டும்' என்றும் பாதிரிமார்களால் போதிக்கப்பட்டேன்.

இந்தியா வந்த சில நாட்களிலேயே ஹிந்துக்கள் ஒன்றும் கண்மூடித்தனமானவர்கள் இல்லையென்று தெரிந்து கொண்டேன்... எத்தனை எத்தனை கடவுளர்கள் - அவர்களின் அவதாரங்கள், உருவங்கள்! எத்தனையோ பிரிவுகள் இருந்தும், அவர்களின் ஒற்றுமை எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. மேலும் உலகின் பல்வேறு பகுதிகளில் ஒடுக்கப்பட்டு வந்த சிறுபான்மைப் பிரிவைச் சேர்ந்த சிரியன் கிறித்துவர்கள், பார்ஸிக்கள், ஜூக்கள், ஆர்மீனியர்கள், திபெத்தியர்கள் இவர்களுக்கெல்லாம் தேவைப்படும்போது அடைக்கலம் கொடுக்கவும் அவர்கள் தயங்கியதேயில்லை என்றும் தெரிந்தது.

இந்து - கிறித்துவ உறவுகள் குறித்து இந்திய மீடியாவின் பாரபட்சமான பார்வை எனக்கு அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது! மன்மோகன்சிங், சோனியா காந்தி உட்பட, அரசியல் தலைவர்களும் ஹிந்துக்களுக்கு எதிரான வன்முறையைத் தட்டிக் கேட்டு வன்மையாகக் கண்டிப்பதில்லை.

ஆனால், மதமாற்ற மோசடிகளை எதிர்த்து ஹிந்துக்கள் கிளர்ச்சி செய்கிறபோது அரசு உடனே விழித்துக்கொண்டு கண்டன அறிக்கைகள் வீசுகிறது. மதமாற்றத்தை எதிர்த்துப் பணியாற்றும் சுவாமிஜி கொலை செய்யப்படுகிறபோது ஹிந்துக்கள் பொங்கி எழுந்தால், அது மட்டும் அரசுக்குத் தப்பாகப்படுகிறது. 'ஹிந்து தீவிரவாதிகள்' உடனே கண்டனத்துக்கும் நடவடிக்கைக்கும் உள்ளாகிறார்கள்!

இந்திய ஊடகங்களோ அயல்நாட்டு





தூதரகங்களோ ஏன் கர்நாடகாவில் இந்துக்களை எது சீண்டியது? ஏன் அவர்கள் ஆத்திரப்பட்டார்கள் என்பதை வெளிச்சம் போடவில்லை? ந்யூ லைஃப் வாய்ஸ் (www.newlifevoice.org) என்னும் மதமாற்ற கிறித்துவ அமைப்பு ஒன்று மங்களூரில் செயல்படுகிறது. பில்லியன் கணக்கில் டாலர் நிதி உதவிகள் மேற்கத்திய நாடுகளிலிருந்து இங்கு கொட்டப்படுகின்றன! மங்களூர் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள கடை விதிகளில், பஸ் ஸ்டாண்டுகளில் இருக்கும் ஏழைகளை வசப்படுத்தி அவர்களை சர்ச்சுகளுக்கு அழைத்துச் சென்று பாதிரியாரிடம் அறிமுகப்படுத்துகிறார்கள். உடனே அவர்களுக்கு தலைக்கு 2500 ரூபாய் அளிக்கப்படுகிறது. அதன்பின் தமிழ்நாட்டிலிருக்கும் புனித வேளாங்கண்ணி ஆலயத்துக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். மேலும் 3000 ரூபாய் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அதன்பின் அவர்கள் கிறித்துவர்களாக மதமாற்றம் செய்யப்பட்டு அவர்களின் பெயர்கள் மாற்றப்படுகின்றன. கடைசியில், இதற்கு ரூபாய் 10,000 முதல் சன்மானம் அளிக்கப்படுகிறது.

ந்யூ லைஃப் அவர்களுக்கு அதன்பின் ஹிந்து சின்னங்களையும் பண்பாடுகளையும் துறக்கும்படி உத்தரவுகளைப் பிறப்பிக்க ஆரம்பித்துவிடும்.

எல்லாவற்றுக்கும் ஒரு படி மேலே போய், 'சத்யதர்ஷினி' என்ற ஒரு புத்தகத்தை இவ்வமைப்பு கன்னடத்தில் வெளியிட்டு, அதைத் தீவிரமாக விநியோகித்ததுதான் இந்துக்களை ஆத்திரப்படுத்தியது.

அந்தப் புத்தகத்தில் உள்ள வசனங்களில் சில...

★ விஷ்ணுவின் மகள் ஊர்வசி ஒரு விலைமாது. அவளுடைய மகன்தான் வசிஷ்டன். அவன் தன் தாயையே மணம் முடித்தவன். இப்படிப்பட்ட வசிஷ்டன்தான் இந்துக் கடவுளாகிய இராமனின் குரு. (பக்கம் 48)

★ க்ருஷ்ணர் ஒரு கீழ்த்தரமான நபர். அவரே நரகத்தில் உழலும்போது தன்னை நம்பியவரை எப்படி கரைசேர்க்க முடியும்? இவரை வழிபடும் முட்டாள்களை

விந்து மதமாற்றம் செய்வது நம் கடமை. (பக்கம் 50)

★ சீதையைக் கடத்திச் சென்றது பிரம்மா. இப்படிப்பட்ட ஆசைகளுக்கு அடிமைகளான சிவன், விஷ்ணு, பிரம்மா போன்றவர்களைக் கடவுளர்கள் என்று அழைப்பது நகைப்புக்கு இடமாக இருக்கிறது. இது மகா பாவம். (பக்கம் 39)

★ கடவுளே! தயவுசெய்து பாவிகளான இந்தியர்களை, இத்தகைய கேவலமான உறவுகள் வைத்துள்ள கடவுளர்களிடமிருந்து விடுவியுங்கள்! (பக்கம் 39)

இத்தகைய பிரசாரங்களை 4000க்கு மேற்பட்ட மதமாற்ற மிஷனரிகள் நாடு முழுவதும், தங்கள் முழு நேரப் பணியாகச் செயல்படுத்தி வருகின்றன. இந்தியாவிலுள்ள ஹிந்துக்கள் ஆத்திரமடையாமல் எப்படி அமைதியாக இருப்பார்கள்? அமைதியையும் ஒருமைப்பாட்டையும் குலைக்கும் குற்றத்தை இந்த மத மாற்ற அமைப்புகள் செய்து வருவதாக ஏன் அரசுக்குத் தோன்றுவதில்லை?

இந்திய ஜனத்தொகையில் இரண்டு சதவிகிதத்தினரே கிறித்துவர்கள் என்று சொல்லப்படுவது உண்மையாக இருக்கமுடியாது. சுனாமிக்குப் பிறகு நிகழ்ந்துள்ள மத மாற்றங்களால் மட்டுமே இது 10 சதவிகிதமாக உயர்ந்திருக்கும் என்பது என் கணிப்பு.

★ பிரான்காய்ஸ் க்யாடியர்



**இந்திய ஜனத்தொகையில், சுனாமிக்குப் பிறகு நிகழ்ந்துள்ள மதமாற்றத்தால் மட்டுமே கிறித்துவர்களின் எண்ணிக்கை 10 சதவீதம் உயர்ந்திருக்கும் என்பது என் கணிப்பு.**

பெரும்பான்மையினரான இந்துக்கள் 800 கோடி பேர் இந்தியாவில் இருக்கிறார்கள். அவர்களுக்கு மூளைத்திறன், பணம் மற்றும் அதிகாரங்கள் இருக்கின்றன. ஆனால் இவர்கள் சிறுபான்மையினருக்காக எதையும் செய்ய முன்வருவதில்லை. சிறுபான்மையினர் பயத்தினாலும், ஆங்கிலேயர் ஊட்டிய தாழ்வுமனப்பான்மையினாலும், அரசியல் சந்தர்ப்பவாதத்தினாலும், ஒடுக்கப்பட்டே இருந்து வருகிறார்கள். இந்தச் சூழலைத்தான் மதமாற்ற அமைப்புகள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்கின்றன. மைனாரிடி அரசியலை கைக்கொள்ளும் அரசியல் வாதிகள் குளிர்காய்கிறார்கள்!

இந்துக்களின் ஆன்மிக அறிவுதான் வழி வழியாக அவர்களுக்கு ஊட்டப்பட்டிருக்கும் சொத்து. அந்த ஆதார கருத்திக்கு எதிராக கிறித்தவ, அமெரிக்க, மார்க்ஸிஸ மற்றும் இஸ்லாமிய சக்திகள் எழுப்பியுள்ள கடுமையான எதிர்ப்பு அலைகளைச் சந்தித்தேயாக வேண்டிய கட்டாயத்தில் அவர்கள் இருக்கிறார்கள். அமைதியாகவும் அழுத்தமாகவும் அர்த்தமுள்ள வகைகளிலும் அவர்கள் செயல்பட வேண்டிய காலகட்டம் இது.

நன்றி : **இந்தியன் எக்ஸ்பிரஸ்**

தமிழ் வடிவம் : **சரா**

● **டி.செல்வன், நெல்லையப்பபுரம்**

*? இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில் தமிழகத்தில் எந்தத் தலைவரின் அணுகுமுறை சரி?*

! இலங்கைத் தமிழர்களுக்கு உதவுவது சரி; விடுதலைப்புலிகளை ஆதரிப்பது சரியல்ல என்ற ஜெ.வின் அணுகுமுறை ஸ்டன்ட் அல்ல; சரியான ஸ்டான்ட்!

● **ஆர். ராஜதுரை, சீர்காழி**

*? கர்நாடக முதல்வர் யெதியூரப்பா, கும்பகோணம் பகுதியிலுள்ள கோயில்களில் தரிசனம் செய்து வழிபாட்டுள்ளாரே?*

! ''நல்ல மழை பெய்து, காவிரி நீர் பங்கீடு பிரச்னை உருவாகாமல் காப்பாற்று'' என்று ஒருவேளை வேண்டிக் கொண்டாரோ என்னவோ! ஆனால், ''மழை பொய்த்தாலும், இருக்கிற நீரில் தமிழகத்துக்கு உரிமையானதை, சட்டரீதியாகவும் தர்ம நியாயத்துக்குட்பட்டும் அனுப்பித் தரும் துணிவைக் கொடு'' என்று நிச்சயமாக வேண்டியிருக்க மாட்டார்!

* செய்யாத பிரார்த்தனை!



# யெதியூரப்பா கும்பகோணத்து கோயில்களுக்கு வந்துள்ளாரே?



* அலைபாயும் அயலுறவு!

● **ஆர். மாதவராமன், கிருஷ்ணகிரி**

*? மதுரையைப் பதற்றமான பகுதியாக அறிவிக்க வேண்டும் என்கிறாரே சுப்ரமணியம் சுவாமி?*

! சு.சுவாமி என்ன, மதுரைவாசிகளிலேயே பெரும்பாலோர் அப்படித்தான் எண்ணுகிறார்கள். இவ்விஷயத்தில் ஒரு கருத்துக் கணிப்பு நடத்தினால், அதில் பங்கேற்கக் கூடத் தயங்குவார்கள்!

● **க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்**

*? இந்தியாவிலேயே தமிழகம்தான் மின்வெட்டு குறைவாக உள்ள மாநிலம் என்று மு.க.ஸ்டாலின் சொல்வது*

சரியா?

! எரிகிற கொள்ளியிலே சிறியதென்ன, பெரியதென்ன! எது சுட்டாலும் எரிச்சல் தான்; புண்தான். நிற்க, இங்கு மின்வெட்டு குறைவாக இருக்கலாம். ஆனால், மின் உற்பத்தியில் நம்மை முந்திக்கொண்ட மாநிலங்கள் உள்ளனவே!

● **லெ.நா.சிவகுமார், சென்னை - 33**

**? ''பாகிஸ்தான் நினைத்துக்கொண்டிருப்பதுபோல, அந்நாட்டுக்கு இந்தியாவால் அச்சுறுத்தல் ஏற்படப் போவதில்லை. பயங்கரவாதிகளிடமிருந்துதான் ஆபத்து காத்திருக்கிறது'' என்று ஒபாமா எச்சரித்துள்ளாரே?**

! நூற்றுக்கு நூறு சரியான கருத்து. அமெரிக்க அதிபர் ஆன பிறகும் மறக்கக் கூடாத கருத்து. பாகிஸ்தானை நல்வழிப்படுத்த அடித்தளமாக அமைய வேண்டிய கருத்து.

● **கே.எஸ்.கோவர்த்தனன், சென்னை - 42**


* நூற்றுக்கு நூறு!

**? ரேஷன் கடைகளில், பாக்கெட்டில் அடைத்து விற்கும் பொருள்களின் உறையில் முதல்வர் படத்தைப் போட்டு விளம்பரப்படுத்த வேண்டுமா?**

! பள்ளி மாணவிகளுக்குத் தரும் இலவச சானிடரி நாப்கின் உறைகளின்மேல் படம் போடாமலிருந்தால் சரி, சந்தோஷம்! போட்டால் வியப்பதற்கில்லை என்னும் அளவுக்கு இன்றைய அரசியல் தரம் தாழ்ந்து போயிருக்கிறது!

● **வி.விஜய், சென்னை - 4**

**? சமீபத்தில் கன்னடம், தெலுங்கு - இரண்டு மொழிகளையும் செம்மொழியாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனால் பொது மக்களுக்கு ஏதாவது பயன் உண்டா? சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்குப் பெருமை சேருமா?**


* மதுரைக்கு மட்டும்


* ஆசை நிறைவேற...!


* சரியான ஸ்டான்ட்!

! பொதுமக்களுக்கு ஒரு பயனும் கிடையாது. ஆனால், மாநில அரசுகளுக்கு 'எங்கள் ஆட்சியில்தான் இது நடந்தது' என்று பெருமையடித்துக் கொள்ள வாய்ப்பு; மத்திய அரசுக்கோ தமிழைச் செம்மொழி ஆக்கிவிட்டு மற்ற இரண்டையும் புறக்கணித்ததாக அவப் பெயர் ஏற்படாத பாதுகாப்பு!

● **என். சுப்பிரமணியன், ரவணசமுத்திரம்**

**? வைகோவை ஜெயலலிதா கைது செய்ததற்கும் கலைஞர் கைது செய்ததற்கும் வித்தியாசம் என்ன?**

! அது பொடா சட்டம்; இது சாதா சட்டம். அப்போது கலைஞர், வைகோ சிறைப்பட்டதைத் தமக்கு அரசியல் ஆதாயம் ஆக்கிக் கொண்டார். தற்போது ஜெ. அந்த தந்திரத்தைக் கையாள முடியாதவராக இருக்கிறார்.

● **க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி**

**? முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பாதுகாப்பில் தமிழக காவல்துறை அலட்சியம் காட்டுவது பற்றி...?**

! அதனால் அவருக்கு எவ்வளவு தூரம் அர

☐ ரூ.100/- பரிசு பெறுபவர்:
**ஆர்.ராஜதுரை, சீர்காழி**



* குறைந்த கம்பீரம்!



* இதிகாச பலம்



* நொண்டிச் சமாதானம்!

ியல் ஆதாயம் பெருகும் என்பதை உணர்ந்தாவது முதல்வர் அதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்; நடக்கக் கூடாதது ஏதேனும் நடந்தால் மீளாப் பழியும் வந்து சேரும் என்பதால் கவனம் இரட்டிப்பாக இருத்தல் வேண்டும்.

● **என்.காளிதாஸ், சிதம்பரம்**

***? கம்பீர், லக்ஷ்மண் இரட்டைச் சதம் பற்றி...?***

! லக்ஷ்மண், இதிகாச லக்ஷ்மணனைப் போல் எப்போதும் பக்க பலம். ஆனால் கம்பீருக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனை (ஒரு டெஸ்ட் தடை உத்தரவு) அவரது சாதனையின் கம்பீரத்தைக் குறைத்து விட்டதே!

● **மல்லிகா அன்பழகன், சென்னை - 78**

***? ''சீமான், அமீர் பெயர்கள் வரலாற்றில் பொன் எழுத்தில் பொறிக்கப்படும்; அந்த வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லையே!'' என்று பாரதிராஜா வருத்தப்படுகிறாரே?***

! இப்போதும் ஒன்றும் தாமதமாகிவிடவில்லை. அவர்களைப் போல் தேச துரோக வசனம் பேசினால் போதுமே...!

● **எஸ்.பக்கிரிசாமி, திருவாரூர்**

***? ''மீன் பிடிக்க கடலுக்குள் செல்லும் மீனவர்கள், கடல் எல்லைகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அவர்களைச் சட்டரீதியாக தண்டிக்க முடியாது எனில் நிலைமையை எப்படிச் சமாளிப்பது?'' என்று ராஜபட்சய கேட்டிருக்கிறாரே?***

! அண்டை நாடுகளிடையே சுமுகமான நட்புறவு இருந்தால் இது ஒரு பெரிய பிரச்னையாக உருவெடுக்கவே செய்யாது. இந்தியா - இலங்கை உறவோ, விடுதலைப் புலிகள் காரணமாக மிகப் பெரிய சிக்கலாகியுள்ளது. அதனால்தான் மீனவர்கள் ரொம்பவும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதும் எல்லைகளை உணர்த்துவதும் அப்படி ஒன்றும் கஷ்டமான காரியமில்லை. அரசின் மெத்தனம்தான் பெரிய கஷ்டம்.

● **கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு**

***? நெல்லை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இரு கார்களுக்கு ஒரே எண்ணை (டி.என்.72 ஏபி999) வழங்கியுள்ளது அபத்தத்தின் உச்சம் அல்லவா?***

! அலட்சியத்தின் உச்சம்!

● **கு.அருணாசலம், தென்காசி**

***? இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் எழுப்ப, தமிழகத்தில் அச்சம் - அச்சுறுத்தல் - கட்டுப்பாடு நிலை உருவாகியுள்ளது பற்றி?***

! இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க இங்கு எந்தவிதமான அச்சமோ அச்சுறுத்தலோ கிடையாது. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதற்குத்தான் மிக நியாயமான கட்டுப்பாடு உள்ளது.

● **வி.சிவசங்கர், கள்ளக்குறிச்சி**

***? ஆத்திகர்களிடம் பிடிக்காத விஷயம், நாத்திகர்களிடம் பிடித்த விஷயம் எது?***

! 1) சிலர் தாங்கள் ஆத்திகர்களாக இருப்பதே ஒரு மிகப் பெரிய தகுதி என்று கொள்கிற அகம்பாவம்.

2) அவர்களுள் பலர் கடவுளை மறுத்தாலும் மனிதநேயத்தைப் போற்றி கடைப்பிடிக்கும் பாங்கு. ○

★ ரூ.50/- பரிசு பெறுபவர்:
**வி.விஜய், சென்னை - 4**

# இயக்குநர் சிம்புதேவன் 16

## என்னை இயக்கிய ஹீரோக்கள்

சினிமாவில் உதவி இயக்குநராக இருந்துவிட்டு, தனியாகப் படம் பண்ண முற்படும் காலம் மிக மிகக் கடினமானது. கிட்டத்தட்ட அந்த நிலை - வெறும் கையால் அனகோண்டா பிடிக்கச் செல்வதற்குச் சமம்! சினிமா கம்பெனி இருக்கும் தெருமுனையில் உள்ள டீ கடைக்காரர் தொடங்கி வாட்ச்மேன், பேப்பர் போடுபவன், ஆஃபீஸ் பாய், ரிசப்ஷனிஸ்ட், புரொடக்ஷன் மேனேஜர், கேஷியர், புரொட்யூஸரின் ஒண்ணுவிட்ட சித்தப்பா மகன் (U.S.ல் கோர்ஸ் முடித்தவர்)... ஏன் சமயத்தில் அந்த ஏரியா கவுன்ஸிலர் அல்லது அருகாமையிலுள்ள போலீஸ் ஸ்டேஷன்காரர்கள் இவர்களில் யார் வேண்டுமானாலும் நம்மிடம் கதை கேட்டோ கேட்காமலோ திருப்பி அனுப்பலாம். நாமும் எந்த நிமிடத்திலும் ஒர்க் அவுட் ஆகும் என்ற நம்பிக்கையோடு கிட்னிகள் புடைக்க கதை சொல்லத் தயாராக இருக்க வேண்டும். கதை சொல்லும்போது எதிராளிகள் தூங்கிவிட்டால்கூட அவர்களுக்கே தெரியாமல் அவர்களை எழுப்பி, கதையை ஃபாலோ பண்ணவைக்கும் வித்தை தெரிய வேண்டும். (இன்னொரு விதத்தில் பார்த்தால் ஒரு புது இயக்குநரை நம்பி ஒருவர் கோடிக்கணக்கில் பணம் முதலீடு செய்கிறார் என்றால், அதுவும் வெறுங்கை அனகோண்டா வேட்டைதான்.)

பல கம்பெனிகளுக்குச் சென்று வந்த பின், முதன்முதலாக இயக்குநர் ஷங்கரின் 'S பிக்சர்ஸ்' அலுவலகத்துக்குச் சென்றேன். அதிசயமாய் அந்த வாட்ச்மேன் நல்லவர். 'என்ன விஷயம்?' என்றார். சொன்னதும் ஏற இறங்கப் பார்த்துவிட்டு அரை மனசோடு, 'உள்ள போங்க' என்றார். ரிசப்ஷனில் புரொடக்ஷன் எக்ஸிகியூட்டிவ் பாலாஜி இருந்தார். "நான் சேரனின் உதவியாளர். டைரக்டர் ஷங்கரிடம் கதை சொல்ல வேண்டும்" என்றேன். "நாளைக்கு ஈவினிங் நானே உங்களைக் கூப்பிடுகிறேன்" என்றார். இது மாதிரி எத்தனை பூ சுத்தல்களைப் பார்த்திருப்போம். நமக்கேவா?... சரி அடுத்த

## முதல்வன்

கம்பெனியைப் பார்ப்போம் என நினைத்துக்கொண்டேன். அதை மறந்தும் விட்டேன். மறுநாள் மாலை ஃபோன்... நாளை மறுநாள் டைரக்டர் ஷங்கர் உங்ககிட்ட கதை கேட்கப் போறார் என்று. எனது ஏரியாவே குஜராத் பூகம்பம் மாதிரி வந்து இடிந்துவிட்டதைப் போல் உணர்ந்தேன். நம்பவே முடியவில்லை. சொன்னபடி அப்பாயிண்மெண்ட் கிடைத்துவிட்டதை!

தி.நகர் கிருஷ்ணா தெருவிலுள்ள ஷங்கர் சார் வீட்டு மொட்டைமாடியில் வைத்து கதை சொன்னேன். ஷங்கர் சார் மாதிரி கதை கேட்கும் ஒருவரை நான் பார்த்ததே இல்லை. அடிப்படையில் இயக்குநர் என்பதால் கதையோடு ஒன்றிவிடுவார். நல்ல காமெடி என்றால்,



# வளர்த்த புலிகேசி

கைதட்டிப் பலமாகச் சிரிப்பார். நாமேகூட அவ்வளவு உணர்ந்திருக்க மாட்டோம். உற்சாக மிகுதியில் நானும் முதல் கதையைச் சொன்னேன்... சொன்னேன்... கிட்டத்தட்ட மூன்றே முக்கால் மணி நேரம்! எனக்கே வருத்தமாகிவிட்டது. வேறு புரொட்யூசராக இருந்தால், யூனியன் போய் என் மேல் கம்ப்ளெய்ண்ட் பண்ணியிருப்பார்கள். அவர் மிகப் பொறுமையாகக் கேட்டுவிட்டு ஐந்து நிமிடம் யோசித்தார். 'இரண்டு நாள் கழித்து மறுபடி கூப்பிடுகிறேன்' என்றார்.

இரண்டு நாள் கழித்து சந்தித்தபோது, 'நீங்க புதுசா வித்தியாசமா பண்றீங்க. வாழ்த்துக்கள்!' எனத் தொடங்கி அவர் கருத்துக்களை முழுவதுமாகச் சொன்னார். பேச்சு நீண்டு வேறு வேறு பக்கம் போனது. விகடனில் முன்பே வந்த 'புலிகேசி' அரசன் கேரக்டரைச் சொன்னேன். வாய்ப்புக் கிடைத்தால், அதை நல்ல ஹிஸ்டாரிகல் காமெடியாக எடுக்கலாம் என்றேன். ''கதை ரெடியா இருக்கா?'' என்றார். ''இல்லை. ஆனா உடனே பண்ணிடுவேன்!'' என்றேன். ''குட். தாராளமா பண்ணுங்க! எத்தனை நாள் வேணும்?'' என்றார். ''இருபது நாள்'' என்றேன். சம்மதித்தார். இந்த நல்ல வாய்ப்பை விடக்கூடாதென, முழு மூச்சோடு சேலத்தில் என் நண்பர் வரதராஜன் வீட்டில் அமர்ந்து கதையை உருவாக்க ஆரம்பித்தேன்.

இருபத்தைந்து நாள் கழித்து 'இம்சை அரசன் 23ம் புலிகேசி' கதையை ஷங்கரிடம் சொன்னபோது, ஆர்ப்பரித்து மனம்விட்டுச் சிரித்தார். ஓர் இயக்குநரின்

உண்மையான சந்தோஷம் கதை சொல்லும்போது புரொட்யூசரின் ஈடுபாடுதான். 75 பர்சண்ட் கதைகூட ஷங்கர் சாரிடம் சொல்லும்போது 100 பர்சண்டாக மாறிவிடும். கதை சொல்லி முடித்தவுடன், ''ஹீரோ யார்?'' என்றார். ''வடிவேல்'' என்றேன். மறுபடியும் உற்சாகமாகிச் சிரித்து, ''சூப்பர் சூப்பர்!'' என்றார். இப்படி ஒரு புரொட்யூசர் கிடைத்ததற்காக இறைவனுக்கு நன்றி சொன்னேன்.

ஓர் இயக்குநர் புரொட்யூசராகக் கிடைத்ததின் பலனை, பின்னால் உணர ஆரம்பித்தேன். ஸ்க்ரிப்டைப் படித்துவிட்டு ஸீனிலுள்ள காமெடி, அது என்ன உணர்வைத் தருகிறது, திரைக்கதையின் வேகம், காரெக்டர்களின் அத்துமீறல் என ஆராய்ந்து ஒரு பேப்பரில் குறித்து வைத்து என்னிடம் சொன்னார். ''ஓ.கே. என் வேலை முடிஞ்சது. இனி நீங்க நல்லா படத்தை எடுத்து முடிங்க!'' என ஒதுங்கிக்கொண்டார். அதன்பின் எந்த இடத்திலும் அவர் உள்ளே வரவே இல்லை. மரியாதைக்குரியது அந்த நம்பிக்கை. ஷங்கர் சாருக்கும் எனக்கும் நல்ல புரிதல் இருந்தது. இருவருமே தேவையில்லாமல் ஒரு வார்த்தை கூட அதிகமாகப் பேசிக்கொள்ள மாட்டோம். ஆரம்பத்தில் கதை மட்டும்தான் மூன்று மணி நேரம் சொன்னேன். அதன் பிறகு படம் ரிலீஸாகும்வரை இருவருமே பேசிக்கொண்டது மொத்தமாகவே ஒன்றரை மணி நேரம்கூடத் தாண்டாது. புலிகேசிடபுள் பாஸிடிவ் பார்த்துவிட்டு மிகுந்த சந்தோஷப்பட்டு பொக்கேவும், அடுத்த படம் S பிக்சர்ஸுக்கே பண்ண வேண்டும் என அட்வான்ஸும் கொடுத்தார்.

ஒரு புரொட்யூஸராகத் தவிர்த்து தனி மனிதனாகவும் நான் அவரிடமிருந்து கற்றுக்கொண்டது நிறைய. பலருக்குத் தெரியாததும்கூட! அவருடைய மிகப் பெரிய பலம் - திட்டமிடல்! வராண்டாவில் சாவகாசமாக நடக்கிறார் எனில் அதுகூட காலையிலேயே திட்டமிடப்பட்டதாகத்தான் இருக்கும். எதார்த்தமாக வெளியே வந்திருக்க மாட்டார். சீன் பண்ணுவதானாலும் சரி, புரொட்யூசராக பணம் செலவழிப்பதானாலும் சரி, ஒரு செஸ் விளையாட்டு போல் - ஒரு வழக்கறிஞரின் லாகவத்தோடு எல்லா கோணங்களையும் ஆராய்ந்து, அது அடுத்தடுத்து என்னவாகும்? எப்படி முடியும்? என இறுதி வரை யோசிப்பார். ஒருபோதும் டென்ஷனாகி யார் மீதும் எரிந்து விழாத நிதானமானவர். மிகப் பெரிய தவறு நிகழ்ந்துவிட்டால்...



வழக்கத்தைவிட அமைதியாகி விடுவார். பிரச்னைகளை - வீடியோ கேம் விளையாடுவதுபோல கூர்மையாகவும் நிதானமாகவும் அணுகுவார்.

இயக்குநர்கள் வேலை கடினம்தான்! அதற்காக சில இயக்குநர்கள் 'டைரக்ட் பண்றதுனா சும்மாவா?' என்கிற ரேஞ்சில் அட்லஸ் மனிதன் தன் தோளில் உலகைச் சுமப்பதுபோல், சதா இரத்த அழுத்தத்தோடு அலுவலகத்திலேயே கிடப்பதைப் பார்த்திருக்கிறேன். சொந்த வாழ்க்கையே இருக்காது! ஷங்கர் சார் அப்படியில்லை. திட்டமிடுதல் இருப்பதால், உழைப்பதற்கேற்ப ஓய்வெடுக்கும் உடல் கவனமும் உடையவர். என்ன பிஸியானாலும் உதவி இயக்குநர்களுடன் மாலை டென்னிஸ் விளையாடுவார். சின்னச் சின்ன

அட! நீங்க புதுசா வித்தியாசமா பண்றீங்க!

விசேஷங்களின் போது எல்லோருக்கும் ட்ரீட் கொடுப்பார். ஒருமுறை அவர் தயாரிப்பில் இரண்டு படம் நடந்துகொண்டிருந்தது. மறுபக்கம் அவருடைய 'சிவாஜி' பட ஷூட்டிங் நடந்துகொண்டு இருந்தது. ''இரவு ஷங்கர் சாரைச் சந்திக்கலாமா?'' என மேனேஜரிடம் கேட்டேன். ''இல்ல சார். இன்னிக்கு அவர் ஃபேமிலியோட சினிமாவுக்குப் போறார்'' என்ற பதிலில் நான் அதிர்ந்து போனேன். போர்க்களம் போன்ற வேலைகளுக்கு மத்தியில் எத்தகைய நிதானம்! இந்நிதானம்தான் அவர் வெற்றிக்கு அடிப்படைக் காரணம் என நான் நம்புகிறேன்.

ஷங்கர் சார் மிகவும் எளிமையானவர். கோடிகளைக் கடந்த போதிலும், துளிகூட கர்வமில்லாதவர். அதனால்தான் அவரால் சாதாரண சினிமா ரசிகனின் மனோநிலையில் எதையும் பார்க்க முடிகிறது. இந்தப் பார்வைதான் மிக முக்கியம். கமர்ஷியல் படங்களை அவர் இயக்கினாலும், தரமான நல்ல சினிமாக்களின் மீது அலாதி ரசனையும் விருப்பமும் கொண்டவர். நல்ல வாய்ப்பு அமையும்போது, அவர் நினைக்கும் உலக தரத்துக்கான நல்ல சினிமாவை இயக்குவார். அந்த வாய்ப்பு விரைவில் அமையவேண்டும் என நானும் விரும்புகிறேன்... காத்திருக்கிறேன்.

'அறை எண் 305-ல் கடவுள்' வெளியாகி மூன்று வாரம் ஆகியிருந்தது. அது புலிகேசி அளவுக்குப் போகாததற்குக் காரணம் நகைச்சுவை கம்மி, கொஞ்சம் சீரியஸ் என்பதில் தொடங்கி, பல காரணங்கள் சொல்லப்பட்டன. ஷங்கர் சாரோ... 'வித்தியாசமா - நமக்குத் திருப்தியா படம் பண்ணிட்டோம். பெரிய டைரக்டர்ஸ், பத்திரிகைகள் எல்லாம் பாராட்டுறாங்க. நம்ம கம்பெனிதானே இப்படி படங்களை எடுக்க முடியும். நாமே இந்த ரிஸ்க் எடுக்கலைனா எப்படி?' என்றார் புன்னகையுடன். நான் நெகிழ்ந்துபோனேன். ஷங்கர் சாரும், 'S' பிக்சர்ஸும் இன்னமும் உயர வேண்டும் என பிரார்த்திக்கிறேன். அங்கிருந்து நிறைய பரிட்சார்த்தமான நல்ல படங்களும் நல்ல இயக்குநர்களும் தமிழுக்கு நிச்சயம் கிடைப்பார்கள்.

**(பேசுவோம்)**

# மனச்சோர்வுக்கு குளுக்கோஸா?

''தலை கிர்ர்ன்னு சுத்துது, கை-காலெல்லாம் முறிக்குது, உடம்பெல்லாம் வெடவெடன்னு வருது, ஒரு பாட்டில் குளுக்கோஸ் ஏத்திக்கிட்டா தேவலாம். ஆறு மாசத்துக்கு முந்திகூட இப்படித்தான் ஒரு பாட்டில் ஏத்திக்கிட்டேன்'' என்று டாக்டரிடம் வந்து நிற்பவர்கள் ஏராளம் பேர். குறிப்பாக, கிராமப்புறங்களில் இருந்துதான் அதிகமானோர் வருகின்றனர். ஆனால், சமீபத்தில் ஒரு பிரபல ஆங்கில நாளேட்டில், ஜப்பான் நாட்டில் அலுவலகப் பணியில் இருக்கும் பலர், மனம் சோர்வடையும்போது பர்மிஷன் போட்டுவிட்டு வந்து, குளுக்கோஸ் ஏற்றிக் கொண்டு, குறிப்பிட்ட நேரத்துக்குப் பிறகு பணியைத் தொடர்கின்றனர் என்ற செய்தி வெளியாகி இருந்தது. மனச்சோர்வுக்கு குளுக்கோஸ் ஏற்றிக்கொண்டால் தீர்வாகுமா? மனநல நிபுணர் டாக்டர் ஆனந்தனிடம் பேசினோம்...

''இந்தச் செய்தி எனக்கு ஆச்சர்யத்தை அளிக்கிறது. ஏனெனில் மற்ற எல்லாத் துறைகளையும் போலவே, ஜப்பானில் ஹெல்த் சிஸ்டம் மிகவும் தரமான அமைப்பு என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

நம் நாட்டில் ஃப்ளூ காய்ச்சல் எனப்படும் வைரஸ் ஜுரம் வந்துவிட்டால், உடனே மக்கள் ஊசி, மாத்திரை, குளுக்கோஸ்... என எடுத்துக் கொள்வதுண்டு. ஆனால், இந்த வகை காய்ச்சல் செல்ஃப் லிமிட்டிங், அதாவது எந்தச் சிகிச்சையும் எடுத்துக் கொள்ளாமல் தானாகவே சரியாகக்கூடியது. மழைக்காலம் வந்தால், இந்தக் காய்ச்சல் ஒரே சமயத்தில் லட்சக்கணக்கான மக்களைப் (Epidemic) பாதிக்கும். அந்தச் சமயத்தில்தான் எல்லாப் பொதுநல மருத்துவர்களின் கல்லாவும் நிரம்பி வழியும். ஆனால், ஜப்பானில் இத்தகைய காய்ச்சலுக்கு மருத்துவர்கள் எந்த விதச் சிகிச்சையும் கொடுப்பதில்லை. ஐந்து நாட்கள் வீட்டில் ஓய்வு எடுத்தால் போதுமானது. காய்ச்சல் அதிகமானால், குளிர்ச்சியான நீரில் பஞ்சை நனைத்து நெற்றியில் வைப்பார்கள் (Tepid Sponging). குழந்தைகளுக்கென்றால், உடல் முழுதும் வைப்பார்கள். அப்படிப்பட்ட தரமான மருத்துவம் இருக்கும் ஜப்பானில், மனச்சோர்வுக்கு, உளைச்



சலுக்கு குளுக்கோஸ் பாட்டில் போட்டுக் கொள்வது ஆச்சர்யம்தான்'' என்றவர், குளுக்கோஸின் குணநலன்கள் குறித்தும் பேசினார்.

''உண்மையில் குளுக்கோஸ் என்பது ஒருவகை கார்போஹைட்ரேட். உடல் சோர்வடையும்போது, அதாவது ஓய்வே இல்லாமல் தொடர்ந்து வேலையில் ஈடுபடும்போது கார்போஹைட்ரேட் எடுத்துக்கொண்டால் உடல் சோர்வு நீங்கும். அந்தக் கார்போஹைட்ரேட் என்பது ஒரு சாக்லேட்டாக இருக்கலாம்; காலையில் வயலுக்குப் போகையில் கிராமங்களில் குடிக்கும் நீராகாரமாகவும் இருக்கலாம். இப்படி வாய் வழியாகச் சாப்பிட முடியாமல் கடுமையான வாந்தி, வயிற்றுப்போக்கு என இருந்தால் மட்டும்தான், குளுக்கோஸை ரத்த நாளங்களின் வழியாகச் செலுத்துவார்கள். சத்துக் குறைவுக்காக குளுக்கோஸ் பாட்டில் ஏற்றுவதென்பது, சில மருத்துவர்கள் பணம் சம்பாதிக்க பண்ணும் வேலை. பத்து பாட்டில் குளுக்கோஸ் ஏற்றினால் கூட, ஒரு தம்ளர் பால் குடித்தால் கிடைக்கும் எனர்ஜி கிடைக்காது. ஏனெனில் பாலில் கார்போஹைட்ரேட் தவிர புரோட்டீன், கொழுப்பு, மினரல் போன்ற சத்துகள் இருக்கின்றன'' என்றவரிடம் எப்போதெல்லாம் குளுக்கோஸ் ஏற்றிக்கொள்ளலாம் என்று கேட்டால்,





டாக்டர் ஆனந்தன்


''வாந்தி, வயிற்றுப்போக்கு இருக்கும்போதும், வாய் வழியாக எதுவும் சாப்பிடக்கூடாது (Nil oral) எனும் போதும் (உதாரணமாக ஆபரேஷனுக்கு முன்னும்/பின்னும், விஷம் உடலில் ஏறியிருந்தால் முதல் 24 மணி நேரத்துக்கு) மட்டும்தான் குளுக்கோஸ் பாட்டிலில் ஏற்றவேண்டும். மற்றபடி குளுக்கோஸ் பாட்டில் ஏற்றிக் கொள்வதால் மனச்சோர்வோ, மனஉளைச்சலோ சரியாகாது. மனச்சோர்வு என்பது மூளையில் serotonin, norepinephrine போன்ற உயர் வேதிப்பொருட்கள் குறைவதால் ஏற்படுவதாகும். இதற்கு மருந்துகளும் உளவியல் ஆலோசனைகளும் தீர்வளிக்கும்'' என்கிறார் மனநல மருத்துவர் ஆனந்தன்.

- மகிமைராஜன்

# அம்பிகையின் அருள் வடிவங்கள்

சிவபெருமானது அருட் கோலங்கள் பலவற்றில் அம்பிகையும் இணைபிரியாது விளங்குவதை நாம் இதுவரை பார்த்து வந்திருக்கிறோம். தட்சிணாமூர்த்தி, பிட்சாடனர் போன்ற தனிக் கோலங்கள் தவிர மற்ற சிவவடிவங்களில் அம்பிகையும் உடன் உறைகிறாள். சோமாஸ்கந்தர், கல்யாண சுந்தரர், உமாமகேஸ்வரர் ஆகிய வடிவங்களில் அம்பிகையையும் சேர்த்துத் தானே தரிசித்தோம்! அம்பிகை மட்டும் தனித்து விளங்கும் கோலங்களும் சில உண்டு. சிவாலயங்களில் பெருமானது கருவறைக்குள்ளேயே 'போகசக்தி' என்ற பெயருடன் அம்பிகையின் திருவுருவம் அந்த நாட்களில் எழுந்தருளுவிக்கப்பட்டதாம். நின்ற கோலத்திலும் அமர்ந்த கோலத்திலுமாக உள்ளன இந்த எழில் வடிவங்கள். அமர்ந்த கோலத்தில் எழுந்தருளுவிக்கப்பட்ட செப்புத் திருமேனிகள் பெரும்பாலும் 'உமா' என்றும், நின்ற கோலத்தில் உள்ள திருவுருவங்கள் 'பார்வதி' என்றும் பெயர்சூட்டப்பட்டு விளங்குவதாக, படிமங்கள் பற்றிய நூல்கள் தெரிவிக்கின்றன.

உமையவள் அமர்ந்த கோலத்தில் விளங்கும் வடிவம் எழிலும், பொலிவும், பெண்மைக்குரிய மென்மையும் சேர்ந்து திகழும் வடிவம். வலதுகாலைக் குத்திட்டு மடித்து, இடதுகாலைத் தொங்கவிட்டவாறு பத்மபீடத்தில் அமர்ந்திருக்கிறாள் அம்பிகை. இப்படி அமரும் கோலத்துக்கு 'உத்குடிகாசனம்' என்று பெயர். இரண்டு திருக்கரங்கள். வலது திருக்கரம் மலரை ஏந்தியபாவத்தில் விளங்கும் கடக முத்திரையுடன் விளங்குகிறது. இடது திருக்கரம், அமர்ந்திருக்கும் பீடத்தில் ஊன்றியிருக்கிறது. தன் உடல்பாரம் முழுவதையும் பீடத்தில் வைத்து அழுத்தாமல் வெகு மென்மையாக, நளினமாக அமர்ந்திருக்கிறாள் அம்பிகை. ஊன்றிய கையும், ஊன்ற எடுத்த பாதமும், ''இதோ வந்துவிட்டேன்!'' என்று எழுந்தே வந்துவிடுவாளோ என்று ஒரு கணம் நம்மை நினைக்க வைக்கிறது. பக்தர்களின் விண்ணப்பங்களைப் பரிவு



# அழகின் வடிவே...அருளின் வடிவே... 16

த.கி.நீலகண்டன்



டன் செவிசாய்ப்பது போல சற்றே தலையை சாய்த்த கோலம். கருணை பொங்கும் திருவதனம். வசீகரப் புன்னகை தாய்மையின் பரிவும் தயையும் பொங்கிப் பொலியும் திருவடிவம்.

அமர்ந்த கோலத்தில் இத்தனை நளினம் என்றால், நின்றகோலத்தில் அவள் ஒய்யாரம் சொல்லில் அடங்காது. 'த்ரிபங்கி' என்று சிற்ப சாஸ்திரத்தில் சிறப்பாகப் பேசப்படும் கோலம் இது. உடலில் மூன்று குழைவுகள் உள்ளதால் 'த்ரிபங்கி' என்று பெயர். (த்ரி : மூன்று; பங்கம் : குழைவு) தலையைச் சற்றே சாய்த்ததில் கழுத்தில் ஒரு குழைவு; ஒல்கி ஒசிந்த இடையில் ஒரு குழைவு; இடையில் இருந்து பாதங்கள் வரை நீண்ட கால்களில் ஒரு குழைவு என மூன்று குழைவுகள் (அல்லது வளைவுகள்). கம்பீரமாகவும் அதே சமயத்தில் ஒயிலாகவும் நின்ற கோலம். நிமிர்ந்த நோக்கு. மலர்ந்த முகம். வழக்கம் போல், மலரை ஏந்திய பாவனையில் விளங்கும் கடக முத்திரையுடன் கூடிய வலது திருக்கரம். ஒயிலாகத் தொங்கும் இடது திருக்கரம். சில வடிவங்களில் அருகில் நிற்கும் தோழிப் பெண்ணின் தலையைப் பரிவுடன் வருடியவாறும் இடதுகரம் விளங்கும். விரல்களின் நளினமும், பாதங்களின் மென்மையும், முகத்தின் களையும், கண்களின் உயிரும், உதட்டில் நிரம்பி வழியும் புன்னகையின் பொலிவும், அங்கங்களின் உயிர்த் துடிப்பும், 'இது சிலையா! அல்லது உயிரோட்டம் நிரம்பிய உண்மை வடிவமா!' என்று பிரமிப்பூட்டும்.

இந்த வடிவங்களில் கலைஞர்களின்

கற்பனைக்கும் கலையார்வத்துக்கும் பஞ்சமே இல்லை. சிகையலங்காரங்களில்தான் எத்தனை வகை!

கரண்ட மகுடம்; கேசமகுடம்; ஜடாமகுடம் என்று விதவிதமான மகுடங்கள். அவற்றில் வகைவகையான ஆபரணங்கள்! காதுகளில் பனை ஓலைத் தோடு முதல், நவமணி இழைத்த தாடங்கங்கள், மகரக் குழைகள்! கழுத்திலும் மார்பிலும் தோள்களிலும் விளங்கும் ஆபரண வகைகள்! இடையில் அணியும் மேகலை, உதரபந்தனம், ஒட்டியாணம்! புஜங்களில் 'வங்கி'கள், கேயூரங்கள், கைகளில் கடகங்கள், வளையல்கள், கை விரல்களில் மோதிரங்கள்; பாதங்களில் சிலம்பு, தண்டை, பாதசரங்கள், கால் விரல்களில் மெட்டிகள் என்று ஒவ்வொரு சிலையிலும் வெவ்வேறு வகையான ஆபரணங்களைப் பூட்டி அழகு பார்த்திருக்கிறார்கள். வகை வகையான ஆபரணங்கள்; ஆனாலும் ஆடம்பரம் என்பதற்குச் சிறிதளவும் இடமே இல்லாத எளிமையுடன் அவை பொலிகின்றன. இடையில் அணிந்த ஆடைகளின் மடிப்பும், பிடறியில் தவழும் கேசபாரத்தின் நுணுக்கங்களும், நேர்த்தியான சிகை அலங்காரங்களும் கலைஞரின் பொறுமைக்கும் சிரத்தைக்கும் சாட்சி சொல்லும்.



பண்டைய தமிழரின் கலைச் சிறப்பைப் பறைசாற்றும் இந்த வடிவங்கள் பரம்பரை பரம்பரையாக மெருகேறி, இன்றளவும் தமிழ்நாட்டுக் கலைஞர்களுக்கு உலகெங்கிலும் புகழ்சேர்த்துக் கொண்டிருக்கின்றன!

(பெருகும்)

# ஆயிரத்தில் ஒருவன் 3

# சிகரம் தொட... சீக்கிரம் யோசி!

'மா.ஃபா' பாண்டியராஜன்

படிக்கும் இளைஞன் வேலை தேடுவது அடுத்த கட்ட முயற்சியாக இருந்தாலும், ஒவ்வொருவரும், தாங்கள் எதுபோல் உருவாக வேண்டும் என்று



✱ சரத்பாபு

முதலிலேயே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். 'நீ எது போல் ஆக விரும்புகிறாயோ அதேபோல ஒரு நாள் மாறிவிட முடியும்' என்கிறார் அமெரிக்க தத்துவ உளவியல் அறிஞர் வில்லியம் ஜேம்ஸ். எண்ணம் போல வாழ்வு என்பது இதுதான். எண்ணம் என்கிற விதையை மனமெனும் நிலத்தில் விதைக்கும்போது, அந்த நிலம் நன்கு பண்பட்டிருக்க வேண்டும். நமது தகுதிக்கு ஏற்றவாறு எண்ணங்கள் இருக்க வேண்டும் என்பது தவறு. நமது உயர்ந்த எண்ணங்களைச் செயல்படுத்தும் வகையில் நமது தகுதிகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். சரி; என்னவாக மாற வேண்டும் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது? எதில் உனக்கு ஈடுபாடு... ஓவியமா? கவிதையா? எதுவாயிருந்தாலும் அதன் சிகரத்தைத் தொட அதற்கான பாதையில் பயணப்படு! துரதிர்ஷ்டவசமாக நமது பெற்றோர்கள், குழந்தைகளைப் பட்டதாரிகள் ஆக்குவதற்கும், பொறியியல் வல்லுனர் ஆக்குவதற்கும் கவனம் செலுத்துகிறார்களே தவிர, அவர்களின் இயற்கையான திறமைகளைக் கண்டறிந்து உற்சாகப்படுத்துவதில்லை. வாழ்க்கையை ஓட்ட பட்டம் பெறுவது சராசரித்தனம். சராசரியாய் ஆவது உங்கள் லட்சியமாக இருக்கக்கூடாது. ஒவ்வொருவரும் சாதிக்கப் பிறந்தவர்கள்தாம். மடிப்பாக்கம் தெருக்களில் வீடு, வீடாக அம்மா செய்து கொடுத்த இட்லியை விற்ற சரத்பாபுவின் வாழ்க்கை



இட்லிக் கடையுடனே முடங்கிப் போயிருக்கும். ஆனால், முன்னேறியே தீர வேண்டும் என்ற லட்சிய வெறிதான் அவனை ஆயிரத்தில் ஒருவனாக்கியது.

சரத்பாபுவின் உடன் பிறந்தவர்கள் நான்கு பேர். அம்மா தீபா ரமணி பத்தாவது வரை படித்தவர். துரதிர்ஷ்டவசமாக குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய முழுப் பொறுப்பும் அந்த அம்மாவின் தோள்களில் விழுந்துவிட்டது. தனது முயற்சியால் காலையில் சத்துணவு ஆயா வேலை. மாலையானால் முதியோர் கல்வித் திட்டத்தில் பாடம் சொல்லிக் கொடுக்கும் வேலையென வருமானத்தைப் பெருக்கிக் கொண்டார். காலையில் வீட்டிலேயே இட்லிக் கடை போட, சரத்பாபு வீடு வீடாகச் சென்று விற்ற பின், அவசர அவசரமாக பள்ளிக்குச் செல்வான். எப்படியோ கஷ்டப்பட்டு ஏழாவது வரை படித்தாகிவிட்டது. கிழிந்துபோன சீருடை, ஷூ என்று தினசரி போட்டுக்கொண்டு செல்லும்போதே சரத்பாபுவுக்கு கண்ணீர் அணை கட்டும். மெட்ரிக்குலேஷன் பள்ளியில் படித்த சரத்பாபு ஒரு கட்டத்தில் பள்ளிக் கட்டணம் கட்ட முடியாத சூழலில் படிப்புக்கு முழுக்கு போட்டான்.

படிப்பில் முதல் மாணவனாக இருந்த சரத்பாபுவை எங்கே காணும் என்று விசாரித்த இரு ஆசிரியர்கள், ''நாங்கள் உனக்காக கட்டணம் செலுத்துகிறோம்'' என்று செய்தி அனுப்பி, அவனது படிப்பைத் தொடர வழிவகுத்தார்கள். பத்தாவது மற்றும் ப்ளஸ் டூவில் மற்றவர் வியக்கும்படியாக, அதிக மதிப்பெண் பெற்றான் சரத்பாபு.

பிலானியில் உள்ள பிர்லா தொழில்நுட்பக் கழகத்தில் அட்மிஷனும், அரசு ஸ்காலர்ஷிப்பும் கிடைத்தது. ஐந்து வருடம் படிப்பை முடித்தபின் சென்னை வந்த சரத்பாபுவுக்கு போலரிஸ் நிறுவனத்தில் கைநிறைய சம்பளத்துடன் வேலை

**நீ**
**எதுபோல் ஆக விரும்புகிறாயோ அதேபோல ஒரு நாள் மாறிவிட முடியும்.**

நம் நாட்டில் டாடா ஸ்டீல் மற்றும் ரிலையன்ஸ் இந்த இரண்டு நிறுவனங்களைத் தவிர, ஸ்டேட் பாங்க், இந்தியன் ஆயில், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம், இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனங்கள் ஆகியவை மிக வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. இவற்றுள் முதல் இரண்டைத் தவிர மற்றவை பொதுத்துறை நிறுவனங்கள். அரசின் ஒட்டுமொத்த ஆதரவுடன் இயங்கும் இத்தும் துறைகளில் ஏகபோகமாக இருப்பது கூடுதல் பலம். ஆக இந்த ஏழு நிறுவனங்களில் மட்டுமே உள்ள வேலை வாய்ப்பு கணிசமானது. பட்டப்படிப்பு, பொறியியல், நிர்வாகமென எல்லா வகையான பட்டதாரிகளுக்கும் வாய்ப்பை வழங்கக் காத்துக் கொண்டிருக்கின்றன இந்த நிறுவனங்கள்.



# பாண்டி'S BLOG

சில மாதங்களுக்கு முன்னர் பேரல் ஒன்றுக்கு 147 டாலர் வரை உயர்ந்த கச்சா எண்ணெயின் விலை 'இன்று அறுபது டாலரளவுக்கு சரசரவென்று வீழ்ச்சியடையக் காரணங்கள் பல உண்டு. நிர்வாக இயலில் கேயாஸ் தியரி என்று பொதுவாகப் பேசப்படுவது உண்டு. பிரேசில் நாட்டுக் காடுகளில் வண்ணத்துப் பூச்சிகள் படபடவென சிறகையடித்துக் கொள்வதற்கும், ஜப்பானில் எரிமலை திடீரென நெருப்பைக் கக்குவதற்கும் புலி நுட்பத் தொடர்பு உண்டு என்பதுதான் கேயாஸ் தியரி சொல்லும் தத்துவம்! இது போல அமெரிக்க நிதி நெருக்கடி கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்து விட்டது! கச்சா எண்ணெய் விலை, டாலர் பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்டது. அமெரிக்கா ஈராக்கைக் கபளீகரம் செய்தது, அதன் எண்ணெய் வளத்துக்காக மட்டுமல்ல; சதாம் யூரோ டாலருக்கு மாறுவோம் என்ற பயமுறுத்தியதாலும்தான். இன்று அமெரிக்க நிறுவனங்கள் பலவற்றுக்கு மூடு விழா நடத்தப்பட்டு, கிட்டத்தட்ட ஒரு லட்சத்து அறுபதாயிரம் பேர் வேலையிழந்து இருக்கிறார்கள். இன்னும் பல நிறுவனங்கள் தள்ளாடிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பிற்போக்கு நிலையால் மக்கள் தங்கள் பெட்ரோல் தேவைகளை சுருக்கிக் கொள்ள, நாட்டின் தேவையும் குறைந்து போனது. இந்தியா, சீனாவைக் காட்டிலும் அதிகமாக பெட்ரோல் உபயோகித்து வந்த அமெரிக்கா, அதில் முப்பது சதவிகிதத்தை இறக்குமதி செய்து வந்தது. இப்போது இறக்குமதி குறையவே பெட்ரோல் உற்பத்தி நாடுகளின் விற்பனையும் குறைந்து, விலை வீழ்ச்சி தவிர்க்கமுடியாமல் போய்விட்டது.

பெட்ரோல் இறக்குமதியை அமெரிக்கா குறைத்துக் கொண்டதால், உலக அளவில் டாலர் புழக்கம் குறைய, டாலர் வர்த்தகம் செய்யும் நாடுகள் அதிக விலை கொடுத்து டாலர் வாங்க வேண்டியிருக்கிறது. 38 ரூபாய் இருந்த ஒரு டாலர் 50 ரூபாயாக உயர இதுதான் காரணம்.

கிடைத்தது. ஆனால் மனத்துக்குள் என்னவோ வேலைக்குச் சென்று முடங்கி விடுவதா என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. அவரது ஆதர்ச வழிகாட்டிகளாக ரிலையன்ஸ் அம்பானியையும், இன்ஃபோஸிஸ் நாராயணமூர்த்தியையும் அல்லவா உருவகப்படுத்தியிருந்தார்! எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டு, மூன்று வருடம் வேலை செய்த சரத் பாபுவுக்கு, தன் கல்வித் தகுதியை மேம் படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஆசை வந்தது. நிர்வாக - தொழில் மேலாண்மை படிக்க, சிறப்பு மிக்க ஐ.ஐ.எம்.மில் நுழைவுத் தேர்வு எழுதினார். நாட்டிலுள்ள ஆறு ஐ.ஐ.எம்.களிலும் அவருக்கு அட்மிஷன் கிடைத்தபோது ஒரு முடிவெடுத்தார் சரத் பாபு...

**(வெளிச்சம் வீசும்)**

எழுத்தாக்கம்: **ஸ்ரீநி**

# சினி சிப்ஸ்!

'பேராண்மை' ஷூட்டிங்குக்காக அமெரிக்க விசா கேட்டிருக்கிறார் படத்தின் இயக்குநர் ஜனநாதன். தீவிரவாதப் பிரச்னை, பொருளாதாரச் சிக்கல் என அமெரிக்கா தத்தளித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் 'விசா' கொடுப்பதில் கெடுபிடி காட்டும் அதிகாரிகள், அதே கெடுபிடியை ஜனநாதனிடம் காட்ட, அவரோ, இந்த ஷூட்டிங் மூலம் ஐந்து அமெரிக்கர்கள் ஒருமாதம் வேலை வாய்ப்பு பெறுவர் என்று ஒரு போடு போட, அதிகாரிகள் அப்பீட். இப்போது பட்சிகள் அமெரிக்காவுக்குப் பறக்கத் தயாராகிவிட்டன.

(கோலிவுட்டா கொக்கா...?)

'கொடைக்கானல்' படத்தில் 'நடிகை' பாத்திரத்தில் நடிக்கும் ஹீரோயின் பூர்ணிமா, குறத்தி வேடத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போது வில்லன்களிடமிருந்து தப்பித்து காட்டுக்குள் சென்று ஒளிந்து கொள்வதுபோல காட்சி. அதற்காக ஒரு வாரம் முழுக்க 'நரிக் குறத்தி' வேடத்தில் கொடைக்கானல் காட்டுக்குள் சுற்றி வந்திருக்கிறார் பூர்ணிமா. அப்போது அவரை மிகவும் பயமுறுத்தியது நரியோ, காடியோ, பூனையோ அல்ல, வெட்டுக்கிளி.

(வெட்டு ஒன்னு, துண்டு ரெண்டா போட்டுருச்சன்னா?)

அப்பா இளையராஜாவைப் போலவே படத் தயாரிப்பு ஆசையும் வந்துவிட்டது யுவன் ஷங்கர் ராஜாவுக்கு. அதற்கென தீவிரமாகக் கதை கேட்டு இரண்டு கதைகளை ஓ.கே செய்திருக்கிறாராம். இரண்டு படத்துக்கும் இசை யுவன்தானாம். இதற்கிடையில் நடிகராகும் ஆசையும் துளிர் விட்டிருக்கிறதாம்.

(ஒரே நேரத்துல மூணு குதிரையில சவாரியா... ஜமாய்ங்க!)

'பூவா தலையா' படத்தில் ஆன்டி ஹீரோவாக நடிக்கும் உதயா, ஹீரோவாக நடிக்கும் படம்தான் 'உன்னைக் கண் தேடுதே'. "என்னோட பல படங்கள் ரிலீசாகமலே பெட்டியிலே முடங்கிக் கிடந்ததுண்டு. அப்போதெல்லாம் எனக்குத் தன்னம்பிக்கை கொடுத்தது நடிகர் விக்ரமின் போராட்டம்தான். 'உன்னைக் கண் தேடுதே' படத்துக்குப் பிறகு இரண்டாவது கதாநாயகனாக நடிக்கக்கூட தயார்" என்கிறார்.

(யாராவது வாய்ப்பு கொடுங்கபா!)

– நியூஸ் பாய்

இந்த இதழிலுள்ள ஹைக்கூ கவிதைகள் : எஸ். ஷங்கரநாராயணன்

எதிர்ப்புறம்: 'உன்னைக் கண் தேடுதே' படத்தில்... மான்யா



Registered with the Registrar of Newspaper of India under No.1041/57 Registered No. TN/CC(S)DN/144/06-08 Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/70/06-08 Registered as a Newspaper in Sri Lanka.

